# இளவேனில்




**கேசி தமிழ் மன்றம்**

இதழ் 24 - ஆடி 2023

Ilavenil - Casey Tamil Manram Inc - ISSN 2200-789X

**இளவேனில்**

இதழ் 24 – ஆடி 2023
© கேசி தமிழ் மன்றம்

**ஆசிரியர் குழு**
விஜி ராம்
சாந்தி சிவகுமார்
தாமரை மதியழகன்
ஜேகே
கேதா
ச. சத்தியன்
சரணியா சத்தியன்

**அட்டைப்பட வடிவமைப்பு**
கிரிஸ்டி நல்லரத்தினம்

**உள் வடிவமைப்பு**
க. பார்த்தீபன்
ச. நிமலன்

---

***Ilavenil***

*Issue 24 – July 2023*
*© Casey Tamil Manram Inc*
*ISSN 2200-789X*

***Editorial Team***
*Viji Ram*
*Shanthi Sivakumar*
*Thamarai Mathiyazhakan*
*JK*
*Ketha*
*Sathiyan S*
*Saranya S*

***Cover Page Design***
*Kristy Nallarathinam*

***Design and Layout***
*Partheepan G*
*Nimalan S*

editor@caseytamilmanram.org.au

**பொருளடக்கம்**


சிறுவர் கதைப்புதிர் .......... 1

ஆசிரியர் தலையங்கம் - குரல் கொடுப்போம் .......... 12

விளையாட்டாப் போச்சு .......... 14

இல்லத்தரசு .......... 20

எங்களை வாழவிடுங்கள் .......... 22

Australian History and the Voice .......... 24

வேகம் கெடுத்தாண்ட .......... 30

முதுமையிலும் இளமையா? .......... 37

இனியும் வரும் வசந்தகாலம் .......... 41

அசாதாரண வாழ்வைக்கொண்ட சாதாரண மனிதரின் வாழ்வு கிருஷ்ணமூர்த்தியுடையது .......... 44

உரிமைக் குரல் .......... 53

மை வண்ணம் .......... 60

Shame, Silence, Grief, Guilt and Self Sacrifice .......... 65

வெற்றிடம் .......... 69

Bridging Shores - Aisha Rahman .......... 74

**சிறுவர் கதைப்புதிர்**

இம்முறை இளவேனில் இதழுக்காக நாம் ஆர்வமுள்ள சிறாரிடம் ஒரு சுவாரசியமான சவால் ஒன்றைக் கொடுத்திருந்தோம். ஒரே கதையை வெவ்வேறு வடிவங்களில் (genre) ஆரம்பித்துக் கொடுத்து அவற்றைப் பூரணப்படுத்தித் தருமாறு கேட்டோம். இந்தக் கதைப்புதிரின் நிபந்தனைகள் இவ்வாறு அமைந்தன.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சிறு கதைப் பந்தியை ஆரம்பமாகக் கொண்டு முழுமையான சிறுகதை ஒன்றை எழுதித்தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிறுகதையை எழுதும்போது சில நுணுக்கங்களைக் கவனத்தில் எடுக்கவும்.

கதையின் எழுத்து வடிவத்தை (genre) மாற்றுதல் கூடாது. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது துப்பறியும் வடிவம் (detective). முழுக்கதையும் இந்த வடிவத்திலேயே அமைதல் வேண்டும்.

கதை இரண்டு பக்கங்களுக்குக் குறையாமலும் நான்கு பக்கங்களை மீறாமலும் பார்த்துக்கொள்ளவும்.

கதைக்குரிய சிறந்த தலைப்பு ஒன்றையும் தெரிவு செய்யவும்.

கதை ஒரு முடிவை(climax) நோக்கி நகர்ந்து செல்லுதல் வேண்டும்.

கதையின் போக்கிற்குத் தேவைப்படின் புதிதாகப் பாத்திரங்களை அறிமுகப்படுத்தலாம்.

உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கதைப் பகுதியில் முழுக்கதைக்கும் தேவையான முன்னறிவிப்புகள் (foreshadowing) உள்ளன. அவற்றைக் கண்டறிந்து பயன்படுத்தலாம். தேவையென்றால் கொடுக்கப்பட்டக் கதைப் பகுதியில் சிறிது திருத்தங்களையும் நீங்கள் செய்யலாம்.

ஆழ்ந்து அனுபவித்து ஒரு சிறந்த கதையாக இதனை முழுமைப்படுத்தித் தருவீர்கள் என்று நம்புகிறோம்.

இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆசிரியர் குழுவினைத் தொடர்பு கொள்ளவும்.

சற்றுச்சிரமமான இச்சவாலைச் சிறுவர்கள் உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டனர். கதைகள் வேறு வேறானவைபோலத் தோன்றினாலும் ஆதாரக் கரு ஒன்று என்பதை வாசகர்கள் அறிந்துகொள்வர். அவற்றைத் தமக்குக் கொடுக்கப்பட்ட வடிவங்களில் சிறுவர்கள் எப்படி எழுதினார்கள் என்பது சுவையானது. இப்படியான இளம் எழுத்தாளர்கள் நம்மோடு

தொடர்ந்து இணைந்து இயங்கவேண்டும் என இளவேனில் ஆசிரியர் குழு மிக ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறது.

**அதிசய நந்தப் பறவை - திவா விவேகானந்தன்**

மனித சலனமேயற்ற அடர்காடு. நடுச்சாமம். மழை 'ஓ' என்று அலறிக்கொண்டிருந்தது.

இராட்சத இடிமுழக்கங்களின் சத்தத்திற்குப் பயந்து சிங்கக் கூட்டங்கள் எல்லாம் குகைக்குள் சென்று பதுங்கியிருந்தன. யானைகள் பிளிறின் வௌவால்கள் அச்சத்தில் அலறி அடித்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன. அப்போது வானத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு பெரு மின்னல் தோன்றி மொத்தக் காட்டையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. கண நேரம் தான். அதற்குள் சிருகாலன் அந்த மலையைக் கவனித்துவிட்டான்.

காட்டின் நடுவே தனியே அந்த மலை நின்றுகொண்டிருந்தது. அங்குதான் உளுந்தூர் நாட்டு இளவரசியைச் சூனியக்காரி கடத்தி வைத்திருக்கிறாள். சிருகாலன் விறுவிறுவென அந்த மலையை நோக்கி நடக்கத் தொடங்கினான். மழை சற்றே அடங்கியிருந்தாற் போலத் தோன்றியது. சிருகாலன் வழியில் இருந்த சிறு பாறை ஒன்றின் மேலே ஏறி கண்களைக் கசக்கி, தான் வைத்திருந்த மூங்கில் குழலினூடாக மலையுச்சியினைக் கூர்ந்து அவதானித்தான்.

மலையின் உச்சியிலே கொட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது. அதன் நடுவே பெரும் அடுப்பு மூட்டப்பட்டு, மேலே இராட்சத தாழி ஒன்று ஏற்றப்பட்டிருந்தது. தாழியிலிருந்து கொதிக்கும் எண்ணெயின் ஆவி மலையெங்கும் பறந்து கொண்டிருந்தது. அருகிலேயே இருந்த ஒரு கம்பத்தில் உளுந்தூர் இளவரசி கட்டப்பட்டிருந்தாள். இதுகாலும் காடு மலையெல்லாம் அல்லற்பட்டுத் தேடிய இளவரசியை ஒருவாராக சிருகாலன் கண்டுபிடித்துவிட்டான்.

விடிந்தால் அந்தக் கொதி எண்ணெய்க்குள் சூனியக்காரி இளவரசியைப் போட்டுவிடுவாள். அதற்குள் சிருகாலன் அவளை மீட்டாக வேண்டும். அவனுக்குப் பதற்றம் தொற்றிக்கொண்டது. மூங்கில் குழலை மறுபடியும் தன் இடை வாளோடு சேர்த்துச் செருகிவிட்டு, அவன் மலை உச்சியை நோக்கி விரைந்து நடக்க ஆரம்பித்தான்.

மறுபடியும் ஒரு பெரும் மின்னல்.

அந்த மின்னல் ஒளியில், வானத்தில் ஓர் இராட்சத, கருநிற நந்தப் பறவை ஒன்று வேகமாக மலையை நோக்கிப் பறந்து வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

சிருகாலன் அதிர்ந்துபோய் வேகமாக ஓட ஆரம்பித்தான்.

வேகமாக ஓடிய அவனின் முன் சித்தர் ஒருவர் திடீரெனத் தோன்றினார். அவன் நின்றபின், முனிவர் "மகனே, நீ எதற்காகப் பதட்டமாக ஓடுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?" என வினவினார். சிருகாலன் அவருடைய காலடியில் விழுந்து வணங்கினான். பின், எழுந்து நடந்தவற்றை விளக்கிக் கூற ஆரம்பித்தான். அமைதியுடன் அவன் கூறியதைக் கேட்ட சித்தர், "இக்காட்டில் வாழும்

சூனியக்காரியைக் கொல்வது மிகக் கடினமானது. உனது வாளினால் அவளைக் கொல்லவும் முடியாது. அவளது உயிர் அவளிடம் இல்லை. அதை அவள் ஓர் இரகசியமான இடத்தில் பாதுகாப்பாக மறைத்து வைத்திருக்கிறாள்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட சிருகாலன் அதிர்ச்சியாலும், ஆச்சரியத்தாலும் வியப்படைந்து சித்தரைப் பார்த்தான். வியப்படைந்த அவனது முகத்தைக் கண்ட சித்தர், ''அவளது உயிர் இருக்கும் இடத்தைச் சொல்கிறேன். மிகவும் கவனமாகக் கேள்'' என்று அருகே வந்து கூறினார். சிருகாலனும் ஆர்வத்துடன் அவர் அருகே வந்து அவர் கூறுவதைக் கவனமாகக் கேட்க ஆரம்பித்தான். ''மகனே, இம்மலையின் இரு பக்கங்களிலும் பல குகைகள் உள்ளன. அவற்றிலே உயரத்திலும், அகலத்திலும் பெரிதாக உள்ள குகையினுள் ஒரு பெரிய பருந்து உள்ளது. அது மரக் கிளை ஒன்றில் உறங்கிக்கொண்டிருக்கும். அதன் கழுத்திலே நீல நிறமான பெரிய மணி பிரகாசித்துக்கொண்டிருக்கும். அந்த மணியை உன் வாளினால் வெட்டி வீழ்த்தி அதைத் துண்டாக்கினாயானால் சூனியக்காரி இறந்து விடுவாள். இப்போது நீ பார்த்த நந்தப் பறவையின் வடிவில் இருப்பவளும் அச்சூனியக்காரியே தான். பறவையின் வடிவிலிருக்கும் பொழுது அம்மணியை உடைத்தால் அவளது உயிர் இலகுவாகப் பிரியும். ஆதலால், பொழுதை வீணாக்காமல் நீ விரைவாகச் செல், என் ஆசி முழுவதும் உனக்கே!'' என வாழ்த்தி அனுப்பினார்.

அவரை வணங்கி விடைபெற்றான் சிருகாலன். சிறிது தூரம் சென்ற பிறகு, அவன் திரும்பிப் பார்த்த பொழுது சித்தரைக் காணவில்லை. சித்தரின் மகத்துவத்தை எண்ணி வியந்து, குகையைத் தேடி விரைந்து சென்றான். மலையின் அடிவாரத்தை அடைந்த பொழுது, பல குகைகள் அவனது கண்களில் தென்பட்டன! ஒவ்வொரு குகையினுள்ளும் வரிசையாகச் சென்று பார்க்க நேரமோ அரிது. ஆனால், அவன் முன் தென்பட்ட குகையினுள் ஒன்று மட்டுமே கண்களைக் கவர்ந்தது. மற்ற குகைகளை விட அகலத்திலும், உயரத்திலும் பெரிதாகக் காட்சி அளித்தது. மகிழ்ச்சியுடன் மிக மெதுவாக நகர்ந்து சென்ற அவன் குகையினுள் நுழைந்தான். சுற்றும் முற்றும் பார்த்த பொழுது அவனது கண்களில் பாறை இடுக்கொன்றில் வளர்ந்த மரத்தின் கிளையில் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டான்.

உருவத்தில் மிகப் பெரிய ஒரு பருந்தையும், அதன் கழுத்தில் இருந்த மணியிலிருந்து வீசிய ஒளி குகையெங்கும் பரவியதையும் கண்டு பிரமித்தான். மெது மெதுவாகச் சென்ற அவன் அருகிலிருந்த பெரிய பாறை ஒன்றில் ஏறி இடையில் செருகியிருந்த அவனது வாளை உருவினான். உருவிய வாளுடன் ஊர்ந்து ஊர்ந்து சென்று பறவையின் கழுத்தை ஒரே வெட்டினால் துண்டாக்கினான். குகையின் சுவரெங்கும் இரத்தம் தெறித்தது. பறவையிலிருந்து குதித்த மணியைச் சிதைப்பதற்குத் தகுந்த வழியைத் தெரிவு செய்து, அருகே இருந்த ஒரு பாறாங்கல்லைத் தலையின் மேல் தூக்கினான். பாறையிலிருந்து குதித்து மணியின் மீது அதை விரைந்து போட்டான்.

மணி துண்டு துண்டாகச் சிதறியது. இருள் குகையைச் சூழ்ந்தது. உடனே, ஒரு பெண்ணின் அலறல் ஒலி கேட்டது. விரைந்து பதட்டத்துடன் குகையை விட்டு வெளியேறிய சிருகாலன் நந்தப் பறவையின் வடிவிலிருந்த சூனியக்காரி உயிரற்ற

சடலமாகக் கீழே கிடப்பதைக் கண்டான். மலை உச்சியை நோக்கி விரைந்து சென்று இளவரசியின் கட்டுக்களை அவிழ்த்து அவளை மீட்டான்.

பிறகென்ன, உளுந்தூர் இளவரசியை மீட்ட சிருகாலன் உளுந்தூர் நாச்சு மன்னனிடம் அவளை ஒப்படைத்த பொழுது, மன்னன் மகிழ்வடைந்து தன் நாட்டுக்கே அவனை மன்னனாக்கி தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்துவைத்ததை நான் சொல்லவும் வேண்டுமோ.

**எவ்வளவு பண்ணிட்டோம் இத பண்ண மாட்டோமா - அபிதாரணி சந்திரன்**

மனிதச் சலனேமயற்ற அடர்காடு. நடுச்சாமம். மழை "ஓ" என்று அலறிக் கொட்டிக்கொண்டிருந்தது.

இராட்சத இடி முழக்கங்களின் சத்தத்திற்குப் பயந்து சிங்கக் கூட்டங்கள் எல்லாம் குகைகளுக்குள் சென்று பதுங்கியிருந்தன. யானைகள் பிளிறின. வெளவால்கள் எல்லாம் அச்சத்தில் அலறி அடித்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன. அப்போது வானத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு பெரு மின்னல் தோன்றி மொத்தக் காட்டையும் வெளிச்சம் போட்டுக்காட்டியது.

‘‘அவ்வ்வ்வ்..’’

என்று பயத்தில் அலறினார் வடிவே-வலு. அருகிலிருந்த விஜய் அவரின் வாயை அவசரமாகப் பொத்தினார்.

‘‘அண்ணை .. சத்தம் போடாதீங்க. சிங்கத்துக்குக் கேட்டிடப்போகுது’’

‘‘சிங்கமா? அடக் கிராதகா... சிவேனன்னு வீட்டில சிக்கின் சாப்பிட்டுக்கொண்டிருந்தவன சிங்கத்துக்கே சைட் டிஷ்ஷா மாத்தப்போறிங்களாடா?’’

‘‘இல்லை அண்ணை. நான் என் காதலிய மீட்கணுமா வேணாமா?’’

‘‘டேய், நீ உன் காதலிய மீட்கிறதுக்கு நான் எதுக்கடா சாகணும்?’’

‘‘சும்மா வாங்கண்ணை. நண்பன் என்றால் காதலுக்காக சாகணும் அண்ணே’’

நரி ஒன்று எங்கோ ஊளையிட்ட சத்தம் கேட்டது. அடித்த மின்னல் வெளிச்சத்தில் காட்டின் நடுவே தனியே அந்த மலை நின்றது தெரிந்தது. அங்குதான் விஜய்யின் காதலியை ரவுடிக்கும்பல் கடத்தி வைத்திருந்தது. அந்தக் கும்பலின் தலைவி ஒரு கிழவி. அவளின் கோபம் ஊருக்கே தெரிந்தது. ஒரு முறை சந்தையில் கடைக்காரர்களிடம் பணம் வசூலிக்கக் கிழவியும் அவளது கும்பலும் வந்திருந்தது.

காவல்துறையினர்கூட அவளுக்குக் கப்பம் கட்டிக்கொண்டிருந்தார்கள். ஒரு மீன் கடைக்காரர் ‘‘நான் ஏன்

உனக்குக் காசு கட்ட வேண்டும்?'' என்று வீராப்பாகப் பேச, அங்கே பக்கத்துச் சாப்பாட்டுக் கடையில் கொதித்துக்கொண்டிருந்த எண்ணெய்ச் சட்டியைத் தூக்கி அப்படியே கடைக்காரரின் தலையில் கொட்டிவிட்டாள் அந்தக் கொடூரக் கிழவி.

''என்னடா, ஒரே திகிலா இருக்கே. பாட்டின்னா வடைல குத்துப்போட்டு, தட்டி எண்ணெயில போடுவாள்ப்பா.

இந்தக்கிழவி கடைல குத்துப்போட்டு, ரெண்டு தட்டுதே?''

வடிவேலு பயத்துடன் கேட்க, விஜய் பதில் அளித்தார்.

''இது ரவுடிப் பாட்டி அண்ணே''

''ரவுடி பேபி கேள்விப்பட்டிருக்கேன். ரவுடிப் பாட்டிடை-யக் கேள்விப்படல. டேய் இது எனக்கு சரி வராது.

கிழவி உன் காதலியைத் தூக்கினாத் தூக்கட்டும். திரிஷா இல்லாட்டி நயந்தாரா. நீ என்ன எல்லாப் படத்திலயும் ஒரே கதா நாயகியையா பயன்படுத்துவாய்? பேசாம வாடா ஓடிடலாம்''

''இல்லை அண்ணை. அது எனக்கு மரியாதை இல்லை. நான் ஒரு பக்கா திட்டம் தீட்டியிருக்கிறன். அதன்படி செய்யலாம்''

''என்னடா திட்டம் அது?''

''நான் இங்கேய பதுங்கியிருந்து யாராவது வராங்களான்னு பாக்கறேன். நீங்க போயி கிழவிகிட்ட இருந்து என் காதலிய மீட்டு வாங்கோ''

வடிவே-வலு ''போடா''' என்று சொல்லியபடி ஒரு கட்டையை எடுத்து அடிக்கப்போக, மரத்தின் மேல் நின்ற காகம் ஒன்று அவர் தலையில் பீய்ச்சியபடியே மெலெழுந்து பறந்துபோனது.

"இதுகளும் சதி பண்ணுதே" என யோசித்தார் வடிவேல். ''எனக்கு ஏழரை உச்சத்தில இருக்கு, மேற்கொண்டு நீயும் என்ன சீண்டி பிரச்சனையைக் கூட்டப் போறியா'' என்று விஜயிடம் கேட்டர்.

''சரிதான் போண்ண, நீ இல்லண்ணா என்ன? நான் கேட்டன் எண்டா என்ட பொடியல் வரிசை கட்டி நிற்பாங்க'' என்று பதில் சொன்னார் விஜய்.

ஒரு ஓரமாய்ச் சென்று விஜய் தொலைபேசியில் ஒரு மணி நேரமாகக் கதைத்துக் கொண்டிருந்தான். சில நொடிகளில் ரஜினி, கமல், பிரேம்ஜி, சூர்யா, தனுஷ் வந்தார்கள்.

"மச்சி எவ்வளவோ பண்ணிட்டோம் இதப் பண்ண மாட்டோமா" என்று வீரத்தோடு பிரேம்ஜி சொன்னான்.

விஜய்யினுடைய திட்டத்தின்படி அனைவரும் செயல்பட ஒத்துழைத்தார்கள். வடிவேலு ஒரு ஓரமாக ஒரு மரத்திற்குப் பின்னால் ஒழிந்து கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

திரிஷாவின் கைகள் மரத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தன. அவளைச் சுற்றிக் கிழவியின் அடியாட்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிழவி ஓரமாக இருந்து பகோடா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். விஜய்யும், அவனது நண்பர்களும் கும்பலாக கூடி நின்றார்கள். "வாங்கடா வாங்க, என்னடா இன்னும் ஆளைக் காணுமே என்று பார்த்துக் கொண்டிருந்தேன். என்னோட சிங்கக் குட்டிகளைத் தாண்டி அவளைக் கூட்டிட்டு போயிடுவீங்களா'' என்று பீத்தினாள் கிழவி.

''அப்படியா செல்லம், கொஞ்சம் இங்க பாருமா'' என்று ரஜினி சொல்ல அனைவரும் ஒரு ஓரமாகச் சென்றார்கள். நடுவில் பிரேம்ஜி கோபால் என்பவரின் வடிவத்தில் ஒரு ஸ்டைலாக நின்றார். கோபால் என கத்தி, இடிந்து போய் உட்கார்ந்தார் அக்கிழவி. கோபால் அக்கிழவியின் முன்னாள் காதலன். சூழ்நிலை காரணத்தால் பிரிந்து வெவ்வேறு திசைகளை நோக்கிச் சென்றார்கள். ஆனால் கோபால் இறந்துவிட்டார். பிரேம்ஜி அவரிடம் சென்று கட்டிப்பிடித்து அழுதார்.

அந்த நேரத்தில் விஜய், ரஜனி, கமல், சூர்யா, தனுஷ் அனைவரும் கிழவியின் அடியாட்களை அடித்து, திரிஷாவை மீட்டார்கள். விஜய்யும் திரிஷாவும் ஒன்று சேரும் நேரம் பார்த்து வடிவேலு மறைந்திருந்த மரத்தை விட்டு வந்தார் "ஹலோ எக்ஸ்கியூஸ் மீ " வாழ்த்துக்கள் என்று கை கொடுத்தார்.

விஜய் அவரை மேலும் கீழும் பார்த்தார். "ஏய் மான் இன்னா லுக்கு" நான் மாட்டன் எண்டு சொன்னதால தான் உனக்கு திரிஷா கிடைச்சா, இல்லையென்றால் இவதான் இன்னைக்குப் புலிக்கு மெயின் டிஷ்'' என்று நக்கல் அடித்தார்.

அனைவரும் சிரித்துக் கொண்டு வீடு திரும்பினார்கள். தனது காதல் வெல்லவில்லை என்பதால் மற்றவர்களது காதல் வெல்லக்கூடாது என்று நினைத்தாள் ரௌடிக் கிழவி. தனது காதலனைக் கண்டவுடன் கிழவி தனது 20 வயதுக்குச் சென்று விட்டாள். ''ஆஹா... பிரேம்ஜி எங்கய்யா'' என்றார் வடிவேலு. ஐயோ அவரை மறந்து விட்டோமே என்று எல்லோரும் பதறினார்கள்.

ஒரு பேச்சுக்குச் சொன்னா, உண்மையிலேயே என்னை லைக் பண்ணிடுவாளோ என்று அழுத பிரேம்ஜி இரவு முழுவதும் கிழவியின் அழுகையைக் கேட்டு சலித்துப் போனான். பிரேம்ஜி தொல்லை தாங்க முடியாமல் கிழவிக்கு மயக்க மருந்து கொடுத்து எஸ்கேப் ஆகிவிட்டான். விஜய்யும் வேண்டாம் எவனும் வேண்டாம் நான் எனது ஆருயிர் தோழன் சிம்புவோடேயே இருந்துட்டு போறேன் என்று பதறி ஓடினான் பிரேம்ஜி.

**கொலை - அர்ச்சனா ஆதவன்**

வடிவழகன் கொல்லப்பட்டுக் கிடந்தான்.

முகத்திலும் மார்பிலும் நான்கைந்து வெட்டுக்காயங்கள் இருந்தன.

தலை முடி எல்லாம் பிய்த்தெடுக்கப்பட்டு, வடிவழகனுக்கு அழகு பெயரில் மாத்திரம் எஞ்சியிருந்தது. இரவு அடித்த பெரு மழையில் இரத்தம் வழித்துக் கழுவப்பட்டிருந்தது. அருகிலிருந்த மரத்தடியில் அமர்ந்திருந்த நர்சிகா அழுதுகொண்டிருந்தாள். இரவு நிகழ்ந்த சம்பவங்கள் கொடுத்த அச்சத்தில் அவளது உடல் இன்னமும் நடுங்கிக்கொண்டிருந்தது.

சற்று நேரம் கொலை நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்ட பின்னர் இன்ஸ்பெக்டர் சிருகாலன் நர்சிகாவிடம் வந்தார்.

“நீங்கள்..”

“நர்சிகா”, விசும்பியபடியே சொன்னாள்.

“இது பொருத்தமான நேரமில்லை என்பது புரிகிறது. ஆனாலும் கேட்கவேண்டும். எந்தக் கொலையிலும் அது நிகழ்ந்து இருபத்து நான்கு மணி நேரங்களுக்குள்தான் கொலையாளியைப் பிடிப்பதற்கான சாத்தியங்கள் அதிகம். அதனால் நாங்கள் விரைந்து செயற்பட வேண்டும் நர்சிகா.”

“சொல்லுங்கள்”

“கொன்றவன் யார் என்று தெரியுமா?”

கொன்றவள். பெண். ஆமாம், ஒரு பெண்தான் கொலையைச் செய்தாள். அதுவும் வயதான ஒரு கிழவி”

“கிழவியா? உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? நம்பமுடியவில்லையே? வேறு அடையாளங்கள் உண்டா?”

”பரட்டை நரை முடி. கொஞ்சம் கூனல். கையில் இரும்பு ஆயுதம் ஒன்றை வைத்திருந்தாள்”

”உங்களை அவள் காணவில்லையா?”

“இல்லை நான் படிக்கட்டுக்குக் கீழே பதுங்கிவிட்டேன்.”

”நல்லது, வேறு தகவல்கள் ஏதும் உள்ளதா?”

“ஞாபகமில்லை. பயங்கர மழை. இருட்டு. எதுவுமே தெரியவில்லை”

“சரி, நீங்கள் வீட்டுக்குச் செல்லலாம். உங்களுக்கு இப்போதைக்கு ஒரு காவலரைத் துணைக்கு அனுப்புகிறோம். அச்சப்படத் தேவையில்லை. ஏதாவது ஞாபகம் வந்தால் எங்களுக்குத் தகவல் தாருங்கள்.”

சிருகாலன் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் வடிவழகனின் உடல் கிடந்த இடத்திற்குத் திரும்பினார். மறுபடியும் கூர்ந்து கவனித்தபோது வயிற்றுப்பகுதியில் சிறு கத்தியால் சடசடவெனக் குத்தியது போன்று குறுங் காயங்கள் பல தெரிந்தன. இது எப்படி நடந்திருக்கும் என்று அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் யோசைனயோடு தன் செல்பேசியில் சில புகைப்படங்கள் எடுத்தார்.

“இன்ஸ்பெக்டர் சிருகாலன்”

குரல் வந்த திசையில் திரும்பியபோது நர்சிகா நின்றிருந்தாள்.

“சொல்லுங்கள் நர்சிகா”

“அது வந்து, அந்தக் கிழவியோடு ஒரு இராட்சத பறவையும்...”

“என்ன?”

“நான் அதை என்னுடைய பிரமை என்று தான் யோசித்தேன். ஆனால் அந்தப் பறைவயும் அவளோடு சேர்ந்து வடிவழகனைத் தாக்கியதைக் கண்டேன்.”

“மெய்யாகத்தான் சொல்கிறீர்களா?”

“நூறு வீதம் உண்மை”

“என்ன பறவை?”

“இருட்டில் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அதன் சத்தத்தைப் பார்த்தால் காகம்போல...”

“காகமா?”

இன்ஸ்பெக்டர் சிருகாலனுக்கு எதுவுமே புரியவில்லை.

உடனடியாகத் தனது உதவியாளரிடம் வடிவழகன் உடலை அகற்றி முழு இடத்தையும் படம் எடுக்கச் சொன்னான். ஏதாவது தடயம் இருக்குமா என்று பார்த்தான். எல்லோரையும் உடனடியாகப் போகச் சொன்னான்.

சிருகாலனுக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது. பசியும் தாகமும் எடுக்கத் தனது வண்டியை நோக்கி நகர்ந்தான். பெரிய சிந்தனையுடன் வண்டியை ஓட்டினான். வீடு சென்று கதவைத் தட்ட சிருகாலனின் மனைவி கல்பனா கதவைத் திறந்தாள். சிருகாலன் முகம் கழுவி கல்பனாவின் சாப்பாட்டை உண்ணத் தொடங்கினான், என்றாலும் அவனது மனம் வடிவழகன், நர்சிகா பற்றியே எண்ணியது.

மனைவி கல்பனாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. கல்பனா சிருகாலனைத் துருவித் துருவிக் கேட்டாள். ஆனால் சிருகாலன் ஒன்றுமே சொல்லாமல் தூங்கி விட்டான்.

அதிகாலை எழும்பி உடனடியாகக் கொலை நடந்த இடத்தை நோக்கி விரைந்தான். கொலை நடந்த இடத்தை ஆழ்ந்து பார்த்தான். அந்த இடம் நேற்று பெய்த மழையால் ஈரமாக இருந்தது. சிருகாலன் மனம் குழம்பி இருந்தது. ஒரு தடயமும் கிடைக்கவில்லை. மனைவி கல்பனாவின் தொலைபேசி அடிக்கிறது. அதை எடுக்கும் எண்ணம் இல்லை, ஆனாலும் அவளின் கோபமான முகம் மனதில் தெரிந்தது. உடனடியாக மனைவியுடன் கதைத்து சில நிமிடம் அமைதியானான். கல்பனாவின் கனிவான பேச்சு மூளைக்கு உற்சாகமாக இருந்தது. மீண்டும் கொலை நடந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கிறான். மனைவி சொன்ன ''கத்தி வாங்கி வரவும்'' என்ற சொல் மூளையில் பொறி தட்டியது.

நர்சிகாவின் பதிலும் மாறி மாறி இருந்தது. சிருகாலனின் மனம் காகம் என்ற சொல்லை நம்ப மறுத்தது. பறவைகளின் எதுவித அடையாளமும் கிடைக்கவில்லை. சிருகாலனின் கண்ணில் உடைந்த காப்பும் தூரத்தில் தென்பட்டது. அந்த இடத்தில் கலவரம் நடந்த தடையமும் இருந்தது. சிறு கத்தியின் பாகமும் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு வாகனத்தை நோக்கி விரைவாக நடந்தான். வாகனத்தை வடிவழகன் வீட்டை நோக்கித் திருப்பினான். அவனது முகத்தில் சிறு தெளிவு தெரிந்தது. வடிவழகன் வீட்டுக்குச் சிறு தூரத்தில் நிறுத்தினான். வடிவழகனின் அயலவர்களை விசாரித்தான். எல்லோரும் வடிவழகன் நர்சிகாவின் தினசரி சண்டைகளைப் பற்றிக் கூறினார்கள். உடனடியாக மெதுவாக வடிவழகன் வீட்டை நோக்கி நடந்தான். நர்சிகா அழுது வீங்கிய முகத்துடன் உள்ளே வரச்சொன்னாள். சிருகாலன் நர்சிகாவுடன் தனியே பேச அனுமதி கேட்டார். உள்ளே சென்றதும் சிருகாலன் பேச முதல் நர்சிகா விக்கி விக்கி அழத் தொடங்கினாள். வடிவழகன் ஒவ்வொரு நாளும் குடித்துவிட்டு வந்து தன்னை மிகவும் கொடுமை செய்தபடியால், தான் வடிவழகனைக் கத்தியால் குத்தி விட்டதாகச் சொன்னாள்.

சிருகாலன் மனம் பாரம் குறைந்தது. மெதுவாகக் காவல் நிலையத்தை நோக்கி நடந்தான். குடி குடியைக் கெடுக்கும்.

**மலை உச்சி சூனியக்காரி – யுவன்**

மனித சலனமேயற்ற அடர்காடு. நடுச்சாமம். மழை 'ஓ' என்று அலறிக்கொண்டிருந்தது.

இராட்சத இடிமுழக்கங்களின் சத்தத்திற்குப் பயந்து சிங்கக் கூட்டங்கள் எல்லாம் குகைக்குள் சென்று பதுங்கியிருந்தன. யானைகள் பிளிறின் வௌவால்கள் அச்சத்தில் அலறி அடித்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன. அப்போது வானத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு பெரு மின்னல் தோன்றி மொத்தக் காட்டையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. கண நேரம் தான். அதற்குள் சிருகாலன் அந்த மலையைக் கவனித்துவிட்டான்.

காட்டின் நடுவே தனியே அந்த மலை நின்றுகொண்டிருந்தது. அங்கு தான் உளுந்தூர் நாட்டு இளவரசியைச் சூனியக்காரி கடத்தி வைத்திருக்கிறாள். சிருகாலன் விறுவிறுவென அந்த மலையை நோக்கி நடக்கத் தொடங்கினான். மழை சற்றே அடங்கியிருந்தாற் போலத் தோன்றியது. சிருகாலன் வழியில் இருந்த சிறு பாறை ஒன்றின் மேலே ஏறி கண்களைக் கசக்கி, தான் வைத்திருந்த மூங்கில் குழலினூடாக மலையுச்சியினைக் கூர்ந்து அவதானித்தான்.

மலையின் உச்சியிலே கொட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது. அதன் நடுவே பெரும் அடுப்பு மூட்டப்பட்டு, மேலே இராட்சத தாழி ஒன்று ஏற்றப்பட்டிருந்தது. தாழியிலிருந்து கொதிக்கும் எண்ணெயின் ஆவி மலையெங்கும் பறந்து கொண்டிருந்தது. அருகிலேயே இருந்த ஒரு கம்பத்தில் உளுந்தூர் இளவரசி கட்டப்பட்டிருந்தாள். இதுகாலும் காடு மலையெல்லாம் அல்லற்பட்டு தேடிய இளவரசியை ஒருவாராக சிருகாலன் கண்டுபிடித்துவிட்டான்.

விடிந்தால் அந்தக் கொதி எண்ணெய்க்குள் சூனியக்காரி இளவரசியைப் போட்டுவிடுவாள். அதற்குள் சிருகாலன் அவளை மீட்டாக வேண்டும். அவனுக்குப் பதற்றம் தொற்றிக்கொண்டது. மூங்கில் குழலை மறுபடியும் தன் இடை வாளோடு சேர்த்துச் செருகிவிட்டு, அவன் மலை உச்சியை நோக்கி விரைந்து நடக்க ஆரம்பித்தான்.

மறுபடியும் ஒரு பெரும் மின்னல்.

அந்த மின்னல் ஒளியில், வானத்தில் ஓர் இராட்சத, கருநிற நந்தப் பறவை ஒன்று வேகமாக மலையை நோக்கிப் பறந்து வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

சிருகாலன் அதிர்ந்துபோய் வேகமாக ஓட ஆரம்பித்தான்.

சிருகாலனுக்கு அந்தக் கருநிற நந்தப்பறவையைப் பற்றி ஏற்கனவே தெரிந்திருந்தது கருநிற நந்தப்பறவையானது நிலவொளியில் மிக அதிகச் சக்தியுடன் செயல்படக் கூடியது. பெரிய மலையைத் துவம்சம் செய்யக்கூடியது. ஆனால் சூரிய வெளிச்சத்தை அதனால் தாங்க முடியாது, குகைக்குள் ஓடி மறைந்து விடும்.

உளுந்தூர் இளவரசியைக் கருநிற நந்தப் பறவை ஒன்றும் செய்யக்கூடாது என்று மலைத் தெய்வத்தை மனதுக்குள் வேண்டிய படியே சிருகாலன் மலை மீது சரசரவென ஏறினான். சிறிது நேரத்தில் கருநிற நந்தப் பறவை அவனது பார்வையை விட்டு மறைந்தது. சிருகாலனுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு சக்தி வந்ததோ மிக வேகமாக மலை ஏறத் தொடங்கினான். திடீரென மலை மீது இருந்து கூச்சல் சத்தம் கேட்டது. சிருகாலனின் நெஞ்சுக்குள் படபடவென்று அடித்தது. குத்துமதிப்பாக இளவரசி இருந்த திசையை நோக்கி உயரத்தில் தன் குறுவாளை விட்டெறிந்தான். அடுத்த நொடி வானமே அதிரும்படி ஒரு சத்தம் கேட்டது.

கருநிற நந்தப் பறவை சிருகாலனை நோக்கி (வாள் வந்த திசையில்) கோபமாகப் பறந்து வந்தது. சிருகாலனுக்குத் தான் நிச்சயமாக உயிரோடு இந்த மலையை விட்டுத் திரும்ப முடியாது என்று தெரிந்தது. அவனிடம் கையில் எந்த ஆயுதமும்

இல்லை. ஓடி ஒழிய வழியும் இல்லை. முடிந்த வரையில் எதிர்த்துப் போராடலாம் என்று மனதுக்குள் நினைத்தபடியே சினம் கொண்ட சிங்கமாய் சீற்றத்துடன் நந்தப் பறவையை எதிர்க்க ஆரம்பித்தான். பாவம் அவனும் மனிதன் தானே! எவ்வளவு நேரம் தான் எதிர்க்க முடியும். அவனுடைய நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தது. நந்தப் பறவையின் கோபத்தையும் வேகத்தையும் தாங்க முடியாத சிருகாலன் தரையில் சரிந்து மல்லாந்து விழுந்தான்

விழுந்த நொடியில் அவனது வலியையும் மீறி அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. காரணம் சூரிய வெளிச்சம். மழையும் நின்றிருந்தது. கருநிற நந்த பறவையும் குகையை நோக்கிப் பறந்தது. பறவையிடமிருந்து உளுந்தூர் இளவரசியைக் காப்பாற்றிய சிருகாலன் சூனியக்காரியிடமிருந்து இளவரசியை எப்படிக் காப்பாற்றுவது என்று தெரியாமல், உடம்பில் பட்ட காயங்களோடு திணறினான். கரிகாலன், சிருகாலனின் ஆசைக் குதிரை அப்போது அங்கே வந்தது. அதைப் பார்த்தவுடன் சிருகாலனுக்குச் சிறு நம்பிக்கை மனதுக்குள் பிறந்தது. மெதுவாகக் கரிகாலனின் முதுகில் ஏறிய சிருகாலன் மனதுக்குள் திட்டமிட்டபடியே சூனியக்காரி இருந்த திசையை நோக்கி விரைந்தான். சூனியக்காரி குளித்து இளவரசியை எண்ணெயில் போடுவதற்கு ஆயத்தமாகி குடிசையை விட்டு வெளியே வந்தாள். குதிரையையும் அதன் மேலிருந்த காளையையும் பார்த்தவுடன் கோபமடைந்த சூனியகாரி அவர்களைக் கல்லாகும் படி சபித்தாள். இளவரசி குதிரை சிருகாலன் மூவரும் கல்லாக மாறினர். இளவரசியும் கல்லாக மாறுவாள் என்பதை எதிர்பார்க்காத சூனியக்காரி அதிர்ந்தாள். அவள் அதிர்ந்து நிற்கும் போது குகைக்குள் இருந்து சிங்கம் பசியோடு தன் இரையைத் தேடி வெளியே வந்தது. சிங்கத்தை எதிர்பார்க்காத சூனியக்காரியால் சிங்கத்தை எதிர்த்து மந்திரத்தைக் கூற இயலவில்லை. பாவம் சூனியக்காரி சிங்கத்தின் பசிக்கு இரையானாள். இரண்டு நாட்கள் கழித்து உளுந்தூர் ராஜா தன் படையுடன் மலையை அடைந்தார். கல்லாகிய தன் அன்பு மகளைப் பார்த்து சிலையாகி நின்றார். சிறிது நேரத்தில் சித்தம் தெளிந்த மகாராஜா மலைக்கோயிலை நோக்கி நடந்தார். மலைக்கோயில் மந்திரவாதியின் உதவியுடன் கல்லாகியவர்களை உயிருடன் மீட்ட மகாராஜா தன் படையுடன் உளுந்தூரை நோக்கி மகிழ்ச்சியுடன் புறப்பட்டார்.

## ஆசிரியர் தலையங்கம் - குரல் கொடுப்போம்

மீண்டுமொரு இளவேனில் சஞ்சிகையினூடாக உங்களோடு உரையாடுவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம். சென்ற முறை வெளியான சஞ்சிகை வாசகரிடத்தில் குறிப்பிடத்தக்க உரையாடலை நிகழ்த்தியது கண்டு ஆசிரியர் குழு திருப்தியடைகிறது. எனினும் அது பரந்துபட்ட தளத்தில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடவேண்டிய ஒன்று. எந்தச் சமூகத்தை நோக்கி அதன் ஆக்கங்கள் கருத்துகளைப் பேசி நின்றனவோ, அந்த மனிதரிடத்தில் அவை சென்று சேரவில்லையோ என்ற ஆதங்கம் நமக்குள் இருக்கிறது. உரையாடல்கள் பெரு மேடையில்தான் இடம்பெற வேண்டுமென்பதில்லை. சாதாரண இரவு உணவுக் குடும்ப உரையாடல்களில் பெரும் சமூகக் கருத்துகள் சஞ்சலங்கள் இன்றி அலசப்படலாம். பல தலைமுறைகளுக்கிடையிலான இடைவெளிகளும் குழப்பங்களும் பேசித் தீர்க்கப்படுவதும் அங்கேதான்.

எமக்குமொரு பெருங்கனவு உண்டு. நம் ஒவ்வொரு குடும்பங்களில் ஒருவரேனும் இச்சஞ்சிகையை வாசித்தல் வேண்டும். அதன் நோக்கங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, ஒத்துப்போய், முரண்பட்டு, தம் குடும்பத்தோரோடும் நண்பர்களோடும் உரையாட வேண்டும். அதை நம்மோடும் பகிர்ந்துகொள்ளல் வேண்டும். அப்போதுதான் வரப்புயர நீர் உயருவதைப் போல, வாசிப்புத் தளம் விரியும் போது, இச்சஞ்சிகையை மேலும் மேலும் உள்ளடக்கம் சார்ந்து வளர்க்கவேண்டிய தற்பொறுப்பு படைப்பாளிகளுக்கும் ஆசிரியர் குழுவுக்கும் அதிகமாகும். உள்ளடக்கம் உயரும்போது வாசிப்புத்தளம் மேலும் மேலும் பெருகத் தொடங்கும்.

அது நிகழட்டும்.

*****

அவுஸ்திரேலியாவில் இன்னும் சில மாதங்களில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்று இடம்பெற இருக்கிறது.

அவுஸ்திரேலியாவின் மத்திய அரசாங்கமும் பாராளுமன்றமும் இந்நிலத்தின் பூர்வீகக் குடிகளது சமூக, பொருளாதார, வாழ்வியல் விசயங்களைப் பாதிக்கக்கூடிய திட்டமிடல்களையும் முடிவுகளையும் 'voice' எனப்படுகின்ற பூர்வீகக்குடிகளின் பிரதிநிதிகளைக்கொண்ட அமைப்போடு கலந்தாலோசித்த பின்னர்தான் எடுக்கவேண்டும் என்ற திருத்தத்தை அவுஸ்திரேலிய அரசியல் அமைப்பில் இணைப்பதற்கான மக்கள் வாக்கெடுப்புதான் இது. இந்தத் திருத்தம் பற்றியும் அது ஏன் நம் நாட்டுக்குத் தேவை என்பதையும் நம் தமிழ்ச் சமூகத்தின் பெரு மதிப்புக்குரிய மூத்தவரான கிறிஸ்டி நல்லரெத்தினம் தமிழிலும் நம் இரண்டாம் தலைமுறையிலிருந்து உருவாகிய எழுத்தாளரான ஸம்ரக்ஷணா ஆங்கிலத்திலும் இந்த இதழில் விரிவாக எழுதியிருக்கிறார்கள்.

ஒடுக்கப்பட்டவர்களின் வலிகளையும் அவர்களின் தேவைகளையும் தமிழ்ச் சமூகமான எமக்குப் புரிந்துகொள்வது அத்தனை கடினமானது அல்ல. ஈழத் தமிழ்ச் சமூகம் பல தசாப்தங்களாகச் சொந்த நாட்டிலே ஒடுக்கப்படுவதும், அதற்கெதிராகக் குரல்

கொடுத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் கொடூரமான வன்முறை கொண்டு அடக்கப்படுவதும் இன்றைக்கும் தொடரும் வரலாறு. நம் வாழ்வியலும் தொன்மங்களும் மொழியும் நம் கண் முன்னையே காணாமலாக்கப்படுவதைக் கண்ணுற்றுச் செய்வதறியாது திகைக்கிறது எம் இனம். இந்தியாவில் மாநில சுயாட்சிக்கான, செம்மொழிகளின் இருப்புக்கான போராட்டம் நாடு சுதந்திரமடைந்த பின்னரும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இரட்டைக் குடியுரிமை, இறைமைகளின் பகிர்வு, தேர்தல் தொகுதி ஒதுக்கீடு எனப் பலதரப்பட்ட சீர்திருத்தங்களைப் பல தசாப்தங்களுக்கு முன்னரே அம்பேத்கர் முன்மொழிந்ததை இக்கணத்தில் பதிவு செய்யவேண்டியிருக்கிறது. சமத்துவம் என்பது அனைவருக்கும் சம சந்தர்ப்பம் கொடுப்பதல்ல. சம சந்தர்ப்பம் என்பது சமூகத்தின் வல்லமை பொருந்தியோருக்கு (privileged people) மேலும் ஆதாயத்தைக் கொடுத்து பலரைப் பின்னே தள்ளிவிட வல்லது. உண்மையான சமத்துவம் என்பது காலம் காலமாகச் சமூகத்தால் புறந்தள்ளப்பட்ட, சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்ட மனிதருக்கு அவசியமான ஒதுக்கீடுகளையும் சந்தர்ப்பங்களையும் கொடுத்து முன்னகர்த்துவதே. இது வல்லமை பொருந்தியோர் மற்றவருக்குச் செய்யும் சலுகை கிடையாது. இது மனிதருக்கான பிறப்பு உரிமையாகும்.

தம் தாய் நாடுகளில் ஒடுக்கப்பட்ட இனங்களாக வாழ்ந்து, புலம்பெயர்ந்து இங்கு வந்து, வாழ்வை நிலை நிறுத்திக்கொண்ட நாம், இந்த நிலத்தின் பூர்வீகக் குடிகளின் வாழ்வு தலைமுறை தலைமுறையாகக் காலனித்துவத்தால் சூறையாடப்பட்ட நிலையில் வாளாதிருத்தல் தகுமா என்ற கேள்வி எழுகிறது. சொல்லப்போனால் அந்தப் பின்புலம் இல்லாவிட்டாலும்கூட அறத்தின்பால் நின்று அச்சமூகத்துக்கு ஆதரவு அளிப்பது மனிதரின் கடமையாகும். இப்பெருநிலத்தில் அறுபதாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பல நூறு கலை, கலாச்சாரம், மொழிகளோடு வாழ்ந்த மக்கள் கூட்டம் இன்று இருக்கும் நிலையை நாம் எல்லோருமே அறிவோம். அவர்களுடைய வாழ்வைப் பாதிக்கக்கூடிய முடிவுகளை நம் நாட்டின் அரசாங்கம் எடுக்கும்போது அவர்களோடு குறைந்தபட்சம் கலந்துரையாடலையாவது செய்வதுதானே நீதி? இந்தக் குறைந்த பட்ச உரிமையையேனும் கொடுப்பதற்கான தார்மீகக் கடமை அவுஸ்திரேலியர்களாகவும் தமிழ்ச் சமூகமாகவும் நமக்கு இருக்கிறது.

இதன் காரணமாகத்தான் பூர்வீகக் குடிகளின் ‘குரல்’ அமைப்புக்கான சர்வசன வாக்கெடுப்புக்கு இளவேனில் ஆசிரியர் குழு முழுமையான ஆதரவைக் கொடுக்கிறது. இந்தத் தீர்க்கமான முடிவை எடுப்பது, அவுஸ்திரேலியத் தமிழ்ச் சமூகத்தில் அறிவுசார் தளத்தில் இயங்கும் இளவேனில் சஞ்சிகையின் கடமை என்று எமக்குப் படுகிறது. இதுபற்றிய தொடர்ச்சியான உரையாடல்களையும் தெளிவுபடுத்தல்களையும் தமிழ்ச்சமூகத்தில் நிகழ்த்தவும் இளவேனில் தயாராக உள்ளது. அவுஸ்திரேலியர்கள் அனைவரும் இதற்கு ஆதரவளித்து இம்முயற்சியை வெற்றியடைய வைப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

“பெரிதினும் பெரிது கேள்”

இளவேனில் ஆசிரியர் குழு

**விளையாட்டாப் போச்சு**

**இரமகத்துல்லா**

அன்று அலுவலகம் செல்ல இரயில் ஏறியதும் ஜெகாவைப் பார்த்தேன். ஜெகா. என்னை விட 20, 22 வயது சின்னவன். மனைவி சித்ரா. 6 மற்றும் 4 வயது என இரண்டு குழந்தைகள். அழகான, சின்ன, இளம் குடும்பம். அவுஸ்திரேலியா வந்த நாளிலிருந்து மிகவும் பழக்கம். நிறைய விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுபவன். கிட்டத்தட்ட 3 வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் பார்க்கிறேன்.

"ஜெகா... எப்படி இருக்கப்பா? பாத்து வருசக்கணக்காச்சு. வீட்ல எப்படி இருக்காங்க? குழந்தைங்க எப்படி இருக்காங்க? நல்லா வளந்துருக்குங்க இல்ல?" என்றபடி ஜெகாவுக்கு எதிரே இருந்த காலி இருக்கையில் அமர்ந்தேன்.

"ஆமாண்ணே, ரொம்ப நாளாச்சு. நாங்க எல்லாரும் நல்லா இருக்கோம். உங்க வீட்லே அண்ணி, தம்பி பயலுக எல்லாரும் சௌக்கியமா? பசங்க ரெண்டும் நல்லா வளர்ந்துட்டாங்க... சின்னவன் இப்போ "கிண்டர்"ல இருக்கான். பெரியவன் ஸ்கூல் போக ஆரம்பிச்சிட்டான். அவங்கம்மா, இப்பவே என்னென்ன டியுஷனுக்கு அனுப்பணும்னு லிஸ்டு போட ஆரம்பிச்சிட்டா"

சிரித்துக்கொண்டே "கடகட"வென ஒப்பித்தான்.

"அப்படியா... ஸ்கூல் போற அளவுக்குப் பெரிய ஆளு ஆயிட்டாரா பெரியவரு? அது சரி, 6 வயசு புள்ளைக்கு என்னாப்பா டியூஷன் இப்போ? பாவம், சின்ன கொழந்தைதானே. ஜாலியா ஸ்கூல் போயிட்டு வரட்டும்... இன்னும் நிறைய வருஷம் இருக்குப்பா. அதுவரைக்கும், நல்லா விளையாடிக்கிட்டு, பொழுது போக்கிட்டு வரட்டும்..."

"சரியாப் போச்சுண்ணே. விளையாட்டா... அவ்ளோதான். அந்த வார்த்தையை சொன்னாலே சித்ரா டென்ஷன் ஆயிடுவா. எங்க நண்பர்கள் வட்டத்துலே உள்ள பசங்க எல்லாம் North Shore, EDU Kingdomன்னு செம பிசியா இருக்காங்களாம். அதனாலே, நானும் என் புள்ளைய அதுலே எல்லாம் போடணும்ன்னு ஒத்தக்கால்லே நிக்கிறா" என்றான், பரிதாபமாக.

"இருக்கட்டும்பா. படிப்பு தேவைதான்... ஆனால், ஏன் "விளையாட்டு" வேணாம்ன்னு சொல்லணும்? அதுவும் ஒரு வகையில் முக்கியம்தானேப்பா. உனக்கே தெரியும்தானே, என் ரெண்டு பயலுகளும் பாஸ்கெட்பால் விளையாடறவங்கன்னு... விளையாடறதிலே என்ன தப்பு?"

"அது என்னமோ தெரியலைண்ணே. எங்க வட்டத்துலே, யாருடைய பசங்களும் எந்த Games ம் ஆடறதில்ல. விளையாடிட்டு வந்தா படிக்க நேரம் இருக்காது, தூங்கிட்டே இருப்பாங்கன்னு என்னென்னவோ சொன்னாங்க."

"ஆனா அண்ணே, உங்க பசங்களும் Basketball விளையாடுனாங்க. ஆனா, நல்லா படிச்சு, "Selective School" போனாங்கதானே? எப்படிண்ணே? அவங்களுக்கு இந்த பிரச்சனை இல்லையா? நீங்களும், அண்ணியும் எப்படி இதை சமாளிச்சீங்க?"

"ஜெகா, எங்கப்பா சின்ன வயசுலயே என்னை விளையாட அனுப்புனாரு. அது எனக்கு வாழ்க்கையில ரொம்ப உபயோகமா இருந்துச்சு. அதனால, அதையே நான் என் பசங்களுக்கும் தரணும்ன்னு நினைச்சேன்... அவ்ளோதான். நீ நினைக்கிற மாதிரி "விளையாட்டு"ங்கறது வெறும் Extra Curricular Activity மட்டும் இல்ல. அது ஒரு வாழ்க்கைப் பாடம். ஸ்கூல்ல, புத்தகத்தில எல்லாம் சொல்லித் தர முடியாத ஒரு பாடம். விளையாட்டு மூலமா பசங்க நிறைய பண்புகளை கத்துக்கிட வாய்ப்பு இருக்கு... ஒவ்வொண்ணா விளக்கமா சொல்றேன், கேளு.''

''விளையாட்டுல ரெண்டு விதம் இருக்கு. தனி நபர் விளையாட்டு (Individual Sport) மற்றும் குழு விளையாட்டு (Team Sport). நான் தனிப்பட்ட முறையிலே "குழு விளையாட்டு" (Team Sport) க்கு பெரிய விசிறி... ஏன்னா, நானே ஒரு Basketball Player. என்னுடைய 7வது வயசுலே ஆட ஆரம்பிச்சு இன்னும் விளையாடறேன். பயிற்சியாளனாவும் (Coach) இருக்கேன். இன்னும் குறிப்பா சொல்லணும்ன்னா, கிரிக்கெட், பாட்மிண்டன் மாதிரி குழு விளையாட்டுகளைக் கூட நிறைய பேர் முறையான பயிற்சி இல்லாம விளையாடறதைப் பாத்திருக்கேன்... ஆனா கூடைப்பந்தாட்டம் (Basketball) மாதிரி ஒரு சில விளையாட்டுகள்தான் முறையான பயிற்சி இல்லாம, யாரும் சொல்லித் தராம ஆட முடியாது. அப்படி ஒரு பயிற்சியாளர் சொல்லி கொடுத்து விளையாடும்போது, விளையாட்டு விதிகள், விளையாடும் முறை என பயிற்சியாளர் சொல்பேச்சு கேட்டு நடக்க வேண்டிய கட்டாயம் வரும்போதுதான், அங்கே பசங்க ஒழுக்கத்தையும் (Discipline), கீழ்ப்படிதலையும் (Obedience) கத்துக்குறாங்க. அதனாலே, இந்த மாதிரி விளையாட்டுகளை பசங்க ஆடுனா, அதுலே நிறைய நல்ல விஷயங்களை கத்துக்கலாம்.''

நான் சொல்லச் சொல்ல என் வாயையே பார்த்துக்கொண்டு இருந்தான் ஜெகா.

"அண்ணே, விளையாட்டா விளையாட்டைப் பத்தி பேச இவ்ளோ விஷயம் இருக்காண்ணே. யே யப்பா, ஒரு சாதாரண ஆளா, எனக்கு, என் பசங்களுக்கு விளையாட்டால என்னென்ன பலன்கள் இருக்குண்ணே?"

"அடுத்து அங்கதாம்பா வர்றேன். நான் என்னோட Basketball அனுபவத்தையே வச்சு சொல்றேன். என்னோட சின்ன வயசுல, நம்ம ஊர்ல நிறைய Indoor, Outdoor விளையாட்டுகள் விளையாடுவோம். அதுல பார்த்தேன்னா ஜெயிப்போம், தோற்போம், சண்டை போடுவோம்... அப்போ, அதுல இருக்கிற ஏற்ற, இறக்கங்கள் புரியும். ஆனா, இந்தக் காலத்து பசங்க வெறுமே gadget dependent ஆ இருக்கிறதால, இந்த விஷயங்கள் எல்லாம் அவங்களால அனுபவிக்க முடியல. ஸ்கூல்லயும் பரீட்சைன்னு பெருசா கிடையாது. ஏன், "போட்டி"ன்னு ஒண்ணே கிடையாது. ஆனா, ஒரு பரீட்சைன்னு நடந்து, அதுலே எதிர்பார்த்த மார்க் கிடைக்கலைன்னா, ஒரேயடியா சோர்ந்து போய் உட்கார்ந்துடுவாங்க... அல்லது ஒரு

போட்டி நடந்து அதுலே தோத்துட்டாலும், தளர்ந்து போயிடுவாங்க. இது வரைக்கும் புரியுதா?"

ஜெகா ஒன்றும் சொல்லாமல் வெறுமே தலையை மட்டும் அசைத்தான். நான் தொடர்ந்து, "அதாவது, "போட்டி"ன்னு இல்ல. எது பண்ணாலும் அதுல "வெற்றி" மட்டுமே கிடைக்க வேண்டும்... "தோல்வி" என்பதே இருக்கக்கூடாது. அதிலும் "First" ஆக மட்டுமே வரவேண்டும்ன்னு சொல்லிச் சொல்லி வளர்க்கப்படுகிற நம்ம பசங்களுக்கு வாரா வாரம், ஒரு Match. அதுல சில வாரங்கள் வெற்றி. சில வாரங்கள் தோல்வின்னு ஒரு அணியாக (Team) 8, 10 பேர் எதிர்கொண்டா எப்படி இருக்கும்?"

"என்னண்ணே சொல்றீங்க? கூடி உக்காந்து, கும்பலா பொலம்பறதையா சொல்றீங்க?"

"பொலம்பறது இல்ல ஜெகா... பொறுமையா, எதனாலே வெற்றி கிடைச்சுது... அல்லது தோல்வி அடைய காரணமான தவறுகள் என்னென்ன அப்படிங்கறதை விலாவரியா ஆராயறது, வெற்றியோ, தோல்வியோ அதை தனி ஒரு நபர் மேல் குறிப்பிடாமல் ஒட்டு மொத்த அணியாக பொறுப்பேற்பதுதான் இதன் தனித்தன்மை. அப்போ, பசங்க, ஒவ்வொரு வாரமும், வெற்றி, தோல்வியை சந்தித்து, அந்த இரண்டையும் எப்படி எதிர்கொள்வது (Situation Handling) என்று கற்றுக்கொள்கிறார்கள். எவ்ளோ பெரிய விஷயம் இது?"

"இதனால பசங்களோட மனநிலை எப்படி ஆகுதுன்னா... வெற்றி கிடைத்தால் அதை மயக்கமோ, மமதையோ இல்லாம சாதாரணமா எடுத்துக்கிறதும், தோல்வி அடைந்தால், துவண்டு போகாம அதை தைரியமா எதிர்கொண்டு, அடுத்த வாய்ப்புல (Match) தப்பை சரி செஞ்சுக்கிட்டு, எப்படி வெற்றி அடையறதுன்னு முயற்சி பண்றதுமா மாறிடும். இதான் தன்னம்பிக்கையின் (Self Confidence / Self Belief) அடிப்படை. அதே போலத்தான், ஒரு நல்ல move / skill display செய்தால் அதை அப்போதே பாராட்டும் மனமும், தவறு நடந்தால், உடனே தட்டி கொடுத்து, "பரவாயில்ல, அடுத்த முறை சரியாக செய்யலாம்" (Never mind, next time) என்று புரிந்து கொள்ளும் பக்குவமும் கூட பசங்களுக்கு வந்துடும்"

"இது போக, நான் பயிற்சியாளனா (Coach) இருக்குற அணியில, பசங்க கிட்ட, ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு பையனையோ, பெண்ணையோ அன்னைக்கு ஆடுன ஆட்டத்தை பத்தி, அவங்களோட கருத்துகளை (Pep-talk) சொல்லச் சொல்வேன். அப்போ, அவங்களுக்கு தன்னை அறியாமலேயே Analytical Skills மற்றும் Leadership போன்ற குணங்கள் வந்து சேரும். தொடர்ந்து, பல வருஷங்களுக்கு இந்த பயிற்சி இருந்தா பசங்க வாழ்க்கை எப்படி இருக்கும்? இந்த ரெண்டும், இன்னைக்கு உனக்கு, உன்னோட Professional Career ல, எவ்ளோ முக்கியமான விஷயம்ன்னு தெரியும்தானே?"

"என்னண்ணே, திடீர்னு இவ்ளோ பெரிய விஷயத்தை சாதாரணமா சொல்றீங்க? விளையாட்டாலே இதெல்லாம் சாத்தியமா? நம்புற மாதிரியும் இருக்கு... நம்ப முடியாத மாதிரியும் இருக்கு''

''நம்பித்தான் ஆகணும். "சித்திரமும் கைப்பழக்கம்"ன்னு சொல்லுவாங்க தெரியுமா? அதுலே இதுவும் அடங்கும். இன்னும் சொல்றேன் கேளு''...

''இன்னைக்கு, நாடு இருக்குற இருப்புக்கு, மத்தவனுக்கு எது நடந்தா நமக்கென்ன... நாம பாட்டுக்கு ஒரு ஓரமா அமைதியா இருந்துக்கிடுவோம்ன்னுதானே இருக்கு. ரோட்ல அடிபட்டு கெடக்கிறவனை காப்பாத்தாம, செல்ஃபி எடுக்குற சமூகம்தானே பொதுவா இன்னைக்கு வளர்ந்து வருது...''

ஆனா, ஒரு Sportsman வாழ்க்கைல, அதுவும் முக்கியமா Team Sport விளையாடறவன் வாழ்க்கைல, அது வேற மாதிரிப்பா. உதாரணத்துக்கு, Basketballல, பந்தை கூடைக்கு கொண்டு போறதுக்குள்ள எவ்ளோ இடர்பாடுகள் வரும் தெரியுமா? அதை நீ ஒரு ஆளு, தனியா செய்ய முடியாது. உன்னோட அணியினரோட ஒத்துழைப்பும், உதவியும் தேவை. அதே போல, உன்னோட ஒத்துழைப்பும், உதவியும் உன்னோட அணிக்குத் தேவை... இதுக்கு பேருதான் "Give & Take", "Sharing". இது போக, விளையாடும்போது நீ கீழ விழுந்துட்டாலோ, அல்லது உன் அணியை சேர்ந்தவன் கீழ விழுந்துட்டாலோ, ஏன், உன் எதிராளியே கீழ விழுந்துட்டாலோ கூட, அவனை கை கொடுத்துத் தூக்கி விடறது ஒரு Sportsman னுடைய தலையாய பண்பு. பொது வாழ்க்கைல இதை பொருத்திப் பார்த்தா, ஆபத்துல இருக்கிறவனை, யாருன்னு கூடப் பார்க்காம காப்பாத்துற செயல் இது. இதுக்கு பேருதான் ''Caring''

ஆக, "Give & Take", "Sharing & Caring'' மாதிரி குணங்கள் இல்லேன்னா உன்னால விளையாட்டுல வெற்றி பெற முடியாது... இந்த பண்புகளை பசங்க வளர்த்துக்கிட்டாதான், ஒரு அணியா அவங்க வெற்றி பெற முடியும். இதையெல்லாம் நீ எங்கே போய் படிச்சு உன் பசங்களுக்கு சொல்லித் தர முடியும், சொல்லு? இன்றைய தலைமுறைல இந்த மாதிரி குணங்களோட பசங்களப் பாக்குறதே கொறைச்சல்தானே"

"ரொம்ப சுவாரஸ்யமாவும், அதே நேரம் வாழ்க்கைக்கு ரொம்பவே உபயோகப்படற பண்புகள்ண்ணே... ஆமா, இந்த (விளையாட்டு) உலகத்தில, Parents ஆ, நீங்க, அண்ணி எல்லாரும் எப்படி கலந்தீங்கண்ணே? இதுல, நமக்கு என்ன இருக்கு?"

"இந்தா, அடுத்து அந்த ஜாலியான விஷயத்துக்குத்தான் வர்றேன்... விஜயகாந்த் ஸ்டைல்லே சொல்றேன்... வாராவாரம் நாங்க match விளையாடப் போற Dandenong Stadium ல, 10 Basketball Court இருக்கு. காலைலே 8 மணிக்கு முதல் match தொடங்கும்... ஒரே நேரத்துல 1 match க்கு, பத்தும், பத்தும் 20 பேர், அவங்க கூட வந்த Parents ன்னு இன்னொரு 20 பேர், முந்தைய match ஆளுங்க, அடுத்த match ஆளுங்கன்னு மொத்தமா 10 match க்கு, 400 - 500 பேர் இருப்பாங்க... பசங்க வர்றதும், விளையாடறதும், போறதும்ன்னு அசத்தலா

இருக்கும்... வாராவாரம், இந்த மாதிரி 1 மணி நேரமோ, 2 மணி நேரமோ போயிட்டு மேட்சையும் பாத்துட்டு, நம்ம அணியை சேர்ந்த மத்த பெற்றோர் கூட கதை அடிச்சிக்கிட்டு ஜாலியா பொழுதை போக்கிட்டு வரலாம். சும்மா 'கலகல' ன்னு திருவிழா மாதிரி இருக்கும்''

"நம்ம பசங்களுக்கும் அவங்க ஸ்கூலுக்கு வெளியே இன்னொரு நண்பர்கள் வட்டம் கிடைக்கும்... பெரும்பாலும் இந்த நட்பு வட்டம் பசங்க பெரியவங்க ஆன பிறகு கூட தொடரும்... ஒவ்வொரு சீசனும் கிட்டத்தட்ட 6 மாசம் போகும். நடுவுலே, Bendigo, Geelong, Adelaide மாதிரி வெளியூர்களுக்கு கூட மேட்ச் விளையாட போவோம். ஆக, அந்த 6 மாசமும், ஒரு குடும்பம் போல எல்லாரும் கூடிப் பேசி, சிரிச்சி சந்தோசமா இருப்போம். அது ஒரு வகையான அனுபவம். அண்ணிக்கும், அவங்களோட வழக்கமான வீட்டு வேலைகள்ல இருந்து மாறுதலான அனுபவமா இருந்ததால இது புடிச்சுப் போச்சு."

"இதுல, பெற்றோர்களா நாமளும் சில விசயங்களைக் கத்துக்குவோம், தெரியுமா?"

"அப்படியா, அது என்னதுண்ணே?"

"கடைசியா எப்போ நீ இன்னொரு குழந்தையை, பையனோ, பொண்ணோ பாராட்டியிருக்கே? நான் குழந்தைகளை கொஞ்சுறதை பத்தி கேக்கலே... பாராட்டுனது பத்தி கேக்கறேன்..."

மிக சாதாரண கேள்வி. ஜெகா ஆழ யோசித்து, சுமார் 2 நிமிடங்கள் கழித்து, நம்பிக்கையில்லாமல் உதட்டை பிதுக்கி, தலையை இடதும், வலமும் ஆட்டினான். "அண்ணே, வாழ்க்கையில எத்தனை முறை இன்னொருத்தர் மகனையோ, மகளையோ பாராட்டியிருப்பேன்னு யோசிச்சு பாத்தா, கிட்டத்தட்ட "இல்லை"ன்னுதான் சொல்லணும்"

"கவலையே படவேண்டாம் ஜெகா. நான் மேல சொன்ன அந்த "குடும்ப" சூழல்ல இதுக்கு வாய்ப்புகள் நிறைய கிடைக்கும். ஏன்னா, உன் பையனை அவன் நல்லா விளையாடினான்னு மத்த பெற்றோர்கள் பாராட்டும்போது, நீயும் அந்த அணியிலே இருக்கிற மத்தவனை பாராட்ட ஆரம்பிப்பே... அந்த மாதிரி ஒரு mutual appreciation உன் பையனுக்கு கிடைக்கும்போதும், நீ மத்தவங்களுக்கு தரும்போதும் ஒரு மன நிம்மதி கிடைக்கும்... அது ஒரு தனி அனுபவம்..."

இதெல்லாம் போக ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம் இருக்கு... அவுஸ்திரேலியா க்ளைமேட் (weather) நம்ம ஊரு மாதிரி கிடையாதுதானே... அங்கேன்னா அடிக்கிற வெயிலுக்கு உடம்பு நல்லா வியர்க்கும், உடம்புலே இருந்து கழிவு எல்லாம் வெளியேறும்... இங்கேதான் வியர்வைங்கற பேச்சே இல்லையே. ஆனா, விளையாடினா உடம்பு நல்லா வியர்த்து, உடம்பு நல்லா ஆரோக்கியமா இருக்கும். "A Sound Mind in a Sound Body" ன்னு கேள்விப்பட்டிருப்பே. இங்கே, நான் சொல்றபடி, விளையாட்டில இருக்கிற பசங்களுக்கு அது நிச்சயம் நடக்கும். அதனாலே, பசங்களுக்கு மனபலமும், உடல் வலிமையும் ஒரு சேர கிடைக்கும்.

"அண்ணே, ஏதோ 'நாலும், நாலும் எட்டு, அதான் விளையாட்டு' ங்கற மாதிரி ஆரம்பிச்சு, இது வேற லெவல் வாழ்வியல்ன்னு புரிய வச்சிட்டீங்கண்ணே. கடைசியா இன்னொரு கேள்வி... ஒருக்கால், பையன் ஒரேயடியா விளையாட்டுன்னு இறங்கி, படிப்புல சரியா கவனம் செலுத்தாம கோட்டை விட்டா என்னண்ணே பண்றது?"

"ஜெகா, நீ என்னா வெள்ளக்காரன் மாதிரியா தினந்தினம் பசங்களை கண்ணே, மணியே, தேனே, மானே ன்னு கொஞ்சிட்டு இருக்கே... நம்மாளுங்க பத்திதான் தெரியுமே... 'நல்லாப் படிச்சாதான் விளையாட அனுப்புவேன்னு சொல்லு... உன் பையன் நல்ல விளையாட்டு வீரன்னா, அவங்க பயிற்சியாளரே உன்னை தேடி வந்து என்ன பிரச்னை, ஏன் இவன் விளையாட வரலை, நான் என்ன உதவி பண்ணட்டும்ன்னு கேப்பாங்க... அதனாலே அந்த பயமே வேண்டாம். அது போக, ஊர்லேதான் பசங்க டாக்டர் ஆகணும், என்ஜினீயர் ஆகணும்ன்னு பிரஷர் போடறாங்கன்னா, இங்கேயும் அதையே செய்யலாமா, சொல்லு? விளையாட்டு வீரர்களுக்கும் நல்ல எதிர்காலம் இருக்குப்பா... விளையாட்டையே Career ஆ எடுத்த எத்தனை Professional Athletes / Players இருக்காங்க தெரியுமா?"

"அதனாலே கவலையே வேணாம். நான் முன்னாடி சொன்னா மாதிரி, Obedience, Discipline, Leadership Qualities, Give & Take, Caring & Sharing, Self Confidence, Self-Belief, Fun, Satisfaction இது கூட நல்ல நண்பர்கள், உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம்ன்னு இவ்ளோ நல்ல விஷயங்களை சும்மா அப்படி சாதாரணமா தர்ற விளையாட்டை உன் பசங்களுக்கு கத்து கொடுத்து சிறந்த மனிதர்களாக அவங்களை உருவாக்கலாம். பணமும், புகழும் கிடைச்சா அது போனஸ்... என்னா நான் சொல்றது?"

நான் பேசி முடிக்கவும், ஜெகா சற்றே உணர்ச்சிவசப்பட்டவனாக, "அண்ணே, உண்மையிலேயே என் சின்ன வயசுலே ஏன் விளையாடாம போயிட்டேன்னு இப்போ வருத்தப்படறேன். நீங்க சொன்னது சாதாரண விஷயமே கிடையாது... நிச்சயம் என் பசங்களை விளையாட அனுப்புவேன். அவங்க முன்னேறி சிறந்த விளையாட்டு வீரர்களா வர்றதுக்கு என்ன செய்யணுமோ, அதை கட்டாயம் செய்வேன்... ரொம்ப ரொம்ப நன்றிண்ணே. உங்களாலே, இன்னைக்கு ரொம்ப உருப்படியான ஒரு விஷயம் தெரிஞ்சிகிட்டேன்"

அப்போது, 'The next Station is Parliament' எனும் அறிவிப்பு வரவும், "சரி ஜெகா, நான் இறங்கணும்... சொன்னது ஞாபகம் வச்சிக்கோ. எதாச்சும் தகவல் வேணும்ன்னா கேளு" என்றபடி எழுந்தேன்...

"ஏண்ணே... ஒண்ணு பண்ணுவோமா... இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நீங்களும் அண்ணியும் நம்ம வீட்டுக்கு வாங்க. ஒரு பிரியாணியை போடுவோம். அப்படியே, நீங்களும் சித்ரா கிட்ட இதை பத்தி பேச்சு ஆரம்பிச்சு அவளையும் நம்ம சைடு இழுத்துடுவோம்... சரியா" என்றான்...

சிரித்தபடியே, கட்டை விரலை உயர்த்தி காண்பித்து, 'Done' என்று சொல்லிவிட்டு, எதிர்காலத்தில் நல்ல மனிதர்கள் / விளையாட்டு வீரர்கள் உருவாக ஒரு காரணியாக, நல்லதொரு விதையை தூவின திருப்தியில் இரயிலை விட்டு இறங்கினேன்.

**இல்லத்தரசு**

**கேதா**

பிள்ளைப் பருவத்தில் பெரியவராய் ஆனபின்னர்
வெல்லப் பல களங்கள் காத்திருக்கும் என்று சொல்லிப்
பள்ளியிலே பயின்ற பாடங்கள் ஏதினிலும் பக்குவமாய்க்
கற்றுத் தெளியாத களமொன்று காணீரோ

ஏட்டின் அறிவும் இணைந்த பல திறன்களும்
நயந்து நாம் வளர்த்த நாட்டமும்-நாளும்
முயன்று தெளிந்த முதல் ஞானத் தத்துவமும்
இணைந்தாலும் போதாது இவ்வரசை ஆண்டுவிட

எல்லோரும் ஆள்வதற்கு இருக்கின்ற ஓரரசு
கற்காலம் முதற்கொண்டு தொடர்கின்ற பேரரசு
குடிமக்கள் முடிமக்கள் யாவர்க்கும் பொது அரசு
அவரவரே ஆளுகிற அவரவரின் இல்லத்தரசு

சந்தைக்குப் போய் வந்து சமைத்து முடித்து
அடுப்படியைச் சமைத்த சுவடின்றித் துடைத்துத்
தானே வந்தணையும் தூசி உறிஞ்சி நிலம் துடைத்து
நிமிர வெட்டாத கொல்லைப் புல் கண்ணை உறுத்தும்

புல்லறுத்துக் கூட்டிப் பூமரங்கள் முகம் பார்த்து
நல்லபடி நீரூற்றி நாவறளுதென்று சொல்லி
ஒருமிடறு மெல்ல விழுங்கமுதல் நினைவுவரும்
கட்டணம் கட்டும் நாள் கடந்த கதை

மின்சாரம், எரிவாய்வு, காப்புறுதி, கடன்
சொல்லி முடியாத ஒருநூறு சேவைகளை
ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு மதிப்பிட்டு
உற்றதிது என்று கண்டு உடன்படலோ பெரும்பாடு

மக்களின்றி ஒரு நாட்டை மன்னவரும் ஆளுவரோ
பெற்றெடுத்துப் பேணிப் பக்குவமாய் வளர்க்கும்
மக்கள் தாம் நினைத்தபடி மன்னவரை ஆட்டுவதால்
மாநிலத்தில் இதுதான் மறுக்கவொண்ணா மக்களாட்சி

தலைவனும் தலைவியும் தளர்ந்தாலும் விழுந்தாலும்
இழுத்துச் சுமந்து ஆளுகிற இவ்வரசின்
பொறுப்பைப் பகிர மக்களிடம் கேட்டாலோ
பொறுப்பெல்லாம் உமக்கு அதிகாரம் எமக்கென்றார்

மக்கள் நலச் சேவைகளே மன்னவரின் கடனென்று
உற்றதெது உகந்ததெது என்று தினந்தேடிக் கண்டறிந்து
தாமும் வளர்ந்து தம் மக்கள் தமை வளர்த்துத் தமைச் சார்ந்தோர்
நலம் தீது யாவினிலும் கூடி நின்று நிற்காமல் ஓடும் அரசு இது

உற்றவர்க்காய் உருவாக்கி மற்றவர்க்காய் தினம் ஓடி
உற்றதெது உவந்ததெது உள் நெஞ்சின் தேவையெது
கண்டறியப் பொழுதின்றிக் காலப் பெருநதியின்
வெள்ளத்தில் தொலைக்கின்ற விளங்காத ஓரரசு

## எங்களை வாழவிடுங்கள்

**மெர்சி விக்டர்பாபு**

என்றும் மனிதனின் பேராசையைத் தூண்டும் நிலையான பொருள் ஒன்று இந்த உலகத்தில் சுதந்திரமாக வலம் வருகின்றது என்றால் அது பணத்தைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த வேகமான உலகில் நாம் மனிதர்களாக அல்ல இயந்திரங்களாகவே செயல்படுகின்றோம்.

பணம் இல்லையென்றால் நமக்கு வாழ்வே இல்லை. உலகில் வல்லரசு நாடுகளில் ஒன்றான ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் தங்கள் பிள்ளைகளை சுயமாகச் சம்பாதிக்க அவசரப்படுத்துவது ஏன்? இரண்டாம் தலைமுறையினராகிய நாங்கள் எங்களுக்குப் பிடித்த வாழ்க்கையை விடப் பெற்றோருக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ எத்தனை சவால்களை எதிர்கொள்கின்றோம் தெரியுமா? எவ்வளவு இன்னல்களைச் சந்திக்கின்றோம் தெரியுமா? பிள்ளைகள் சிறிது காலத்தில் நல்ல ஊதியம் பெற வேண்டும், நல்ல அழகான வீட்டைக் கட்ட வேண்டும், தரமான மகிழுந்தை வாங்க வேண்டும் என்று பெற்றோர்கள் வற்புறுத்துகிறார்கள். ஆனால் இத்தனையும் எங்களுக்கு எவ்வளவு மன அழுத்தத்தைக் கொடுக்கின்றது என்பதைச் சிறிதும் உணராதவர்கள்தான் பெற்றோர்கள்.

ஆஸ்திரேலியா நாட்டில் வாழும் இரண்டாம் தலைமுறையினருக்குத் தெரிந்ததெல்லாம் நன்றாகப் படித்து, உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தில் தங்கள் பட்டப்படிப்பை முடித்துவிட்டு பெரிய நிறுவனங்களில் வேலை செய்வதுதான். இதைச் சொல்லும் போதே மூச்சு விட முடியவில்லை. இன்று தமிழர்கள் பொறியியல், தொழில்நுட்பம் போன்ற பல துறைகளில் சாதனை புரிகிறார்கள். ஆனால், கலை ஓவியம் போன்ற துறைகளில் வேலை செய்வதில்லை. ஏனென்றால் இந்தத் துறைகளில் வேலை செய்வதால் வாழ்க்கையில் முன்னேற முடியாது எதிர்காலமே கிடையாது என்ற சிந்தனையைப் பெற்றோர்கள் கற்பிக்கிறார்கள்.

எங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி அதிகம் சிந்திக்கும் பெற்றோர்கள் எங்கள் சந்தோஷத்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. பெற்றோர்கள் தங்களுடைய தனிப்பட்ட ஆசைகளையும், கனவுகளையும் எங்கள் மீது திணிக்கிறார்கள். அதிகமான எதிர்பார்ப்புகளும் கட்டுப்பாடுகளும் எங்களுடைய ஆசைகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளன. இதனால் பெற்றோர்களுக்கு எந்தத் துன்பமும் இல்லை. பாவம் பிள்ளைகள்தான் அதிகத் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். எரிச்சல், மனச்சோர்வு, வெறுப்பு ஆகியவற்றால் தவறான முடிவுகளை எடுத்து தங்கள் உயிர்களைப் பறிகொடுக்கும் இளைஞர்கள்தான் ஏராளம். எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு இருக்கும் ஒரே கேள்வி இதுதான், ஏன் பெற்றோர்கள் எல்லோரும் ஒரு குறுகிய வட்டத்துக்குள் வாழ்கிறார்கள்? இதற்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்த சூழல் தான் காரணமா? பெரும்பாலும் பெற்றோர்கள் சற்று

கடுமையான வாழ்க்கை முறைகளையும் வறுமை போன்ற துன்பங்கள் நிறைந்த வாழ்க்கையே வாழ்ந்தவர்கள், இதனால் வெளிநாடுகளுக்குச் சென்று அதிகமான பணத்தைக் கண்டு பேராசை கொள்கிறார்கள் இதன் தாக்கம்தான் எங்களைப் போன்ற இளம் தலைமுறையினருக்குத் தடையாக இருக்கிறது.

பெற்றோர்கள் வாழ்ந்த காலம் வேறு, பிள்ளைகள் வாழும் காலம் வேறு என்பதைப் பெற்றோர்கள் உணர வேண்டும்.

புலி பசித்தாலும் புல் தின்னாது. பணமோ செல்வமோ குறைவாக இருக்கின்ற காரணத்திற்காக எங்கள் இலட்சியத்தையும் விருப்பங்களையும் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

பெற்றோர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் அன்பையும் அக்கறையும் நாங்கள் புறக்கணிக்கவில்லை. ஆனால் அவர்களைப் போல் இயந்திரங்களாக வாழ்வது எப்படி என்ற அறிவுரையைத் தான் வெறுக்கிறோம். பிள்ளைகள் நல்ல வாழ்க்கையை விரைவில் அமைத்துக் கொள்ள வேண்டிய அவசரம்தான் புரியவில்லை. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற பழமொழி காற்று அடிக்கும் நேரத்தில் நம்மை விழிப்பாக இருக்கச் சொல்கிறது. ஆனால் நாம் நினைக்கின்ற திசையிலும் நேரத்திலும் காற்றடிக்கும் என்ற உறுதியைத் தருகிறதா?

பெற்றோர்களே! தயவு செய்து இதைச் சிந்தித்துப் பாருங்கள். யாருடைய தயவும் இன்றி வாழ வேண்டும் என்று அவசரப்படும் பெற்றோர்களும் ஆடிப்பாடித் திரியும் வயதில் வேலையா? என்று தயங்கும் பிள்ளைகளும் தினமும் போர்க்களத்தில் சந்திக்கிறார்கள்.

எப்படி நாய் வாலை நிமிர்த்த முடியாதோ அதே போல் எங்களையும் மாற்ற முடியாது. எனவே பெற்றோர்களின் விருப்பமும் உங்களுடைய பிள்ளைகளின் விருப்பமும் ஒன்றல்ல என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

## ***Australian History and the Voice***

**Samrakshana**

*Please note, confronting themes are discussed.*

Before delving into the details, this essay acknowledges that the land being referred to as Australia, is Aboriginal land – and as the truth stands, sovereignty was never ceded.

For all the atrocious acts carried out on Aboriginal and Torres Strait Islander people for centuries, it would only be respectful to acknowledge that this land is rightfully theirs.

Australia was declared *Terra Nullius*, or empty land, by James Cook upon initial discovery in 1770 until 1992. This meant that the British *legally* declared the land as being unoccupied waste land, using this as a justification to take over Australia as it was then. They brought themselves and their own laws to colonise this country.

This was for two major reasons which would reap benefits for them, and traditionally be at the expense of others. The first reason was to expand their real-estate portfolio, and the second, to rehome their felons as they had run out of space in their own homeland.

On 26 January 1788, the First Fleet arrived in Australia and the British established their claim by raising the British flag on Australian soil. This was the first mark of the invasion.

For this reason, the occasion celebrated as Australia Day is a horrific event for the Aborigines, hence referred to as Invasion Day.

In adherence to their *terra nullius* narrative, the British did as they wished in order to maintain their power over the land and the existing population in Australia.

To understand the complexities around the livelihood of Aborigines in Australia even today, it is important to know about the truth of their history – Australian history, our history.

It is important to understand that they were fundamentally stripped of everything they had and knew, including their environment and their dignity.

Where does one begin to describe the brutalities executed by the British on Aboriginal peoples?

The colonisers not only took over the land and resources without the consent of the native inhabitants, but also violated them in unspeakable ways.

Australia's First Nations peoples were deemed as being racially incurable by the British, and seen as savages who ought to be civilised in alignment with Western principles of civilisation through their assimilation policies.

The invasion laws by which the British operated, enabled them to deprive Aborigines of their homes and natural living environments, and build their own dwellings. The laws also allowed them to shoot and kill the locals, as a sport. Aboriginal women were sexually abused and raped. Children were forcefully taken from their families and sent to white families as slaves.

All the dispossession, massacre, abuse and sexual violence undoubtedly left the remaining Aboriginal peoples in despair, and feeling stripped of their identity to say the least. Their connection to their people, their culture and land was severed.

The British did their best to obliterate the Aboriginal and Torres Strait Islander races.

It was not until 1967, that the Constitution recognised First Nations people to be a part of the Australian population.

As a result of all this, the impacts on the physical, mental and spiritual health of Australian First Nations peoples are indescribable. The many forms of trauma they faced then, they continue to grapple with, and are passed down from one generation to the next, haunting them to this day.

This explanation does not by any means cover the magnitude of effects of colonisation on the Aboriginal and Torres Strait Islander people. It merely scratches the surfaces, but does attempt to paint a picture of the revolting realities of Australian history.

Healing and recovering from everything the British did to the people, simply cannot occur without sincerity in apology, acknowledgement and reform. An apology must be heartfelt, acknowledgement must come with acceptance of wrongdoing, and reform must address the return of power over their own lives to the Aboriginals and Torres Strait Islanders.

An official apology was made to the First Nations people by Kevin Rudd in 2008 who was serving as Prime Minister at the time, as an attempt to reconcile. This was seen to be a preliminary step towards righting the wrongs of predecessors.

Without actions to follow-through however, an apology will not suffice in any case. Those actions can only be achieved through awareness and recognition by every individual who is currently involved in the making of law.

The Uluru Statement from the Heart was a development which came to existence through an iterative process involving hundreds of Indigenous Australians in 2017. This Statement is a display of consensus among the First Nations people in how they wish to see recognition of their past, present, and future in the Australian constitution. There are three components to the Statement: *Voice*, *Treaty* or *Makarrata* and *Truth*. These components have been designed as enablers of justice and self-determination for Indigenous Australians, in this sequence.

The Aboriginal and Torres Strait Islander Voice (the Voice) is a proposed advisory body which would independently provide input to the Government and Parliament.

A Treaty would follow, and bring the Indigenous and non-Indigenous people together in agreement, to provide authority and legal instruments for Aboriginal and Torres Strait Islander people to influence decision-making.

Truth-telling of the dark history will then be considered for what it really was.

The Voice as a committee, is a tool which can be used to politically empower the literal voices of those who identify as Aboriginal or Torres Strait Islanders. A means to demonstrate and prove that the only right way to go about decision-making, was to always involve the people in their own decisions. The people of this nation who have been subject to irreparable injustices for so long, by the very people who have control over them till date.

Listed below are the design principles of the Voice:

- The Voice will give independent advice to the Parliament and Government
- The Voice will be chosen by Aboriginal and Torres Strait Islander people based on the wishes of local communities

- The Voice will be representative of Aboriginal and Torres Strait Islander communities, gender balanced and include youth
- The Voice will be empowering, community-led, inclusive, respectful and culturally informed
- The Voice will be accountable and transparent
- The Voice will work alongside existing organisations and traditional structures.
- The Voice will not have a program delivery function
- The Voice will not have a veto power.

With growing awareness of cultural sensitivities and considerations of inclusivity increasingly improving, there are great chances that the advice provided by the Voice will be taken into account by lawmakers. This, along with the public pressures on the government across physical and virtual platforms are sure to push legislators towards the right decisions.

As such, establishing and driving the Voice would be a step closer to achieving something of equilibrium in terms of Indigenous representation and reclamation of power.

Australia has generally been considered as a land of opportunities, advocating for freedom of choice and abundant in its resources. We are known for welcoming migrants, and providing assistance to asylum seekers and refugees. It is also the reason for which many people willingly leave their homeland, to have a chance at a better future in what is thought to be a more progressive society.

It would be like preaching to the converted, to remind those who have broken free from the shackles of oppression and fled the discrimination caused by racial differences in their so-called homelands, in search of a better, more stable and just second home.

Our welfare system here is set up in such a way that those who earn more, must contribute a greater part of their earnings through income tax to larger pool of resources, which is theoretically distributed to those in more need. Whether or not there is consensus on this amongst the population, the economic infrastructure is built to appear as being an equitable one. That is, allocating resources based on circumstances and ensuring that the underprivileged are

catered to. These are systemic attempts to show progression towards equality for the population.

Progression and equality however, are concepts driven by political bias. If equality really was achieved through the progressive ideals of modern Australia, there would arguably be very little socioeconomic disparity. This would lead to similar outcomes for all individuals.

It is questionable how equitable or fair the system really is, in making opportunities available to those who require it. Perhaps the only people benefitting are those who already have more than enough to go around. Discrimination and bias are systemically entrenched, leading to the privileged growing into excessive consumers, and the disadvantaged left fighting to survive. The gap between the two ends of the socioeconomic spectrum only seem to widen further.

It is true that the majority of our Aboriginal people are still sitting at the bottom end of this spectrum. The *Closing the Gap* was only established in 2007, after a number of reports were released to show how far behind we had left our First Nations people. In comparison to the rest of the Australian population, Aboriginal and Torres Strait Islander people are known to have significantly poor outcomes in the areas including health, education, employment, justice, housing and more. They experience a lower life expectancy, lesser school completion rates in turn affecting employment rates, more deaths in custody, and instability in housing compared to their non-aboriginal counterparts. All this, due to negligence and the lack of importance on the lives and livelihoods of indigenous Australians.

It is the Australian Government's moral responsibility to show attempts in achieving the goals to close the gaps, and is undoubtedly something which is owed to the indigenous communities. As an act of comradery and empathy, it would go without saying that migrants such as ourselves should support initiatives such as the Voice which will expedite the process of closing the gap in inequality with the support of public money.

The Voice's pursuit is to make our First Nations people seen and heard. This can bring a world of change to the community, as they continue to work tirelessly in the background to ensure all efforts are made to liberate the Aboriginal population, whilst not affecting the remaining population.

After all, this can be the only way to even attempt to override the injustices they were put through by the colonisers (if that is even possible); and the only way

for the rest of us to offer thanks to them for permitting us to live, breathe, earn and play on these unceded lands.

Always was, always will be.

—

Foot Notes:

Aboriginal people, First Nations people, Aborigines – terms are used interchangeably to refer to this cohort.

*Terra Nullius* - The Latin term for the doctrine which was used in International Law to acquire land.

*felons* : felonies included trivial acts such theft of food and similar supplies by those experiencing great poverty, as well as more morally questionable and unjust acts.

*Self Determination* : Self-determination refers to the exercising of one's own choices to determine their outcomes. In this context, for Aboriginal and TS Islander communities, this allows them to determine their social, cultural and economic development and growth on their own without the Government making a decision for them which is likely to be inappropriate and even contribute to their detriment. A concept which perhaps requires an explanation of its own in the essay itself.

References


Uluru statement: https://ulurustatement.org/the-statement/view-the-statement/

Uluru Design Principles: https://ulurustatement.org/education/design-principles/

Closing the Gap : https://www.closingthegap.gov.au/

## வேகம் கெடுத்தாண்ட

**சாந்தி சிவகுமார்**

காலையில் ஒன்பதரை மணிக்கெல்லாம் கோர்ட்டில் இருக்கவேண்டும். பரபரவென்று கிளம்பிக்கொண்டிருந்தோம். அவரும் கூட வருகிறார் என்பதால் ஒரு தெம்பு உள்ளது என்றாலும் காவல் நிலையம், கோர்ட் எனும்போது சிறு படபடப்பும் எப்படியோ சேர்ந்துவிடுகிறது.

நீதிபதி முன் நிற்கப்போவதால் என்ன உடை உடுப்பது? உடையை வைத்து நம்மை கணிப்பார்களோ என்ற கேள்வி எழுந்தது. ஸ்மார்ட் காசுவல்தான் (smart casual) நல்லது. முன்ன பின்ன செத்திருந்தாதான சுடுகாடு தெரியும். இந்தியாவிலும் சரி, ஆஸ்திரேலியாவிலும் சரி கோர்ட் பக்கமே போனதில்லை.

எல்லாத்தையும் செய்திட்டு புள்ளையாண்டான் கிளம்பி வேலைக்கு போயிட்டார். நாம அல்லல்பட வேண்டியிருக்கு. மகன் மேல் சிறு கோபம் வந்தது. வேண்டாம். கோபப்பட்டு ஆகப்போவதென்ன? இதுவும் ஒரு அனுபவமே. Be positive என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

"வாரநாள், டிராபிக் அதிகமாயிடும். கிளம்பிட்டியாமா?" என்றபடியே சிவா வந்தார்.

"டு மினிட்ஸ்" என்றபடியே நினைவுகளில் இருந்து வெளியேறினேன்.

நல்லவேளை, குளிர்காலம் இல்லை. ஜாக்கெட், ஸ்கார்ப், கையுறை, சாக்ஸ் என்று இதுகளை மாட்டவே பத்து நிமிடம் வேண்டும். டிசம்பர் மாதம், இன்னும் ஒரு வாரத்தில் கிருஸ்துமஸ் விடுமுறை தொடங்கிவிடும். பையையும், தண்ணீர் பாட்டிலையும் எடுத்துக்கொண்டு கிளம்பினோம்.

சிவா சொந்தமாக கம்பெனி வைத்துள்ளார், தனியாளாக நடத்துகிறார். அதனால் என்னுடைய wfh பகுதி நேர வேலை, work from companyஆக மாறிவிட்டது. செவ்வாய் கிழமைகளில் கம்பெனியில்தான் இருப்பேன். மதிய உணவு முடித்து, போக்குவரத்து நெரிசலுக்கு முன் கிளம்பிவிடுவேன்.

அப்படியொரு பொழுதில் மகனிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்தது.

"....."

"ஏன், என்னாச்சு?"

"..........."

"அதுக்கு ஏன் வண்டியை (car) எடுத்துக்கிட்டுப் போறாங்க?"

"..............."

"நீங்க போனை போலீசிடம் கொடுங்க, நான் அம்மாவை பேச சொல்றேன்".

ஆஸ்திரேலியா போலீஸ் அதிகாரி தன்மையாக பேசினார்.

"பயப்படாதே, உன் மகனுக்கு ஒன்றுமில்லை. அவருடைய நண்பர் உன் வண்டியை அதிவேகமாக ஓட்டியதால் நாங்கள் வண்டியை பறிமுதல் செய்கிறோம்".

"பொதுவாக அபராதம்தானே போடுவீர்கள்?"

ஆமாம், ஆனால் இவர் 50ல் 100 கிமீ ஓட்டிச் சென்றதால் எங்கள் அதிகார வரம்பை மீறியது. அதனால் வண்டியை பறிமுதல் செய்து பௌண்டில் வைத்திருப்போம். ஒரு மாதம் பொறுத்து நீ உன் வண்டியைப் பணம் செலுத்தி எடுத்துக்கொள்ளலாம் ஓட்டியவர் கோர்ட்டிற்குச் செல்லவேண்டும். கோர்ட் அவருக்கு என்ன அபராதம் என்று முடிவுசெய்யும்..

பணம் செலுத்தியா?

ஆம், பௌண்டில் வைத்திருப்பதற்கான வாடகை.

இதில் என் மகனின் நிலை என்ன?

அவர் பயணியாக இருந்ததால் ஒன்றும் பிரச்சனை இல்லை. உன் வண்டிதான் ஒரு மாதம் பௌண்டில் இருக்கும்.

என் மகனும், அவரது உற்ற நண்பரும் ஒரே பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்கள். இப்பொழுது ஒரே இடத்தில் வேலை செய்கிறார்கள். ஒரே உடற்பயிற்சி கூடம். எல்லாவற்றிலும் கூட்டுக் களவாணிகள். அனைத்து இடங்களுக்கும் ஒரே வண்டியில் (car pooling) ஒன்றாகவே செல்வார்கள். அன்று நண்பன் மதிய உணவு கொண்டு வராததால், இவர் சாப்பிட்டபடியே வர, அவர் வண்டியை ஓட்டிச்செல்லும்பொழுதுதுதான் இந்த மகா சம்பவம் நடைபெற்றது.

எங்கள் இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஓட்டியவனை விட்டுவிட்டு வண்டியைப் பிடிப்பானேன்? சிறிது நேரத்தில் நான் இருவரையும் வேலையிடத்தில் இருந்து அழைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தேன். நண்பனுக்கு என்னைப் பார்க்க முகமில்லை என்றாலும் மன்னிப்புக் கேட்டான். பாவமாக இருந்தது.

It's okay, How do you feel? Are you Okay? என்றேன்.

I am fine, I am fine என்றான். பதட்டமாக இருந்தான். என் மகனார் வாயையே திறக்கவில்லை.

மாலை சிவா வந்ததும், வண்டியை ஒரு மாதம் பௌண்டில் விடக்கூடாது எப்படியாவது எடுத்துவிடவேண்டும் என்ற முடிவோடு இருந்தார். பௌண்டில் இருந்தால் வண்டி நாசமாகிவிடும் என்பது அவர் எண்ணம். எங்கள் எதிர்

வீட்டிலிருப்பவர் காவல்துறையில் வேலை செய்பவர் என்று தெரியும். அவருக்குத் தொலைபேசியில் செய்தி அனுப்பிவிட்டுக் காத்திருந்தோம். எதிர் வீடுதானே, நேரிலேயே போய்ப் பேசிவிட்டு வரலாம் எனக் கிளம்புகையில், அவரே கதவைத் தட்டினார்.

"உங்கள் செய்தி கிடைத்தது. நேரில் பார்த்துப் பேசி மேலதிக விவரங்களை தெரிந்துகொள்ளலாம் என வந்தேன்" என்றார். நாங்கள் விளக்கிச் சொன்னவுடன் தன் உடன் வேலை செய்பவர் முன்பு Highways Patrolling வேலை பார்த்தவர். அவரிடம் விசாரித்துச் சொல்கிறேன் என்றவர், ஒரு மணி நேரத்திற்குள் வந்து அதிவேகமாக சென்றதால், மேஜிஸ்ரேட்தான் இதில் முடிவுசெய்யவேண்டும் என்றும், நீங்கள் விரும்பினால் ஒரு பாரம் பூர்த்திசெய்து கொடுத்து Dandenong நீதிமன்றத்தில் உங்கள் வண்டியைத் திரும்பப் பெற விண்ணப்பிக்கலாம் என்றார்.

அடுத்த நாள், நானும் சிவாவும் நீதிமன்றத்துக்குச் சென்று, நான் வேலைக்கு செல்வதாலும், வயதான மாமியாரை பார்த்துக் கொள்ளவும் என் வண்டியை உடனே திரும்ப தரவேண்டும் என எழுதிக்கொடுத்தோம். நீதிமன்றம் மூடுவதற்கு அரை மணி நேரமே இருந்ததாலும், இன்னும் ஒரு வாரத்தில் கிருத்துமஸ் விடுமுறையும் தொடங்கிவிடும் என்பதாலும் பாரம் கொடுக்க அதுவே கடைசி நாள் என்று அலுவலகப் பெண் தெரிவித்தார். யாரிடமும் ஆலோசனை கேட்கத் தோன்றாமல் பாரத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தோம். விடுமுறைக்கு ஒரு நாள் முன்பு தேதி கொடுத்தார்கள். "ஒன்பதரை மணிக்கெல்லாம் இருக்கவேண்டும். நான்கு மணிக்குள் எப்பொழுதுவேண்டுமானாலும் கூப்பிடுவார்கள்" என்றார் அலுவலகப் பெண்.

இதற்கிடையில், இந்த சம்பவத்தைப் பற்றி பேசும்பொழுதெல்லாம் ஒன்று நாங்கள் கோபித்துக்கொண்டோம் அல்லது மகன் கோபித்துக்கொண்டார். இரண்டு நாட்களாகியும், நண்பன் இதைப்பற்றி அவர் வீட்டில் எதுவுமே சொல்லவில்லை. ஏன் என்று மகனிடம் கேட்டால்,

"அது, அவன் பிரச்சினை அம்மா. நீங்கள் ஏன் அதைப்பற்றி யோசிக்கவேண்டும்" என கேட்டவுடன் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"எப்படிச் சொல்லாமல் இருக்கிறான், அவன் பெற்றோருக்குத் தெரியவேண்டாமா?"

"அவனுக்குப் பதினெட்டு வயதாகிறது. அதை அவன் முடிவு செய்வான்" என்றார்.

வாயடைத்துப்போனேன். கோபம் வந்தாலும் காட்டிக்கொள்ள முடியவில்லை. சிவாவிடம் புலம்பித் தள்ளினேன். இரண்டு நாள் விடு. பிறகு பேசலாம் என்றார்.

அன்றிரவே, நண்பனின் காரில் உடற்பயிற்சி கூடத்திற்குச் சென்று வந்தார். எங்களுக்குத் தாங்க முடியாத கவலையும் ஆயாசமும் ஏற்பட்டது. இதைப்பற்றிக் கண்டிப்பாக பேசவேண்டும் என முடிவு செய்து இரவு உட்கார வைத்துப்

பொறுமையாக விளக்கினோம். கொஞ்ச நாட்களுக்கு நண்பருடன் வண்டியில் செல்லவேண்டாம் என்றதற்குக் கடுமையாக உணர்ச்சிவசப்பட்டார்.

He is not that stupid amma. He will not speed again. You are worrying too much என்றார்.

We are your parents. We worry about your safety. Why can't you understand that? It just happened today and you want to act like nothing happened?

Okay, then how am I supposed to go to work and gym?

அம்மா உங்களை டிராப் செய்து பிக்கப்பும் செய்வார் என்று சிவா சொன்னவுடன்

You guys are unbelievable. This is very very unnecessary என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் புகுந்துகொண்டார்.

இன்னும் நான்கு நாட்கள்தான். விடுமுறை தொடங்கிவிடும். நான்கு நாட்களும் காரில் என்னிடம் பெரிதாக எதுவும் பேசவில்லை. நண்பன் தன் வண்டியில் சென்றுகொண்டிருந்தார். எனக்கு புரியவேயில்லை. அதிவேகமாக ஓட்டியவன் தொடர்ந்து ஓட்டிக்கொண்டிருக்கிறான். என்ன விதமான சட்டங்கள்? விதிகள்?

பாதுகாப்பு சோதனைகள் முடிந்து எந்த அறை என்று தெரிந்துகொண்டு வெளியில் காத்திருக்கத் தொடங்கினோம். நம் பெயரை ஒலிபெருக்கியில் அழைக்கும்பொழுது உள்ளே செல்லலாம். ஒரு மணி நேரம் கழித்து சிவா உன் பெயரைத்தான் கூப்பிட்டார்கள் என்றார். என் பெயருக்கும் அவங்க கூப்பிட்டதற்கும் சம்மந்தமேயில்லை,

''ஏன்பா டென்ஷன் பண்றீங்க'' என்றேன். ''இல்லை, எதுக்கும் போய் நீ கேள்'' என்றார்.

எங்கள் வீட்டில், பாரம் பூர்த்தி செய்ய, தொலைபேசியில் பேச, விசாரிக்க போன்ற வேலைகளுக்கு என்னை நேர்ந்து விட்டுருக்கிறார்கள். சலிப்புடன் சென்று, அறைக்கு வெளியில் இருந்த அதிகாரியிடம் கேட்டேன். அவர் தனக்கு ஒன்றும் தெரியாதெனவும், வேண்டுமானால் நீ உள்ளே சென்று உட்காரலாம் என்றும் கூறினார். சரி, என்னதான் நடக்கிறது பார்க்கலாம் என உள்ளே சென்று உட்கார்ந்தோம்.

கதவைத் திறந்துகொண்டு அறையின் உள்ளே நுழைந்தோம். வெளிச்சம் மிதமாக இருந்தது. நாங்கள் நுழைந்தவுடன் அமர்வதற்கு இரு பக்கமும் மரத்தாலான இருக்கைகள் இருந்தன. இரண்டு பக்கமும் 40 - 50 பேர் வரை அமரலாம். ஒரு வயதான தம்பதியும் மற்றும் ஒரு தம்பதி தன் வக்கீலுடனும் அமர்ந்திருந்தனர். மற்றபடி, அறை காலியாகவே இருந்தது. நுழைவாயிலுக்கு நேர் எதிரே வெள்ளைக்கார நீதிபதி நடுநாயகமாக, உயரமானதொரு மேடையில்

அமர்ந்திருந்தார். அறுபதுகளில் இருப்பார். கீழே அமர்ந்திருந்த தன் உதவியாளப் பெண்களிடம் சிரித்துப் பேசி சகஜமாகக் காணப்பட்டார். இரண்டு பக்கமும் குற்றவாளி/சாட்சி சொல்பவர் ஏறி நிற்கும் கூண்டு. காவல்துறையில் இருந்து ஒரு அதிகாரி எதிரில் அமர்ந்திருந்தார். எல்லா வழக்குகளைப் பற்றியும் நீதிபதி அவரிடம் கேட்டுவிட்டு பின்பே குற்றம் சாட்டப்பட்டவரிடம் உரையாடினார்.

எங்கள் கதையை மறந்து மற்றவர்களின் கதையையும் நீதிபதி எப்படிக் கையாள்கிறார் என்பதிலும் ஆர்வமானேன். நேரம் போகப் போக சிவா அலுத்துக்கொள்ளத் தொடங்கினார். உன் முறை எப்பொழுது வரும் என்று உதவியாளப் பெண்ணிடம் கேள் என்றார். எனக்கோ நெருங்கவே அச்சமாக இருந்தது. அதைக் காட்டிக்கொள்ளாமல் இந்த ஊரில் அதெல்லாம் நடக்காது, பேசாம இருங்க என்றேன்.

நீதிபதி, பதின் வயது உள்ளவர்களிடம் கருணையுடனும், அக்கறையுடனும் நடந்துகொண்டார். அறிவுரைகளும் நேர்மறை எண்ணமும் தோன்றப் பேசினார். ஒரு வழக்கில், *21* வயதுடைய ஆண் தன் தாய் தந்தையருடன் வந்திருந்தார். எலக்ட்ரிஷியனாக வேலை செய்பவர். காவல் அதிகாரியிடம் வழக்கைத் தெரிந்துகொண்டபின், நீதிபதி அவரை பார்த்துக் "கண்டேன் சீதையை" என்று அனுமன் சொன்னதுபோல் எடுத்தவுடன் " I am not going to convict you today" என்கிறார். தாய் வெடித்து அழுதுவிட்டார். அவரின் மாமாவின் நல்லொழுக்கச் சான்றிதழும், தாய் தந்தையரின் பின்புலமும், இதுவே முதல் முறை என்பதாலும் விடுவிப்பதாக கூறினார். தாயின் அழுகையைப் பார்த்து எனக்கு வயிறு பிசைந்தது. பையனின் முகத்தில் அப்பாடா என்று பாரம் இறங்கி விடுதலையின் புன்சிரிப்பு. மூவரும் வெளியேறினர்.

அடுத்த வந்த குடும்ப வன்முறை வழக்கில், கருணையும், பண்புமாக பேசியவரின் மறு பக்கத்தைப் பார்க்க முடிந்தது. உன் மனைவியும், குழந்தையும் உன்னைப் பார்த்துப் பயப்படுகிறார்கள். வெட்கமாக இல்லையா உனக்கு என்று கடிந்துகொண்டார். கண்டிப்புடனும், கோபத்துடனும் அடுத்தமுறை இம்மாதிரி நடந்தால் சிறைதான் என எச்சரித்து அனுப்பினார்.

அதற்குள், உணவு இடைவேளை வந்துவிட்டது. ஏற்கனேவே பத்து நிமிடம் காபி இடைவேளையும் முடிந்திருந்தது. சிவா மறுபடியும் போய்க் கேள் என்றதால் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு போய்க் கேட்டேன். உணவு இடைவேளை முடிந்தவுடன் கூப்பிடுவதாகக் கூறினார். வரிசைப்படிதான் வரும் என்றார்.

சாப்பிடும்பொழுது, நீதிபதி பார்ப்பதற்கு ரொம்பப் பிராக்டிகலான ஆளாகத் தெரிகிறார், எப்படி ஒவ்வொரு வழக்கையும் கையாண்டார் எனப் பேசிக்கொண்டோம். நமக்கு வண்டிகிடைத்தால் சரி. இதுவும் ஒரு அனுபவம்.

மூன்று மணியளவில் என் பெயரை அழைத்தார்கள். நான் முன்னே சென்று நின்றேன். காவலதிகாரி சுருக்கமாக என் வழக்கை கூறினார்.

So you didn't drive the car, your son did.

No Sir, My son’s friend did.

But the car is yours.

Yes, your honour.

Sir ஆ Your honour சொல்லணுமா என்ற குழப்பம்.

காவலதிகாரியிடம், வண்டியைத் தர ஆட்சேபம் உள்ளதா எனக் கேட்டார். அவர், நான் குறிப்பிட்ட இரண்டு காரணங்களையும் மறுத்தார்.

இந்த ஒரு மாதத்திற்கு உன் கணவர் அவர் தாயைக் கவனித்துக்கொள்ள முடியாதா? அவரிடம் வண்டி இருக்குதானே? என கேட்டார்.

இரண்டு வரிசைகளுக்கு பின் அமர்ந்திருந்த என் கணவரை பார்த்து அவர்தான் உன் கணவரா என்றார். சிவா எழுந்து நிற்கவும், please sit down gentleman என்றார்.

"I don't feel sorry for you lady" என்னது ...

I feel very very sorry for you....

ஆனால் இந்தக் காரணங்களுக்காக வண்டியைத் திருப்பித் தர இயலாது. நீ வேலைக்குச் செல்வதற்கு மாற்று ஏற்பாடுகளை செய்துகொள். ஆகும் செலவை அந்தப் பையனிடம் வாங்கிக்கொள்.

No no Sir, that's not the issue. I didn't do anything wrong, it's my car...

மனதில் வார்த்தைகள் ஓடியதே தவிர வாயில் காற்றுக்கூட வரவில்லை.

அப்படியே நின்றுகொண்டிருந்தேன். அதைப் பார்த்த நீதிபதி You are free to go என்றபடியே உதவியாளரைப் பார்த்து next என்றார்.

நான் திரும்பி கணவரைப் பார்க்க அவர் "வா போகலாம்' என்றார்.

வண்டியில் ஏறி உட்கார்ந்தததும் " என்னப்பா இது, நான் என்ன தப்பு பண்ணன்? அப்ப பிடிச்சாங்க சரி, இப்ப சூழல் தெரிஞ்சதும் வண்டியைத் திருப்பிக் கொடுக்கலைன்னா எப்படி?"

"இப்ப வந்து என்கிட்டே கேளு? அங்க கேட்க வேண்டியதுதானே?"

மகனுக்குச் செய்தி அனுப்பிவிட்டுப் பேசாமல் வீடு வந்து சேர்ந்தோம். வண்டி கிடைக்காததைவிட அவரிடம் எதுவும் பேசாமல் இப்படி அமைதியாக நான் வந்ததை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. என் பேச்சு, தைரியம் எல்லாம் எங்கே

போச்சு? மாய்ந்துபோனேன். மிஞ்சி மிஞ்சிப் போனால் இப்படி எல்லாம் பேசக்கூடாது என்று எச்சரித்து அனுப்பியிருப்பார்கள். அவ்வளவுதானே? என்னை நானே நொந்துகொண்டேன். இரண்டு நாட்களாகியும் என்னை நானே மன்னிக்கவில்லை.

சட்டம் படிக்கும் தோழியின் மகளிடம் கேட்டதற்கு அவர் "நீங்கள் கொடுத்த காரணங்களை வைத்து முடிவு எடுத்துள்ளனர். மூல வழக்கிற்கும், இதற்கும் சம்மந்தமில்லை. வழக்கறிஞர் வைத்து வாதிட்டால் வண்டியை எடுத்துவிடலாம் என்றார். ஆனால் விடுமுறை என்பதால் ஒரு மாதம் ஆகிவிடும். அதற்குள் வண்டி தாமாகவே கிடைத்துவிடும் என்பதால் பயனில்லை என்றார்.

ஒரு மாதம் பௌண்டில் வைத்திருந்ததற்கு வாடகை $1048. அதை மகனின் நண்பனே வீடு தேடி வந்து கொடுத்துவிட்டு மீண்டும் மன்னிப்புக் கேட்டார். தாய் தந்தையரிடம் சொல்லுவதுதான் நல்லது. ஏன் சொல்லத் தயங்குகிறாய் என்றதற்கு புன்சிரிப்புடன் "பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

ஒரு மாதம் பொறுத்து, வண்டியை எடுக்கச் சென்றபொழுது ஏன் உன் நண்பன் வீட்டில் சொல்லத் தயங்குகிறான், நீயாவது எடுத்துச் சொல்லக்கூடாதா என்றதற்கு

I don't know amma. I don't understand why you are so obsessed with this?

obsessed ஆ நானா ...

பௌண்டில் பணம் கட்டிவிட்டு, வண்டி வருவதற்காக காத்திருந்தேன். கதவு திறந்து, வண்டி மெதுவாக எந்த வித மாற்றமும் இன்றி அலுங்காமல், குலுங்காமல் வெளியே வந்தது.

## முதுமையிலும் இளமையா?

**சியாமளா சோமசுந்தரம்**

தனிமையில் இருக்கும்போது நான் பலமுறை சிந்தித்ததுண்டு, என்னைப் பற்றியல்ல, என் போன்ற மூத்தோரைப் பற்றியே!

மூத்தோரிலும் பலதரப்பட்டவர்களைப் பார்த்துப் பேசுகிறோம். இதற்கு மூத்தோர் ஒன்று கூடல்கள் எமக்குப் பேருதவி செய்கின்றன. ஆத்மார்த்தமான பல நண்பர்கள், நண்பிகள் எமக்குக் கிடைத்திருக்கின்றனர்.

எம் உடல்தான் முதுமையின் வயப்படுகிறது. உள்ளம் என்றும் இளமைதான். எம்மால் பாடவும் முடியும், ஆடவும் முடியும், நாடகம் போடவும் முடியும், மேடையில் பேசவும் முடியும், விவாதம் புரியவும் முடியும் என்பதைப் பல மூத்தோர் நிரூபித்தும் காட்டியுள்ளனர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது மனம் மிகவும் மகிழ்வடைகிறது.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்;

உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமையப் பல பிள்ளைகள் தம் பெற்றோரை இயன்ற அளவு பராமரிப்பது உவகையை ஏற்படுத்துகிறது. வெள்ளிக்கிழமை பகல் வேளையில் என் மூத்த சகோதரியுடன் கோவிலுக்குச் செல்லும்போது, வயதில் மிகவும் மூத்தவர் சிலரைக் கண்டு அவர்களுடன் பேசியுள்ளேன். "கூட்டம் அதிகம் இல்லாத நேரம் தாங்கள் சுவாமி தரிசனம் செய்ய வந்ததாகவும், தமது பிள்ளைகள் அதற்கு ஏற்பாடு செய்து தந்துள்ளதாகவும்" கூறினார். மேலும் "தமது வேலைப்பழு, பிள்ளைகளின் கல்வி, வீட்டின் தேவைகள் இவ்வளவு சுமைகளின் மத்தியிலும் தம் பெற்றோரையும் கவனிக்கும் எம் பிள்ளைகள் நலமாகவும், சந்தோஷமாகவும் வாழ வேண்டும்" என இறைவனிடம் பிரார்த்திப்பதாகவும் கூறினர். இது மூத்தோரின் மனம் நிறைந்த வாழ்த்தாகும். இதற்கு ஈடாக எதையுமே கூறவோ, பெறவோ முடியாது. பெற்றோர் இளமைக் காலத்தில் தம் பிள்ளைகளை எப்படிக் கவனித்தார்களோ அதேபோல பிள்ளைகளும் தம் பெற்றோரைக் கவனிப்பதுதான் செய்நன்றி மறவாமை ஆகும்.

மூத்தோரில் சிலர் கணவனையும், சிலர் மனைவியையும் இழந்து ஜோடியைத் தொலைத்த புறாக்களாகத் தனிமையில், பேசுவதற்கும் யாருமற்ற நிலையில் தவிக்கின்றனர். இந்நிலை தொடர்ந்து அவர்களின் மனநிலையும் பாதிப்படைகிறது. இந்நிலை பிள்ளைகளுக்கு அதிகத் துன்பத்தைக் கொடுக்கும். இதைத் தவிர்க்க அவர்கள் வெளியே சென்றுவர வழி வகைகளைச் செய்யவேண்டும்.

நாணயத்திற்கு இரு பக்கம் உள்ளது போலச் சில பிள்ளைகள் நேர்மாறாக உள்ளனர். எம்மில் மூத்தோர் பலரும் ஈழப்போரில் தாய் நாட்டிலிருந்து புலம்

பெயர்த்தோரே ஆவர். அவர்கள் தம் பிள்ளைக்கும் பல விதங்களிலும் உதவி செய்தே வருகின்றனர். ஆனால் பிள்ளைகள் தம் பெற்றோரின் தளர்ச்சியடைந்த உடலையும், அவர்களின் உடலைத் தாக்கியுள்ள நோய்களையும் மட்டுமே பார்க்கின்றனர். அவர்களின் மனதையும், அதன் இளமையையும் பார்ப்பதில்லை. ஏனெனில் அதை வெளிப்படையாகப் பார்க்க முடியாது. பெற்றோருடன் பேசிப் பார்ப்பதன் மூலமே இதை உணர முடியும். பிள்ளைகளுக்குத்தான் அதற்கு நேரம் கிடைப்பதில்லையே.

மூத்தோர் தம் வீட்டினுள்ளேயே பொழுதைப் போக்குவதைத் தவிர்த்து அவர்களும் தமது வயதை ஒத்தவர்களுடன் பொழுதைக் களிக்க உதவ வேண்டும். அவர்கள் விரும்பும் இடங்களுக்கும், ஆலயங்களுக்கும் செல்ல உதவ வேண்டும். பொழுதுபோக்கிற்கும் வழியமைத்துக் கொடுப்பது நல்லது.

என் மூத்த சகோதரிக்குக் குழந்தைகள் இல்லை. எங்களுடன் தான் இருக்கிறார். அவர் என் மகளை 3 வயதிலிருந்தே தன் மகள் போல் பாசத்தைப் பொழிந்து வளர்த்தவர். இன்று உடல் தளர்ந்து, பல நோய்களுக்கும் உள்ளாகி இருந்தாலும் மகிழ்வாக இருக்கிறார். அவரை வெளியே அழைத்துச் செல்லப் பல ஒழுங்குகளையும் என் மகள் செய்து தந்துள்ளார். பல சிரமங்களின் மத்தியிலும் என் மகள் என் சகோதரியின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறாள் என்பதைப் பெருமிதத்துடன் கூறுகிறேன்.

இன்று மூத்தோராகிய நாம் வாழ்வது அவுஸ்திரேலியாவில். இங்கே பல வசதிகளையும் அரசாங்கம் எமக்குச் செய்து தந்துள்ளது. ஓய்வூதியம் கிடைக்கின்றது. போக்குவரத்துக்குப் பிரயாணச் சலுகை (டக்ஸி கார்ட்) உள்ளது. ஆனால் இதையெல்லாம் பெறுபவர் சிலரே. மூத்தோர் பலரும் ஒன்று கூடலுக்குச் செல்லவோ, பிற இடங்களுக்குச் செல்லவோ அதிக சிரமப்படுகின்றனர். அவர்களுக்கு மனம் இருந்தாலும் மார்க்கமில்லை. மரணத்தை விடக் கொடுமையானது தனிமை.

அன்பையும், பாசத்தையும் கொட்டி வளர்த்த பெற்றோரை, பிள்ளைகளே சுமையாக எண்ணுவது தவறு. அம்மா தன் பிள்ளைகளுக்கு விருப்பமான உணவைச் சமைத்துக் கொடுத்ததும், அப்பா வேலையால் வந்ததும் "பிள்ளைகள் சாப்பிட்டார்களா?" எனக் கேட்ட பின்பே தன் உணவில் கைவைத்ததும் பிள்ளைகளுக்கு ஞாபகத்தில் வருவதில்லையா?

பிள்ளைகளே, உங்கள் அன்றாடக் கருமங்களில் உங்கள் தாய், தந்தையருடன் 10 நிமிடமேனும் உரையாடுவதையும் ஒன்றாக இணைத்துக்கொள்ளுங்கள். இச்செயற்பாடு அவர்களின் மனதை இலேசாக்கி மனமகிழ்வை ஏற்படுத்தும். தமது மனக்குறைகளை வாய்விட்டுக் கூறுவார்கள். மன இறுக்கம் அகன்று மகிழ்வாக இருப்பார்கள். அவர்களுக்கு இனிப் பொன்னோ பொருளோ தேவையில்லை. மனமகிழ்ச்சி ஒன்றுதான் வேண்டும். இதுவே பிள்ளைகளின் வாழ்வையும் உயர்த்தும்.

என் மனதில் ஆழமாகப் பதிந்த வடு ஒன்று உள்ளது. இது காலத்தாலும் அழிக்க முடியாதது. சம்பவத்தை மட்டும் கூற விரும்புகிறேன்.

2000ஆம் ஆண்டு தென்மராட்சி இடப்பெயர்ச்சியில் மக்கள் அனைவரும் தம் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து கைதடி தரவையினூடாக யாழ் நோக்கி நடந்து சென்றனர். நாமும் சென்றோம், பாம்புகள் போல் பற்றையினுள் ஊர்ந்தும், பதுங்கியும் சென்றோம். சீறிப் பாய்ந்து வரும் குண்டுகள். வழி நெடுகிலும் சடலங்கள். நீர்வேலியில் எனக்குத் தெரிந்த பலரும் இயன்றளவு பொருளுடன் வந்திருந்தனர். அதில் ஒரு பெண் குழந்தை என்னிடம் ஓடிவந்தாள். "டீச்சர் சுகமா?" என்றாள். என்னிடம் படித்தவள். நான் அவளை அணைத்தவாறே "எல்லோரும் வந்து விட்டீர்களா?" எனக் கேட்டேன். அவளும் "அம்மா, அப்பா, நான், தம்பி எல்லோரும் கஷ்டப்பட்டு வந்தோம். தம்பியையும், என்னையும் அப்பா சைக்கிளில் ஏற்றி உருட்டி வந்தார்." என்றாள். "அப்போ அப்பம்மா வரவில்லையா?" எனக் கேட்டதற்கு அவள் அளித்த பதில் இடிபோல் என் செவிகளில் விழுந்தது. "அவர் நடக்கக் கஷ்டப்பட்டார் என அப்பா அவரை அழைத்து வரவில்லை. 10 நாட்களுக்குப் பிறகு சைக்கிளில் போய் அழைத்து வருவார்." இதுவே அவள் கூறிய பதில். வந்தவர்கள் உடனே திரும்ப முடியாது என்பது பாவம் குழந்தை அவளுக்குத் தெரியவில்லை. திரும்பவும் நாம் தென்மராட்சி சென்றது, 1 1/2 வருடங்களின் பின். நடந்து வந்த களை, வீட்டை விட்டு வந்த கவலை, எல்லாவற்றையும் விஞ்சி விட்டது இப்பேரிடித் தகவல் இதிலிருந்து மீள ஒரு வாரம் சென்றது.

இன்று வரை மூத்தோரிடம் அன்பு செலுத்த இதுவும் ஒரு காரணமாயிருக்கலாம். மூத்தோரை அரவணைத்து அவர் தம் தனிமையைப் போக்கி நாமும் மகிழ்ந்து அவர்களையும் மகிழ்விப்போம்.

மூத்தோரே, உங்களுக்கும் ஓர் பணிவான வேண்டுகோள். நீங்கள் வயதில் மூத்தோர் எனக் கூறிக்கொண்டு பிள்ளைகளுக்குப் புத்திமதி கூறுகிறேன் என்று புறப்பட்டு விடாதீர்கள். நீங்கள் வாழ்ந்த காலம் வேறு. உங்களை விடவும் உங்கள் பிள்ளைகள் புத்திசாலிகள். உலக அறிவு அவர்களுக்கு அதிகம். ஆனால் அவசரயுகம். நேரமோ குறைவு, வேலையோ அதிகம். பெரியவர்களான நீங்கள் நிலைமையைப் புரிந்து செயலாற்ற வேண்டும். அப்போது தான் வீட்டில் நிம்மதியும், மகிழ்ச்சியும் நிலவும்.

1967இல் "இருக்கும் பிடி சோறு தனக்கென்று எண்ணாமல் கொடுக்கின்ற கோவிலது" என்ற பாடல் மூலம் தாயைச் சிறப்பித்துப் பாடிய கவிஞர் கண்ணதாசன், இருக்கும் பிடி சோற்றையும் தான் உண்ணாமல் குழந்தைகளுக்குக் கொடுத்து, நீரால் வயிற்றை நிரப்பி, ஈற்றில் நோய் வாய்ப்பட்டுப் பிள்ளைகளுக்குச் சுமையாகி மரணத்தைத் தழுவிய தாயைப்பற்றிய சோகப் பாடல் பாட இன்று நம்மிடையே இல்லை. இத்தாயின் செயலானது தன்னையும் வருத்திப் பிறரையும் வருத்தமடையச் செய்வதே என்பது எனது கருத்தாகும். இதையே இன்றைய மூத்தோர் செய்கின்றனர். மனதில் உள்ள பாரங்களைப் பிள்ளைகளிடம் கொட்டி விடுங்கள். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

இதையே இன்று 2023இல் வாழும் ஒரு தாயின் செயலைப் பார்ப்போம். அவள் அதி புத்திசாலி. "நீ பாதி நான் பாதி கண்ணே" என உணவைப் பாதியாக்கிப் பிள்ளைக்கும் கொடுத்து, தானும் உண்டு இருவரின் பசியையும் போக்குகிறாள். இது தான் வாழ்க்கையைப் புரிந்து வாழும் வழி. இதை மூத்தோரும், இளையோரும் புரிந்து கொண்டால் எக்குறையுமே இல்லை. நாம் அனைவரும் பல்வேறு காரணங்களுக்காகப் புலம் பெயர்ந்தோரே. தாய், தந்தையர் எமது சொத்து. எமது கலாச்சாரம், பண்பாடு தன்நிகரற்றது. வள்ளுவரையும், பாரதியாரையும், ஔவையையும் போற்றும் நாம் எம் பெற்றோரையும் போற்றுவோம்.

## இனியும் வரும் வசந்தகாலம்

**ஜூட் பிரகாஷ்**

“ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.

பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, விதைக்க ஒரு காலமுண்டு, விதைத்ததை அறுவடை செய்ய ஒரு காலமுண்டு” என்கிறது வேதாகமம் (பிரசங்கி *3:1-2).*

உண்மைதான், நாங்கள் பிறப்பதற்கு ஒரு காலம் இருந்தது, பிறந்து வளர்வதற்கு ஒரு காலம் இருந்தது, வளரும் போது படிப்பதற்கு ஒரு காலம் இருந்தது, படித்த பின் வேலை செய்வதற்கு ஒரு காலம் இருந்தது, வேலை செய்து கொண்டு குடும்பம் உருவாக்குவதற்கு ஒரு காலம் இருந்தது, இப்பொழுதோ எப்பொழுதோ நாங்கள் இளைப்பாறுவதற்கும் ஒரு காலம் வந்து தான் விடப் போகின்றது.

போர்ச் சூழலில் வளர்ந்து ஆளான எங்கள் வாழ்க்கையில் பல விடயங்கள் எங்களை அறியாமலேயே எங்கள் கட்டுப்பாட்டில் இல்லாமலே நடந்தேறி விட்டன. நாளைக்கு நாங்கள் உயிர் வாழ்வோமா இல்லையா என்று அறியாமலேயே வாழ்ந்த காலத்தில், என்ன படிக்கப் போகின்றோம், என்ன வேலை பார்க்கப் போகின்றோம், என்ற திட்டமிடலைக் கொஞ்சமும் சிந்திக்கவே முடியாத சூழலிலேயே நாங்கள் வாழ்ந்தோம், வளர்ந்தோம்.

அடிபாடுகளுக்குள் அடிபட்டு அலைந்து திரிந்து, இடம்பெயர்ந்து எங்கோ அகதி முகாமில் வாழ்ந்து, நிவாரண வரிசையில் நின்று, ஆமிட்டயும் ஈபிட்டயும் பிடிபட்டும் பிடிபடாமலும் தப்பி, யார் யாருடைய வீடுகளில் வாழ்ந்து, யார் யாரையோ சந்தித்து, எப்படியோ புலம்பெயர்ந்து, புலம்பெயர்ந்த தேசத்திலும் முட்டி மோதி வாழ்க்கையைச் சீராகக் கொண்டோடப் படாதபாடு பட்டு, கொஞ்சம் ஆசுவாசமாக மூச்சு விடலாம் என்று யோசிக்க, இளைப்பாறும் காலம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரிய ஆரம்பிக்கிறது.

போராட்டக் காலத்தில் வாழ்ந்த எங்கள் வாழ்க்கையே போராட்டமாகிப் போன எங்களுக்கு, எதையுமே திட்டமிட்டுச் செய்த பழக்கமும் இல்லை, திட்டமிடுவதற்கான எண்ணம் எழவுமில்லை, அவ்வாறு எழுந்தாலும் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பச் சூழ்நிலை எங்களுக்கு அமைந்ததும் இல்லை.

இன்னும் சொல்லப்போனால் திட்டமிடல் என்பதற்கான அகச் சூழலும் புறச்சூழலும் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து பழகிவிட்ட எங்களுக்கு, திட்டமிடுதல் அதிகம் அவசியப்படப் போகும் இளைப்பாறுதல் எனும் காலகட்டம் ஒரு பெரும், மாபெரும் சவாலாகத்தான் இருக்கப் போகின்றது.

இளைப்பாறுதல் அல்லது ஓய்வு பெறுதல் என்பது career அல்லது தொழில் சம்பந்தமான ஒன்றாக இருக்க வேண்டுமே அன்றி வாழ்க்கை முறை சம்பந்தமான ஒன்றாக இருக்கக் கூடாது, இருக்கவும் முடியாது. எந்தத் தொழிலில் இருந்தாலும் வயதாகும் போது எங்களை விடத் திறமையான, எங்களிலும் இளமையான, எங்களை விடக் குறைவான சம்பளங்களை பெறும் இளையவர்கள் நிறுவனங்களில் இணைந்து கொள்ளும் பொழுது எங்களது தேவை அந்த நிறுவனங்களுக்கு அவசியமற்றதாக அல்லது அவசியம் குறைந்ததாக மாறும் காலமே இளைப்பாறுவதற்கான காலம் என்று கருதிக் கொள்ளலாம்.

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ அந்த இளைப்பாறுதலுக்கான காலம் எங்களை நெருங்கிவிட்டது. அந்தக் காலத்தின் நீட்சி சிலருக்கு ஐந்து வருடங்களாக இருக்கலாம், சிலருக்கு 10 வருடங்களாக இருக்கலாம், இன்னும் சிலருக்கு அதைவிட அதிகப்படியாக இருக்கலாம். ஆனால் யாராக இருந்தாலும் அந்த இளைப்பாறும் காலம் எப்போதும் எப்படியோ வந்துதான் விடப் போகின்றது.

இந்த ஓய்வு பெறுதலுக்கான கால கட்டத்திற்கான திட்டமிடல் பன்முகங்களைக் கொண்டது. ஒருவரின் குடும்பச் சூழ்நிலை, பிள்ளைகளின் வயது, நிதி வளம், தொழில், உடல் ஆரோக்கியம் என்று பல விடயங்கள் இந்த இளைப்பாறுதலிற்கான திட்டமிடலின் பின்னணியில் செல்வாக்கு செலுத்தவல்ல முக்கிய காரணிகளில் அடங்கும்.

இளைப்பாறுதலில் இந்தப் பன்முகக் காரணிகளின் முக்கியத்துவம் ஒரு பக்கம் இருக்க, இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது ஒருவரின் இளைப்பாறுதலிற்கான mindset என்பது தான். புறக் காரணிகள் பலமாக இருந்தாலும் ஒருவரின் mindsetதான் அவரின் இளைப்பாறுதலை நிம்மதியாகவும் இனிமையாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும்.

இளைப்பாறுதலிற்கு உத்தமமான mindsetஐ உருவாக்குவதில் மிகவும் முக்கியமானது எங்களது நட்பு வட்டாரமும் உறவுகள் வட்டாரமும்தான். இவ்வளவு கால வாழ்க்கை அனுபவமும் இந்த வட்டாரங்களில் யார் எவர் எப்படிப்பட்டவர் என்ற அனுபவங்கள் எமக்கு நல்ல பட்டறிவை நிச்சயமாகத் தந்திருக்கும்.

ஒருவரைச் சந்திக்கும்போது அல்லது அவரிடம் இருந்து அழைப்பு வரும்போதோ உங்கள் உள்ளம் உவகை கொள்கிறது என்றால் அவர் இனியும் உங்கள் தொடர்பு வட்டாரத்தில் இடம்பிடிக்க வேண்டும். அவ்வாறான ஒருவருடன் நீங்கள் கதைக்கும் பொழுதுகள் இனிமையாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கும். அந்தப் பொழுதுகளை உங்கள் உள்ளம் மீண்டும் மீண்டும் இரை மீட்டும், உவகை கொள்ளும்.

ஒருவரிடம் இருந்து அழைப்பு வரும் போதோ அவரை எங்காவது காணும் போதோ "ஐயோ இவனா... அலுப்பன்" என்று உங்கள் உள்ளம் பதைபதைத்தால் அவ்வாறன நபர் உங்கள் வட்டாரத்தில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக கழற்றபட

வேண்டியவராகிறார். இவ்வாறான நபர்கள் உங்களது நிம்மதியான இளைப்பாறுதலுக்கு அவசியமான அந்த அற்புதமான retirement mindsetஐ நாசமாக்க வல்லவர்கள்.

இனிமேல் யாரோடு அதிகம் பழகவேண்டும் யாரோடு அளவோடு பழக வேண்டும் யாரோடு அறவே பழகக் கூடாது என்ற பட்டறிந்த தெரிவுதான் அந்த அழகான retirement mindsetஇற்கான அற்புதமான அத்திவாரம். எப்பவும் எதையும் பற்றிக் குறைவாகப் பேசுபவர்களும், தங்களை உயர்த்திப் பிறரைத் தாழ்த்திப் பேசுபவர்களும், எதிலும் குற்றம் குறை காணுபவர்களும், வாழ்க்கையை எதிர்மறையான negative mindsetஇல் நோக்குபவர்களும் இல்லாத, இல்லை குறைவாகத் தாக்கம் செலுத்தும் சூழலே நிறைவான அந்த இளைப்பாறுதலிற்கான உகந்த புறச்சூழலை ஏற்படுத்தவல்லது.

எங்களின் நீண்ட கால நட்புக்கள், நாங்கள் வாழ விரும்பும், வாழ நினைக்கும் வாழ்க்கையோடு இணைந்து பயணிக்கும் mindset உடையவர்களாக இல்லாமல் இருக்கவும் வாய்ப்புக்கள் உண்டு. அதே நேரத்தில் நாங்கள் வாழும் சூழலில், எங்கள் வாழ்க்கை முறையோடு ஒத்துப் பயணிக்கக் கூடிய புதிய நட்புக்களிற்கும், குறிப்பாக பிற இனங்களைச் சார்ந்தவர்களை எங்கள் நட்பு வட்டாரத்தில் இணைத்துக் கொள்ளவும் நாங்கள் எங்களை தயாராக்குவதும் இளைப்பாறுதலிற்கான உகந்த புறச்சூழலை ஏற்படுத்தவல்லது.

வேலையில் இருந்து இளைப்பாறப் போகும் காலங்களில் எங்களைச் சூழ இருப்பவர்கள் எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியமானது எங்களது நேரத்தை எவ்வாறு கழிக்கப் போகிறோம் என்பது பற்றிய சிந்தனையோட்டம். பலரின் இப்போதைய பகல் பொழுதுகள் வேலையிலேயே கழிக்கப்பட்டிருக்க, வெற்றிடமாகப் போகும் அந்தப் பொழுதுகளை எவ்வாறு அனுபவிக்கப் போகிறோம் என்பதிலும் mindset முக்கிய பங்கு வகிக்கும்.

நவீன தொழில்நுட்ப யுகத்தில் எங்கள் பொழுதுகளை நாசமாக்க இருக்கும் சமூக வலைத்தளங்களைத் தாண்டி, எங்களுக்கு விருப்பமான ஒரு துறையையோ, பழக்கத்தையோ பொழுது போக்கையோ தேர்ந்தெடுப்பது எங்கள் mindset சார்ந்த இன்னுமொரு முக்கியமான முடிவாக அமையும். இவ்வாறு நாங்கள் விரும்பியே தேர்ந்தெடுக்கும் துறையோ பழக்கமோ எங்களது உடலையும் உள்ளத்தையும் புத்துயிர்ப்போடு வைத்திருந்து, எஞ்சியிருக்கும் எங்கள் வாழ்க்கையை அனுபவித்து வாழ வழிசமைத்துத் தரும்.

இனிவர இருக்கும் இளைப்பாறும் காலத்தை வசந்த காலங்களாக்குவது, எங்களது வங்கி நிலுவையிலோ இல்லை பென்சன் பணத்திலோ தங்கியிருப்பதை விட, எங்கள் mindset இலேயே பிரதானமாக தங்கியிருக்கும்.

**"அசாதாரண வாழ்வைக்கொண்ட சாதாரண மனிதரின் வாழ்வு கிருஷ்ணமூர்த்தியுடையது"**

**நேர்காணல் - அசோக்குமார்**

*கிருஷ்ணமூர்த்தி அண்ணாவுடன் இந்த உரையாடல் நடக்கும்முன் அவரை ஒன்றிரண்டு முறை சில நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன். அவ்வளவாகப் பேசியதில்லை. இளவேனில் சஞ்சிகையின் ஆசிரியர் குழு இவருடன் உரையாடி அவர் அனுபவங்களை அறிந்துகொள்ளலாம் எனக் கூறியபோது என் நினைவிலிருந்து கிருஷ்ணமூர்த்தி அண்ணாவின் முகத்தை மீட்டெடுக்க முயன்றேன் ஆனால் துல்லியமாக அவர் முகம் நினைவிலில்லை. எந்த முன்முடிவுகளுமின்றி அவரைப்பற்றி ஒன்றுமே அறியாமல் அவருடன் உரையாடத் தொடங்கினேன். "என் உரையாடல் எதற்கு? நான் 'செலிபிரட்டி' இல்லையே. என் அனுபவங்களைப்போல இங்குள்ள அனைவருக்கும் ஓர் அனுபவமிருக்கும். இதிலென்ன சுவாரஸ்யம் இருக்கும்?" எனக் கேட்டார். எனக்கும் ஆரம்பத்தில் அப்படிதான் தோன்றியது. ஆனால் இவ்வுரையாடல் வேலை நிமித்தமாக இடம்பெயர்ந்த என்னைப்போன்று ஒருவன், வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்த ஒருவரின் வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக அறிந்துகொள்ளும் வாய்ப்பாக அமைந்தது. அவர் தன் அனுபவங்களை ஓர் நண்பனுடன் பகிர்ந்துகொள்வதுபோல் மிக இயல்பாக என்னிடம் பகிர்ந்துகொண்டார். நிதானமாக ஆழமாக அதே சமயம் பல இடங்களில் அங்கதத்துடன் உரையாடினார். அவரின் வாசிப்பும் வாழ்க்கை அனுபவங்களும் எவ்வளவு ஆழம் என்பது அவருடன் உரையாடிய இந்த சில நாட்களில் அறிந்துகொண்டேன். அவர் பேசிய "எல்லோருக்கும் யாரையாவது நம்பவேண்டியதுள்ளதே" போன்ற ஓர் சில வரிகளைத் தனியாக அமர்ந்து பல மணிநேரம் சிந்தித்திருக்கிறேன்.*

*அசாதாரண வாழ்வைக்கொண்ட அசாதாரண மனிதர்கள் மட்டுமே செலிபிரட்டிகள் அல்ல. அசாதாரண வாழ்வைக்கொண்ட சாதாரண மனிதர்களும் செலிபிரட்டிகள்தான். கிருஷ்ணமூர்த்தி அண்ணா அப்படி ஒருவர்.* A simple man with extraordinary life.

*வணக்கம் அண்ணா. எப்படியிருக்கிறீர்கள்?*

நலம் அசோக்.

*எத்தனை வருடங்களாக இங்கே ஆஸ்திரேலியாவில் இருக்கிறீர்கள்?*

நான் வந்து கிட்டத்தட்ட 35 வருடங்கள் ஆகி விட்டது. 1988இல் இங்கு வந்தேன்.

*நீங்கள் வந்த பொழுது இருந்த ஆஸ்திரேலியா வேறு மாதிரியாக இருந்திருக்கும். எப்படி இங்கு வந்தீர்கள்?*

என் சொந்த ஊர் இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு அருகில் விவசாயிகள் நிறைந்த ஒரு கிராமம். எனக்கு இப்போது 61 வயது. நான் நாட்டை விட்டு வெளியேறியது என் 22 வயதில். அப்போது, படித்து வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதுதான் என் எண்ணமாக இருந்தது. அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தேன். ஒரு சம்பவம் நான் நாட்டை விட்டு விரைவாக வெளியேறுவதற்குக் காரணமாக அமைந்தது.

*விருப்பமென்றால் அந்த சம்பவத்தைப் பகிர்ந்துகொள்ள இயலுமா அண்ணா?*

எனக்கு ஒரு அண்ணன். அந்தக் காலம் ஊரில் இயக்கம் வளர்ந்து கொண்டிருந்த காலம். எங்கள் நண்பர் ஒருவர் இயக்கத்தில் சேர்ந்தார். மிக அழுத்தமான மனிதர். ஒரு நாள் சில ஆயுதங்களை என்னிடம் கொடுத்து சில நாள் மறைத்து வைத்திருக்கும் படி சொன்னார். நானும் வீட்டில் யாரிடமும் சொல்லாமல் எங்கள் வீட்டிலுள்ள வெங்காயப் பரணில் ஒளித்து வைத்துவிட்டேன். என் அண்ணனுக்குக் கூடத் தெரியாது. சில மாதங்களுக்குப்பின் ஆமிக்காரர்களிடம் எங்கள் ஊரில் இயக்கத்தொடர்புள்ள என் நண்பன் ஒருவன் பிடிபட்டுவிட்டான். ஆமி ஊருக்குள் வந்து அனைத்து வீட்டையும் சோதனை செய்வார்கள் எனத் தெரியும். அப்போது தான் என் அண்ணனிடம் வீட்டில் ஆயுதங்கள் ஒளித்து வைத்திருப்பதைச் சொன்னேன். அவசர அவசரமாக அதை இடம்மாற்றி என்னையும் வயல் வழியாக ஓட்டமும் நடையுமாகப் பக்கத்துக்கு ஊருக்கு இரவோடு இரவாக அனுப்பி வைத்துவிட்டார். பின்பு அங்கிருந்து கொழும்பு சென்று நாட்டை விட்டு வெளியேறிவிட்டேன். அன்று நான் வீட்டைவிட்டு வெளியேறிய உடனேயே நமது ஊர் ஆமியால் சுற்றிவளைக்கப்பட்டு எனது பல நண்பர்களைப் பிடித்துச் சென்றார்கள் என்று பின்னர் கேள்விப்பட்டேன். அண்ணாவும் மெட்ராசுக்கு சென்றுவிட்டார்.

*அண்ணா, இது நடக்கும்போது உங்களுக்கு என்ன வயதிருக்கும்?*

22 வயதிருக்கும்.

*மிக ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு இப்போது 38 வயதாகிறது. இன்றும் துப்பாக்கியை ஏதோ கண்காட்சியிலோ அல்லது காவலரிடமோ கண்டால் உள்ளுக்குள் உதறல் எடுக்கும். ஆயுதங்களை மறைக்கும் போதில் உங்களுக்குப் பயமாக இல்லையா? வீடு, குடும்பம், வேலை, எதிர்காலம் என்பதெல்லாம் யோசித்து உங்களுக்குத் தயக்கமில்லையா?*

பயமோ, தயக்கங்களோ இல்லை என்று பொய் சொல்லமுடியாது. ஆனால் அதையும் மீறி கோபம் அதிகமாக இருந்தது. 1983 கலவரத்தில் பலர் இறந்த செய்தி, ஆங்காங்கே நடக்கும் கொலைகள் எல்லாம் கேள்விப்படும்போது கோபம் அதிகமாக வந்தது. அதனால் தான் செய்ய முடிந்தது.

உண்மை தான். புரிகிறது. கொழும்பிலிருந்து நேராக ஆஸ்திரேலியா வந்து விட்டீர்களா?

இல்லை இல்லை. முதலில் சவுதியில் சில காலம் வேலை செய்தேன். குறுகிய காலம் தான். சவுதியில் ஒப்பந்தம் முடியும்முன் கொம்பனி மூடி விட்டார்கள். திரும்பி நாட்டிற்கும் திரும்பக் கூடிய சூழலில்லை. நானும் சில நண்பர்களும் நான்கு நாட்கள் சவூதி விமான நிலையத்தில் தங்கினோம். அங்கு என்னுடைய மேனேஜர் எங்களுக்கு இந்திய விசா எடுக்க எவ்வளவோ போராடினார். முடியவில்லை. பின்பு வேறு வழியின்றி இலங்கை திரும்பினேன். சில மாதங்கள் இலங்கையில் இருந்தேன். பின்னர் இந்தியா சென்று இரண்டு வருடம் அண்ணன் மற்றும் நண்பர்களுடன் தங்கி இருந்து வேலை பார்த்தேன். அந்த இரண்டு வருடங்களில் பல அனுபவங்கள். ஒரு சிறிய அறையில் பலர் தங்கி இருந்தோம். ஏமாற்றமும் எதிர்பார்ப்புமாகக் காலம் ஓடிக்கொண்டிருந்தது. அப்போது எங்காவது பத்திரமாக இருந்தாலே போதும் என்றுதான் இருந்தது.

ஆஸ்திரேலியாவிற்கு வரவேண்டும் என்று எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?

ஆஸ்திரேலியாவை நான் தேர்ந்தெடுக்கவில்லை. தேர்ந்தெடுக்கக் கூடிய வாய்ப்பெல்லாம்கூட கிடையாது. எந்த நாட்டிற்கு விசா கிடைக்கிறதோ அங்குச் சென்றுவிட வேண்டும் என்று தான் இருந்தேன். கனடா, சுவிற்சர்லாந்து விசாவும் முயற்சி செய்தேன். ஆஸ்திரேலியா பிசினஸ் விசா கிடைத்தது. அதனால் இங்கு வந்து விட்டேன்.

ஆஸ்திரேலியாவிற்கு வந்த போது உங்களுக்கு இங்கு யாரையும் தெரியுமா?

நான் இங்கு வந்த காலத்தில் மொபைல் எல்லாம் இல்லை. கையிலொரு சீட்டில் சிட்னியில் இருந்த ஒரு நண்பருடைய முகவரியும், மெல்பனில் ஒரு நண்பருடைய முகவரியும் இருந்தது. சிட்னியில் தான் முதலில் வந்து இறங்கினேன். விமான நிலையத்திலிருந்து நேராக நண்பரின் வீட்டிற்குச் செல்ல வேண்டும். நண்பர் என்று சொல்வதைவிட நண்பரின் நண்பர் என்று சொல்வதுதான் சரி.

இந்தக் காலத்தில் நின்று நீங்கள் சொல்வதைக்கேட்டால் வியப்பாக இருக்கிறது. பக்கத்துத் தெருவிற்குச் செல்ல வேண்டும் என்றாலே இரண்டு மூன்று தடவை கூகிள் மாப்ஸ் பார்த்துத்தான் செல்வேன். நீங்கள் கடல் கடந்து வெறும் ஒரு முகவரியுடன் வந்திருக்கிறீர்கள்.

உண்மை தான் இன்று உள்ள எந்த தொழில்நுட்ப வசதியும் அன்று இல்லை. ஆனால் வேறு வழியும் இல்லைதானே. எனக்குப் புது நாட்டிற்குப் போகிறோம் என்ற பயமெல்லாம் இல்லை. எதுவானாலும் பார்த்துவிடலாம் என்ற மனநிலை தான் அன்று இருந்தது. இன்று வரையிலும் அது தொடர்கிறது. அதனால் மிக அதிகமாக யோசித்துப் பயந்ததில்லை.

*மிகுந்த ஆர்வத்தோடு கேட்கிறேன். நீங்கள் இங்கு வந்த முதல் நாள் நினைவிருக்கிறதா?*

இப்போது நினைத்துப் பார்த்தால் அது ஒரு சுவாரஸ்யமான கதை தான். சிட்னிக்குத்தான் முதலில் வந்து இறங்கினேன் என்று சொன்னேன் அல்லவா. விமான நிலையத்திலிருந்து வெளியில் வந்து பார்த்தால் ஒன்றுமே புரியவில்லை. அப்போது ஒருவர் நான் நிற்பதைப் பார்த்து வந்து பேசினார். அவரும் தமிழர் தான். முகவரியைக் காட்டி எப்படிச் செல்ல வேண்டும் என்று கேட்டேன். அவர் தன்னோடு என்னை அழைத்துச்சென்று ஒரு ரயில் நிலையத்தில் இறக்கிவிட்டார். அங்கு ரயில் பிடித்து மூன்றாவது நிறுத்தத்தில் இறங்கி விசாரித்தால் யாரவது வழிகாட்டுவார்கள் என்று சொன்னார். சரி என்று ரயில் நிலையத்திற்குச் சென்று விட்டேன். வந்த பின்பு எந்தத் திசையில் செல்கின்ற ரயிலில் ஏற வேண்டுமென்ற குழப்பம் வந்து விட்டது. சரி ஏதோ ஒரு பக்கம் செல்லும் ரயிலில் ஏறுவோமென்று ஏறி விட்டேன். மூன்றாவது நிறுத்தத்தில் இறங்கி வெளியே வந்து முகவரியில் இருந்த தெருவைக் கண்டுபிடித்து விட்டேன் ஆனால் எந்த வீடு என்று தெரியவில்லை. அந்தத் தெருவிலேயே சில நிமிடங்கள் நடந்துகொண்டிருந்தேன். நான் அப்படி நடந்துகொண்டிருந்ததை ஒரு வெள்ளைக்கார பெண்மணி பார்த்து என்னை நோக்கி வந்து என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். நான் முகவரியைக் காண்பித்து விவரத்தைச் சொன்னேன். அப்படியே என் கையை பிடித்துக்கொண்டு போய் ஒரு அபார்ட்மெண்டில் விட்டு இது தான் நீங்கள் தேடிவந்த முகவரி. இந்த எண் உள்ள அறையைத் தட்டுங்கள் என்று கூறிச் சென்று விட்டார்.

*வீட்டைக் கண்டுபிடித்தீர்களா? உங்கள் நண்பரைச் சந்தித்தீர்களா?*

உடனடியாக இல்லை. முகவரியில் இருந்த அறை எண்ணைக் கண்டுபிடித்து கதவைத் தட்டினால் யாருமில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் கிட்டத் தட்ட ஒரு மணி நேரம் அங்கு அமர்ந்திருந்தேன். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஒரு பெண் குழந்தையுடன் வந்தார். என்னை மேலும் கீழுமாகப் பார்த்துவிட்டு, யார் நீங்கள் என்று கேட்டார். நான் நண்பரின் பெயரைச் சொல்லி, அவரை பார்க்க வந்தேன், அவரின் அறைக் கதவு மூடியிருக்கிறது, அவர் வீட்டில் யாருமில்லை அதனால் காத்துக்கொண்டிருக்கிறேன் என்றேன். நான் பார்க்க வந்த நண்பரின் மனைவி தான் அவர். வெள்ளை இனத்தவர். நண்பர் வெளிநாட்டிற்குப் போயிருக்கிறார் என்று சொல்லி வீட்டிற்குள் அழைத்துச் சென்று தேநீர் கொடுத்து, அவருடைய கணவரின் வேறு சில நண்பர்களை அழைத்து அவர்களுடன் இரவு தங்கிக் கொள்ளுமாறு சொல்லி அனுப்பி வைத்தார். அன்று இரவு புது நண்பர்கள் வீட்டில் தங்கினேன். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அப்போது ஒரு வசனம் கூட ஆங்கிலத்தில் பேசவோ, மற்றவர்கள் பேசுவதை விளங்கிக்கொள்வதோ கடினம். ஆனால் எல்லாம் சுமுகமாக நடந்து கொண்டிருந்தது.

*சிட்னியில் எத்தனை நாள் இருந்தீர்கள்?*

ஒரு இரவு தான். அந்த நண்பர்கள் அடுத்த நாள் சிட்னியிலிருந்து மெல்போன் செல்லும் பேருந்தில் அனுப்பி வைத்தார்கள். காலையில் சிட்னியில் பேருந்து ஏறிய எனக்கோ மெல்போன் வந்துசேரப் பத்து மணிநேரத்திற்கும் அதிகமாகும் எனத் தெரியாது. பேருந்து மாலைவரை சென்றுகொண்டே இருக்க எனக்குச் சிறிது பயமே வந்து விட்டது. பேருந்தில் இருந்தவாறு வீட்டிற்கு நாலைந்து பக்கங்களில் கடிதம் எழுதினேன். மாலையில் மெல்போனில் இறங்கி டாக்ஸி பிடித்து நண்பரின் முகவரிக்குச் சென்று விட்டேன். இன்றும் நண்பர்களாக உள்ள பலர் மெல்போன் வந்த சில நாட்களில் நான் சந்தித்தவர்கள் தான்.

*புது நாட்டிற்கு வந்து விட்டீர்கள். சம்பாதிப்பதற்கு வழி கண்டுபிடிப்பதே அடுத்த வேலையில்லையா?* என்னை நான் பணிபுரிந்த கம்பெனியே இந்தியாவிலிருந்து இங்கு அனுப்பி, ஆறு மாதம் இங்கேயே வேலை பார்ப்பாய் என்ற உத்தரவாதமும் அளித்து அனுப்பியது. அதற்கே எனக்கு ஆறு மாதம் என்பது குறுகிய காலமென்றும் அதன் பிறகு என்னவென்ற பதற்றமும் இருந்தது. *உங்களுக்கு அடுத்த நாள் என்னவென்பதே அப்போது தெரியாதில்லையா. என்ன வேலை செய்தீர்கள்?*

நான் இரண்டு வேலைகளை ஒரே நேரத்தில் செய்தேன். வீடியோகிராபராக பல காலம் வேலை செய்தேன். இங்கு ஒரு நண்பர் நல்ல வீடியோகிராபராக இருந்தார். அவருடன் சேர்ந்து சிறிது சிறிதாக வேலை கற்றுக்கொண்டு பல நிகழ்ச்சிகளுக்கு வீடியோ எடுத்தேன். அந்த நண்பர் பின்பு வேலை மாற்றத்தினால் வேறு ஊர் சென்றுவிட நான் தனியாக நிகழ்ச்சிகளுக்கு வீடியோ எடுத்தேன். சில காலம் டாக்ஸி ஓட்டினேன். காலையில் வீடியோ வேலையும் இரவுகளில் டாக்ஸியும் ஓட்டினேன். எனக்கு அப்போது பணம் சம்பாதிக்க வேண்டிய அவசியம் இருந்தது. எப்போது எந்த நண்பர் அழைத்து உதவி கேட்பாரென்று தெரியாது. வீட்டிலும் நிறையப் பொறுப்புகள். வெளிநாட்டிற்கு வந்து சேர்ந்தவர்கள் எல்லாரும் வெளிநாட்டிற்குச் செல்ல முயற்சி செய்பவர்களுக்கு உதவுவதை ஒரு சிரமமென்று பார்க்காமல் செய்தோம். அதனால் எவ்வளவு உழைத்து பணம் சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு உழைத்தோம். நானும் நேரம் காலமென்றில்லாமல் உழைத்தேன். இங்கு உள்ள ஒரு தொழில்நுட்பக்கல்லூரியில் தகவல் தொழில்நுட்பம் படிக்கவும் சேர்ந்தேன். இரவில் தூங்காமல் டாக்ஸி ஓட்டியதால் வகுப்பில் தூங்கி, பின்பு இது சரி வராதென்று நிறுத்திவிட்டேன்.

*இன்று மறுபடியும் படிக்கும் வாய்ப்பு கிடைத்தால் சேர்ந்து படிப்பீர்களா?*

படிக்கும் ஆர்வமும், படிக்க முடியும் என்ற நம்பிக்கையும் உண்டு ஆனால் அதற்கான தேவை இன்றில்லை என நினைக்கிறன். ஓடி ஓடி உழைத்து, இன்று குடும்பம் பொருளாதாரம் எனக் கொஞ்சம் செட்டிலாகி விட்டேன். அப்போது நிறையப் பணத்தேவை இருந்ததினால் உழைப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவுசெய்தேன். என் மனைவி பிள்ளைகளுடன் செலவுசெய்த நேரம் குறைவுதான்.

இந்த விஷயத்தில் என் மனைவிக்குத்தான் நான் நன்றி கூற வேண்டும். இப்போது குடும்பத்துடன் நிறைய நேரம் செலவிடவேண்டும் என்றுதான் எண்ணம் உள்ளது.

*நீங்கள் இங்கு வந்த காலத்தில், வேலை பார்த்த காலத்தில் ஏதேனும் ஒரு அறிவுரையோ அல்லது வழிகாட்டுதலோ இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமென இப்போது நினைக்கிறீர்களா?*

நான் இங்கு வந்த காலத்தில் சந்தித்த பெரிய சவாலென்றால் அது ஆங்கில மொழிதான். படித்திருந்தாலும் எங்கள் நாட்டில் தினம் ஆங்கிலம் பேசும் தேவையெல்லாமில்லை. இங்குள்ள மனிதர்களுடன் உரையாட நன்றாக ஆங்கிலம் பயில வேண்டியதிருந்தது. இலங்கையிலிருந்து புலம்பெயர்பவர்கள் இரண்டு வகை. படித்து புலம் பெயர்பவர்களும் உண்டு. அகதிகளாகப் புலம்பெயர்பவர்களும் உண்டு. சொல்வதற்கு வருத்தமாக இருந்தாலும் அகதிகளாகப் புலம்பெயர்பவர்களை, படித்துப் புலம்பெயர்ந்தவர்கள் படிக்காதவர்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதுண்டு. அனைவரும் அப்படியல்ல. நன்றாக உதவக்கூடியவர்களும் இருக்கிறார்கள். படித்துப் புலம்பெயர்ந்தவர்கள் இங்கு நல்ல வேலையில் இருப்பார்கள். அவர்கள் அகதிகளாகப் புலம்பெயர்பவர்களுக்கு இங்குள்ள வேலை வாய்ப்புகள் பற்றியும், இங்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ளச் சில வழிகாட்டுதல்களையும் அளித்தால் உதவியாக இருக்கும். இந்த உதவியெல்லாம் இல்லாமல் யாரும் இங்கு முன்னேற முடியாது என்றில்லை ஆனால் நிச்சயமாகக் கொஞ்சம் உதவியாக இருக்கும். ஆனால் இன்று கொஞ்சம் அந்த நிலைமை மாறிவிட்டதென்று நினைக்கிறன்.

*அண்ணா, வெளிநாட்டவர்கள் நாற்பத்தைந்து வயதில் ஒரு மனிதன் சந்திக்கும் பிரச்சனைகளை 'mid life crisis' என்று சொல்வார்கள். ஒரு மனிதனுக்கு அவனுடைய 'identity', 'purpose', 'sense of fulfillment' பற்றியெல்லாம் மனதில் கேள்விகளும் குழப்பங்களும் எழும் காலகட்டம் என்று அதைச் சொல்வார்கள். நீங்கள் அந்த வயதைக் கடந்து வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு அப்படித் தோன்றியதா? அதை எப்படிக் கடந்தீர்கள்?*

நாற்பது நாற்பத்தைந்து வயதைக் கடந்த போது தான் என் மனம் இன்னும் பக்குவம் அடைந்ததென்று சொல்வேன். அந்தக் காலகட்டத்தில் என் கவனம் வேலையிலும், குடும்பத்திலும் இருந்தது. பிள்ளைகள் ‘kids’ என்ற பருவத்தைக் கடந்து ‘Young Adults’ ஆக மாறிய காலம். பிள்ளைகள் வளர்ப்பில் என் கவனம் இருந்ததால் எனக்கு அப்படி ‘mid life crisis’ என்றெல்லாம் தோன்றவில்லை. நானும் கொஞ்சம் மனதைச் சமநிலையில் வைத்துக் கொள்ளும் ஆள் தான். அதிகமாக மகிழ்ச்சியோ அல்லது அதிகமாகச் சோகமோ என்னைத் தாக்கியதில்லை. அந்த ‘attitude’ ஒரு காரணம். வாசிப்பு இன்னொரு முக்கிய காரணம். இடம்பெயர்ந்து இங்கு வந்து வாழ்ந்துகொண்டிருந்தாலும் நாங்கள் இங்கு எங்கள் சமூகத்துடன்தான் பழகுவோம். அதனால் வேறு வாழ்க்கை முறை, கலாச்சாரம் எல்லாம் தெரியும் வாய்ப்புகள் குறைவு. வாசிப்பு எனக்கு அந்த வாய்ப்பை அளித்தது. Reading gave me

exposure. சொல்லப்போனால் பல முக்கிய முடிவுகளை இந்தக் காலகட்டத்தில் எடுத்திருக்கிறேன். கோவிட் பெருந்தொற்று காலத்தில் நான் பலநாட்கள் செய்த வீடியோ வேலையை விட்டுவிடலாமென்று முடிவுசெய்து நிறுத்திவிட்டேன்.

*அண்ணா உங்களுக்கு அறுபத்தொன்று வயது என்பதை உங்களைப் பார்க்கும் யாரும் நம்பமாட்டார்கள். எப்படிப் பிட்டாக இருக்கிறீர்கள்?*

கொஞ்சக் காலம் நண்பர் ஒருவரிடம் கராத்தே பயின்றேன். இன்றும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பயிற்சி செய்கிறேன். வேலை செய்வதை விருப்பத்தோடு செய்கிறேன். இது சாப்பிட வேணும், அது சாப்பிடக்கூடாது என்றெல்லாம் நான் வரைமுறை போட்டுக் கொள்வதில்லை. எது வேண்டுமென்றாலும் சாப்பிடலாம் ஆனால் நன்றாக உழைக்க வேண்டும். இன்றும் எந்த வேலை என்றாலும் தயக்கமில்லாமல் இறங்கிச் செய்துவிடுவேன்.

*கொஞ்சம் பொறாமையாகத்தான் உள்ளது. காபியில் கூட இரண்டு சர்க்கரை போட்டீர்கள்.*

ஆமாம். உணவில் எது சாப்பிட்டாலும் நன்றாக வேலை செய்தால் அது உடலுக்குத் தீங்கில்லை. வயதைக்கூட நான் ரொம்ப மனதில் போட்டுக்கொள்வதில்லை. நானும் என் மனைவியும் ஒரு சுற்றுலா சென்றோம். அங்குப் பல படிகள் ஏறிப்போய் ஓரிடத்தைப் பார்க்க வேண்டும். எங்களுடன் வந்தவர்கள் கொஞ்சம் தயங்க, நான் ஒரே மூச்சில் ஏறிவிட்டேன்.

*சுற்றுலா எனக் குறிப்பிட்டீர்கள். நீங்கள் அதிகம் பயணம் செய்வீர்களா?*

அதிகம் என்று சொல்ல முடியாது. இப்போது பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். கொஞ்சம் நேரம் கிடைக்கிறது. பார்க்கலாம்.

*உங்கள் நண்பர்கள் பற்றிச் சொல்லுங்கள்.*

நான் இங்கு வந்த பொழுதில் சந்தித்த பலர் இன்றும் நண்பர்களாக உள்ளனர். எல்லோருமே நல்ல நண்பர்கள்தான். என்னைக் கடந்து செல்லும்போது புன்னகைக்காதவர் குறைவு. இங்கு MKS ஓனரை சிட்னியில் வந்த பொழுது சந்தித்தேன் இன்றும் அவர் நல்ல நண்பர். முருகபூபதி பல நாட்களாக நல்ல நண்பர். இப்படிப் பலர் உண்டு. நான் இங்கு வந்த புதிதில் ஆங்கிலம் கற்க ஒரு வகுப்பில் சேர்ந்தேன். அங்கு ஒரு பெண் நண்பர் அறிமுகமானார். நல்ல நண்பர். அவர் எனக்கு நண்பர் ஆனதில் வகுப்பிலுள்ள மற்ற நண்பர்களுக்குச் சிறிது பொறாமையும் கூட. அவர் எனக்குப் பல ஆங்கிலப் படங்களை அறிமுகப்படுத்தினார். இன்றும் நினைவில் நிற்கும் நண்பர்களில் அவரும் ஒருவர். அதுபோல் வாழ்வின் முக்கியமான தருணத்தில் என்னைச் சரியான பாதையில் ஆற்றுப்படுத்திய நண்பரும் உண்டு.

அது போன்ற நண்பர்கள் கிடைப்பது பெரும் பேறுதான். அத்தருணத்தை பற்றிப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

அது வலி நிறைந்த ஒரு சம்பவம் தான். என் அண்ணன் மிகப்பெரிய தைரியசாலி. என் மேல் மிகுந்த பாசம் வைத்திருந்தார். என்னை யாரும் எதுவும் பேசி விட்டாலோ அல்லது என் மேல் யாரும் கை வைத்து விட்டாலோ, பேசியவனை அடித்து விட்டுத்தான் என்னென்று கேட்பார். நானும் அண்ணனும் அவ்வளவு நெருக்கம். என் வாழ்வில் மிக முக்கியமான மனிதர். நான் இங்கு வந்தபோது சில நாட்களில் அவரின் இறப்புச் செய்தி தொலைப்பேசி வழியாக வந்தது. அதைக் கேட்ட தருணத்தில் மிகுந்த கோபம் வந்தது. உடனே ஊருக்குப் புறப்பட வேண்டும் என்று முடிவு செய்தேன். அப்போது அந்த நண்பர் தான் உன்னை நம்பி இன்னும் ஊரில் குடும்பம் உள்ளது. சற்று பொறுமையாக யோசியென்று என்னை நிதானப்படுத்தினார்.

உங்கள் வலிமிகுந்த நினைவுகளைத் திரும்பவும் பேச வைத்ததற்கு மன்னித்து விடுங்கள். உங்களை நிறையக் கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன். இலக்கியத்தில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதா?

நான் சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கம் கொண்டவன். எத்தனை நாடுகளுக்கு மாறி மாறி வந்தாலும், எத்தனை சிரமங்களைத் தாண்டி வந்தாலும், வாசிக்கும் பழக்கத்தை மட்டும் விடவில்லை. வீட்டில் சிறிய நூலகமும் வைத்திருக்கிறேன். நான் மிகவும் விரும்பி செய்வது வாசிப்பதுதான்.

அருமை அண்ணா. இப்போது எந்தப் புத்தகம் வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்?

மௌனியின் சிறுகதைகள் வாசித்துக்கொண்டிருக்கிறேன். அவரின் சிறுகதைகள் நேரடியாகப் புரியவில்லையென்றாலும், அவர் சிறுகதையை வாசிப்பது நன்றாக இருக்கிறது. நல்ல வாசிப்பனுபவம்.

மௌனியின் எழுத்து அப்படிதான். உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர்கள் யார்?

அப்படி ஒருவரைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அன்றைய புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அசோகமித்திரன், பாலகுமாரன், ஜானகிராமனின் இருந்து இன்றைய ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், ஜே.கே, தெய்வீகன், ஷோபாசக்தி வரை நீண்டு கொண்டே போகிறது. சமீபத்தில் அராத்து என்ற எழுத்தாளரின் எழுத்தை வாசித்தேன். டால்ஸ்டாயின் 'வார் அண்ட் பீஸ்' வாசித்திருக்கிறேன். அனைவரும் பிடித்த எழுத்தாளர்களே.

நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உங்கள் வாசிப்புக் களம் ஆழமானதும் அகலமானதுமாகத் தோன்றுகிறது. ஏதாவது எழுதி பார்த்திருக்கீர்களா?

நான் சிறியதாக எழுதிப்பார்த்திருக்கிறேன். என்னால் நன்றாக எழுத முடியும். ஆனால் என் சொந்தக் காரணங்களுக்காக நான் எழுதுவதைத் தொடரவில்லை.

இனிமேல் எழுதுவீர்களா?

இப்போதைக்கு அந்த எண்ணமில்லை. ஆனால் எழுதவே மாட்டேனென்றும் இல்லை. நேரம் கிடைத்தால் முயற்சி செய்து பார்ப்பேன்.

உங்கள் சில அனுபவங்களைக் கேட்கவே பிரமிப்பாக இருக்கிறது. You are truly an inspirational personality. நீங்கள் எழுத முடிவெடுத்தால் உங்கள் முழு அனுபவங்களையும் எழுதுங்கள். பலருக்கு ஊக்கமாக இருக்கும்.

பாப்போம் காலம் கனிந்துவந்தால்.

உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா?

இல்லை. ஆனால் என் வீட்டில், என் உறவினர்கள் கடவுளைக் கும்பிடுவதையும், பூஜைகள் மற்றும் சடங்குகள் செய்வதையும் நான் தடுப்பதில்லை. கடவுள் நம்பிக்கை இல்லையென்றாலும் கடவுளை வேண்டியதே இல்லை என்று சொல்லமாட்டேன். எல்லோருக்கும் யாரையாவது நம்பவேண்டியதுள்ளதே.

ஏன் உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை? நம்பிக்கை என்பது தனி மனித உரிமை. அதைக் கேள்வி கேட்கவில்லை. ஆனால் உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாமல் போனதற்குக் காரணம் என்ன?

சின்ன வயதில் இருந்தது. அது பழக்கத்தினாலும் பயத்தினாலும். காலப்போக்கில் என் அனுபவங்கள் அதில் நம்பிக்கையின்மையை வளர்த்துவிட்டது. இன்றும் நம்பிக்கை ஒருவருக்கு உதவுகிறதென்றால் இருக்கட்டும். ஆனால் எனக்குப் பெரிதாக நம்பிக்கை இல்லை.

நான் திடீர் என்று கடவுள் நம்பிக்கை பற்றிக் கேட்கக் காரணம், நீங்கள் இத்தனை இடர்களைத் தாண்டி வந்திருக்கிறீர்கள். அப்படிப் பல கஷ்டங்களைப் பார்த்து வருபவர்கள் கடவுளை ஒரு பிடிப்பாக (hold) வைத்திருப்பார்கள். what is your hold in life?

My hold in life is my self confidence. எனக்குத் தன்னம்பிக்கை அதிகம். இன்று கூட எதுவானாலும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. அனைத்திலும் வெற்றி பெறுவேன் என்று நான் சொல்லவில்லை. எந்த ஒரு விஷயமென்றாலும் முழு மனதுடனும் ஆற்றலுடனும் செய்வேன். தோல்வி வந்தால் சரியென்று கடந்து விடுவேன். அதையே நினைத்து நினைத்துத் தேங்கிவிட மாட்டேன். ஒரு வகையில் தோல்வியைக் கண்டு பயப்படுகிறவனுக்குத் தான் கடவுள் தேவை.

## உரிமைக் குரல்

**கிறிஸ்டி நல்லரெத்தினம்**

ஆஸ்திரேலிய மக்கள் மத்தியில் பேசுபொருளாய் இந்நாட்களில் முதலிடத்தில் இருப்பது The Voice - குரல் - எனும் சர்வசன வாக்கெடுப்பாகும். ஆஸ்திரேலியப் பூர்வீகக் குடிகளின் உரிமைகளை அரசியலமைப்பில் ஒரு சரத்தாகப் பதிவு செய்வதற்கான முன்னெடுப்பு இது.

அடுத்தடுத்து ஆட்சி செய்த அரசியல் கட்சிகள் இவர்களின் உரிமைகளையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தப்போவதாய் உறுதியளித்தபோதிலும் இவர்கள் வாழ்க்கைத்தரம் பின்னோக்கிப்பாய்ந்த நதியாகவே இன்றுள்ளது.....இல்லை, என்றும் இருந்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் சாமானிய குடிமகனுடன் ஒப்பிடும்போது பூர்வீகக் குடிகளின் ஆயுள்காலம், கல்வி, சுகாதாரம், சமூக கட்டமைப்பு, வீட்டுவசதி போன்றவை கீழ்த் தட்டு வாசிகளே. இவர்களின் சமூக கட்டமைப்பையும் 'குரல்' பற்றிய புரிதலையும் நோக்கும் முன் ஆஸ்திரேலியா பிறந்த கதையைச் சிறிது பார்ப்போமா?

*தை மாதக் கோடை வெயிலில் தன் கப்பலை விட்டு கேப்டன் ஆத்தர் பிலிப் அந்த ஆஸ்திரேலியக் கடற்கரை வெண்மணலில் தன் சகாக்களுடன் தடம் பதித்தான்.*

*அன்று ஜனவரி 26ம் திகதி 1788.*

*மெதுவாகத் திரும்பித் தான் 252 நாட்கள் பயணித்த தனது கப்பலைக் களைப்புற்ற கண்களால் நோக்கிப் பின் பார்வையைத் திருப்பி தன் கண்முன்னே விரிந்த நிலப்பரப்பை நோக்கினான்.*

*மொத்தம் பதினொரு பாரிய கப்பல்கள் பாய் விரித்து கம்பீரமாக சிட்னி பொட்ணீ குடாவில் நங்கூரமிட்டிருக்கும் காட்சி அவன் முன்னால் உள்ள பாரிய கடமையை அவனுக்கு நினைவூட்டிற்று.*

*தனது முன்னோடியான கேப்டன் ஜேம்ஸ் குக் 1770 இல் இந்நாட்டை இனங்கண்டு இந்த மண்ணில் ஒரு நாட்டை உருவாக்கும் சாத்தியம் பற்றிப் பேசினான். இப்போது அந்த பாரிய பொறுப்பு இவன் கையில்.*

*பிரித்தானியாவிலிருந்து வந்த இந்த First Fleet எனும் முதல் கடற்படை அமைக்க இருக்கும் 'கைதிகள் குடியேற்றம்' (penal colony) அவன் எண்ணங்களை நிரப்பிற்று.*

*அதே வேளை, அவனின் ஒவ்வொரு அசைவையும் அக்கடற்கரையை ஒத்த மரங்களின் பின்னால் இருந்து சில ஜோடிக் கண்கள் வியப்பும் பீதியும் கொண்டு நோக்கிற்று. திடகாத்திரமான கரிய மேனி, சுருள் முடி., கூரியக் கண்கள். அவர்கள்*

*மனத்தில் எழுந்த கேள்விகள் எல்லாம் ஒன்றே: "யார் இந்த வெள்ளைத் தோல் போர்த்திய மனிதர்கள்? விசித்திரமான ஆடைகள். புரியாத பாஷைகள்.... எமது கடற்கரையில் இவர்களுக்கு என்ன வேலை?".*

*பிறந்த கேள்விகளுக்கு விடை இல்லை. தங்கள் கைகளிலிருந்து கூரிய ஈட்டிகளைக் கெட்டியாகப் பிடித்தபடி அங்கிருந்து பின் வாங்கி அவர்கள் காட்டுடன் கலந்தனர்.*

*கப்பல்களில் கேப்டன் ஆத்தர் பிலிப் கொண்டு வந்தது தங்கப் பாளங்களோ வைரங்களோ அல்ல. பிரித்தானியாவின் சட்டத்தின் முன்னால் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்ட 775 கைதிகள்; 193 பெண் கைதிகள் உட்பட. இவர்கள் தங்கள் தண்டனைக் காலத்தை இங்கு தான் கழிக்கப் போகிறார்கள். இவர்கள் மட்டுமா?*

*மொத்தத்தில் 1480 ஆண், பெண், குழந்தைகள், சில மந்தை மிருகங்கள் குதிரைகள், விதை நெல், கோதுமை பழவகைகள் என ஒரு புதிய சமுதாயமே இந்த மண்ணில் கால் பதித்து ஒரு புதிய உலகை உருவாக்கும் வேட்கையில் அல்லவா வந்துள்ளனர்.*

*காலம் தாமதிக்காமல் மறு வாரமே கட்டுமான வேலைகள் தொடக்கப்பட்டன. சிறைச்சாலைகள், அதிகாரிகள் குடும்பங்கள் தங்குமிடம், சிறுவருக்கான பாடசாலை, ஆலயம், மருத்துவ நிலயம் என ஒரு புதிய சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எல்லாக் கட்டிடங்களும் கடும் உழைப்பினால் கைகூடிற்று. விடுப்புப் பார்க்க வந்த பூர்வீகக் குடிமக்களும் விலங்கிட்டு கட்டாய வேலைக்கு உட்படுத்தப்பட்டனர்.*

*இவர்கள் எல்லாம் அன்று விதைத்த அந்த நம்பிக்கை வித்து ஒரு விருட்சமாய் வளர்ந்து ஆஸ்திரேலியா எனும் ஒரு பெரும் தேசமாய் வார்ந்து இன்று வந்தாரை வாழ வைக்கும் நாடாக மிளிரும் என எண்ணினோமா?*

*இவர்களை இந்த நிலைக்கு உள்ளாக்கிய சரித்திரப் பின்னணிதான் என்ன?*

*1700களில் ஐரோப்பாவில் தொழில் புரட்சி பரவத் தொடங்கி எந்திரமயமாக்குதலின் எச்சங்களாக அனேகத் தொழிலாளிகள் வேலை இழந்து வறுமையின் கோரப்பிடியில் சிக்கிய காலம் அது. திருட்டும் மற்ற சட்டவிரோதச் செயல்களும் மலிந்து பிரித்தானியாவின் சிறைகள் நிரம்பி வழிந்தன. அமெரிக்காவின் 1776 சுதந்திர பிரகடனத்தின் பின் பிரித்தானியச் சிறைக் கைதிகளை அங்குள்ள கைதிகள் குடியேற்றங்களுக்கும் அனுப்ப முடியாத நிலைமை.*

*இதற்குத் தீர்வுதான் என்ன? பிரித்தானிய அரசுக்கு உதித்தது ஓர் எண்ணம்: தமது சாம்ராஜ்ஜியத்தை மேலும் விரிவடையச் செய்யவும் கைதிகளின் செறிவைக் குறைக்கவும் இவர்களைக் கப்பலேற்றி ஒரு புதிய உலகை அமைக்கத் தொலைதூரத்திற்கு அனுப்பினால் என்ன? இத்திட்டத்தின் உதயம்தான் இந்த புதிய பூமி. ஆனால் இந்தப் பூமி இவர்களுக்கு மட்டுமா சொந்தம்? இல்லவே இல்லை.*

இக் கண்டத்தின் பூர்வீகக் குடிமக்கள், கப்பலில் வந்து இறங்கிய இந்த வெள்ளை விசித்திர மனிதர்களை வியப்புடன் நோக்கினார்கள்.

இம்மண்ணின் மைந்தர்கள் ஆஸ்திரேலியாவை 40, 000 முதல் 60.000 ஆண்டுகளுக்கு முன்னரே வந்தடைந்தார்கள் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றன. இவர்கள் ஒரு காட்டுவாசி வாழ்க்கையை வாழ்ந்து ஆன்மீக மற்றும் ஆடல், பாடல் கலை மரபுகள் பலவற்றை நிறுவினர். பல தேசத்து மூதாதையர்கள் சூரியனையும் தீயையும் தெய்வங்களாய் பூஜித்தது போல் இவர்கள் தாம் வாழும் நிலத்தையே தெய்வமாக்கி பூமித்தாயுடன் ஒரு பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டனர்.

கடல் சூழ்ந்த கண்டத்திற்கு இவர்கள் எங்கிருந்து வந்திருக்கலாம் என அனேக ஆய்வுகள் ஊகிக்கின்றன. இவர்களின் முகவெட்டு மற்றும் உடல்வாகு போன்றவை தென் ஆசிய மக்களை ஒத்து இருப்பதால் இவர்கள் அப்பிரதேசங்களிலிருந்து குடி நகர்ந்து இருக்கலாம் என்பதும் ஒரு சாராரின் கருத்து. பல மில்லியன் வருடங்களுக்கு முன் கண்டங்கள் ஓரளவு இணைந்து அல்லது அருகருகே இருந்ததுடன் கண்டங்களைப் பிரிக்கும் சமுத்திரங்களும் மிகவும் ஆழமானதாக இல்லாது இருந்ததால் இது சாத்தியமாய் இருந்திருக்கலாம்.

கூட்டுக் குடும்பமாக வாழும் இவர்கள் ஓவியக்கலையில் வல்லவர்கள். மூதாதையர்கள் தங்கள் "கனவுக்கதைகளை'' கற்குகைகளில் ஓவியமாக வரைந்து வைத்தார்கள். மேலும் இவர்களுக்கே உரித்தான வண்ணப் புள்ளிக் கோலங்களில் வரையும் ஓவியங்களுக்கு உலக ஓவியச் சந்தைகளில் இன்றும் மவுசு அதிகம்.

1788 இல் ஐரோப்பியர் கால்பதித்த நாட்களில் இந்த மண்ணின் மைந்தர்களின் ஜனத்தொகை 850,000 ஆக இருந்திருக்கும். 500 வகையான பழங்குடியினர் இக் கண்டத்தில் தங்கள் சொந்த மொழி பேசி வாழ்ந்தனர் என்பது ஒரு சிறப்பு. ஆஸ்திரேலியாவின் பரந்த நிலப்பரப்பு, பல நூறு வகையாகப் பேச்சுவழக்கு மற்றும் எழுத்து வடிவமற்ற மொழிகள் போன்றவை இவர்களை ஒரே இனமாகக் கூடி வாழத் தடையாக இருந்தன என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவர்களுக்காக ஒருமுகமாய் குரல் கொடுக்க இக்காரணிகள் ஒரு தடையாக இருந்திருக்கலாம் என்பதும் ஒருசாராரின் கருத்து.

பழங்குடியினருக்கும் விசித்திர மனிதருக்குமான உறவு நாளடைவில் முறுகலாக மாறி பல எதிர்ப்புகளுக்கு வித்திட்டது. அந்நாட்கள் இந்த அப்பாவி குடியினருக்கு இருண்ட நாட்களே. அடக்குமுறையும் அறிமுகப்படுத்தப்பட்ட சின்ன அம்மை போன்ற நோய்களும் இவர்கள் எண்ணிக்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திற்று. மேலும் வேட்டையாடி சிறைபிடிக்கப்பட்ட பல பூர்வீகக் குடிகள் கழுத்தில் சங்கிலி மாட்டப்பட்டு இங்கிலாந்திற்கு ஒரு காட்சிப் பொருளாய் கொண்டுபோகப்பட்டனர்.

இதில் விசித்திரம் என்னவென்றால் 1960களுக்கு முன்னர் எழுதப்பட்ட ஆஸ்திரேலியச் சரித்திர நூல்களின் ஆசிரியர்கள் பூர்வீகக் குடிகளுக்கு இழைக்கப்பட்டக் கொடுமைகளையும் அநீதிகளையும் மூடி மறைத்து

*இவர்களிடையே ஒரு சுமுகமான உறவு நிலவியதாகவே பதிவு செய்தனர். பின்னர் எழுதப்பட்ட நூல்கள்தான் குருதி தோய்ந்த சோகச் சரித்திரத்தை எழுத்தில் வடித்தன.*

*எந்த ஒரு தேசத்தின் உதயத்திலும் பிறக்கும் பிரசவ வேதனையின் ஓலத்தில் அந்நாட்டின் பூர்வீகக் குடிகளின் முனகல்கள் மௌனமாக மடிந்து போவது ஒரு நியதி அல்லவா? இன்றும் பல பழங்குடி அமைப்புகள் 26 ஜனவரி 1788 ஐ "படையெடுப்பு நாள்" ஆகக் கணித்து "ஆஸ்திரேலியா நாளை" புறக்கணித்து வருகின்றன.*

*இன்றைய ஆஸ்திரேலியச் சமுதாய அடுக்குகளின் கீழ்த் தட்டில் இன்னும் வாழும் "அபொரிஜீனல் குடிமக்கள்" என்று அழைக்கப்படும் பூர்வீகக் குடிகளின் வாழ்க்கைத் தரம் ஆண்டுதோறும் அங்குல வளர்ச்சியையே கண்டு வந்துள்ளது.*

*மேலும் இவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் வடுக்கள் இன்னும் ரணமாகவே உள்ளன. இவை இன்னும் ஆ. 1860- 1970க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பூர்வீகக் குடிகளின் குழந்தைகள் பலவந்தமாக அவர்களின் பெற்றோர்களிடம் இருந்து பிரிக்கப்பட்டு 480க்கும் அதிகமான நிறுவனங்களிலும், வெள்ளை இனத்தோர் வீடுகளிலும் வளர்க்கப்பட்டனர். இவர்களுக்கு அவர்களின் கலை கலாச்சார நடைமுறைகள், சம்பிரதாயம், மொழி, சடங்குகள் போன்றவை மறுக்கப்பட்டன. இந்த இளம் சந்ததியர் "திருடப்பட்ட தலைமுறைகள்"* (Stolen Generation) *எனும் நாமத்தைப் பின்னர் சூடிக்கொண்டனர். இவர்களில் அனேகர் 'இடைச்சாதி'* (Half-caste) *என வர்ணிக்கப்படும் பூர்வீகக்குடி தாய்க்கும் வெள்ளைக்கார தந்தைக்கும் பிறந்தவர்களே.*

*இந்த மண்ணின் மைந்தர்கள் தமது சொந்த மண்ணிலேயே ஒரு புறக்கணிக்கப்பட்ட சந்ததியாய் ஆக்கப்பட்டது சோகமே. வேலையில்லாத் திண்டாட்டம், கல்வியில் கடைசி வாங்கு, ஆரோக்கியமின்மை, வறுமை, அபரிமிதச் சிறை புகுதல் என இவர்கள் சோகக்கதை நீள்கிறது. 25.69 மில்லியன் ஆஸ்திரேலியச் சனத்தொகையில் 893, 300 பூர்வீகக் குடிகளும் அடங்குவார். இத்தனை சிறிய எண்ணிக்கையே உள்ள பூர்வீக மாந்தரின் அடிப்படை அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய அரசுக்கு ஏன் இத்தனை தயக்கம் எனும் கேள்விக்கு விடை பகரப் பல வட்டமேசை மகாநாடுகளும் பேச்சுவார்த்தைகளும் ஆணையங்களும் வைத்தாயிற்று. இப்பயணத்தில் சில வெற்றி கிடைத்ததுண்டு.*

*அவற்றில் சில:*

*1967 - ஆஸ்திரேலியாவின் அரசியலமைப்பு ஒரு சர்வசன வாக்கெடுப்பின் கீழ் மாற்றப்பட்டு பூர்வீகக் குடியினரும் சனத்தொகை கணிப்பில் ஆஸ்திரேலியப் பிரஜைகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.*

*1991 - பொலீஸ் காவலில் மரணித்த பூர்வீகக் குடிகளுக்கான ராயல் கமிஷன்*

*1992* - மாபோ எனும் பூர்வீகக் குடிமகன் உயர்நீதிமன்றத்தில் நில உரிமைக்கான அங்கீகார வழக்கில் வெற்றி.

*1993* - ஆஸ்திரேலியப் பாராளுமன்றம் பூர்வீக உரிமைச் சட்டத்தை (Native Title Act) நிறைவேற்றியது.

*1995* - ஆஸ்திரேலிய அரசு பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரேய்ட் தீவுகளின் கொடிகளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.

*1997* - ஆஸ்திரேலியாவின் 'திருடப்பட்ட தலைமுறைகள்' பற்றிய உத்தியோகப் பூர்வ அறிக்கை நல்லிணக்க மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது

*2008* - ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரட் 'திருடப்பட்ட தலைமுறையினரிடம்' நிகழ்ந்த தவறுகளுக்காகப் பாராளுமன்றத்தில் மன்னிப்பு கோரினார்.

*2017* - உளுரு அறிக்கையில் (The Uluru Statement from the Heart) ஆஸ்திரேலிய அரசிடம் தாம் நாட்டின் முதல் பிரஜைகள் எனும் பிரதிநிதித்துவத்தை (உரிமைகளை) அரசியலமைப்பில் பதிவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை உத்தியோகப்பூர்வமாக விடுக்கப்பட்டது.

*2020* - பூர்வீகக் குடிகளின் சிறைக்காவல் மரணங்கள் மற்றும் சுய காயப்படுத்தலுக்கு எதிராக Black Lives Matter எனும் தொனிப்பொருளில் பொதுமக்கள் பங்குபற்றிய நாடளாவிய ஊர்வலங்கள் நடந்தேறின.

இப்பட்டியலில் உள்ள நிகழ்வுகள் பூர்வீகக் குடிமக்களின் மடியில் தானாய் வந்து விழவில்லை. பலத்த இழுபறியின் பின்பும் பல வருடப் பேச்சுவார்த்தைகளின் பின்புமே இவை சாத்தியமாயிற்று.

*2022* பாராளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில், ஆஸ்திரேலியாவின் தொழில் கட்சி, பூர்வீகக் குடிகளின் அபிலாஷைகள் அரசியலமைப்பில் பதிவேற்றப்படும் என உறுதியளித்து தாம் தேர்தலில் வெற்றியீட்டினால் அதைச் சட்டப்பூர்வமாக நிறைவேற்ற ஒரு சர்வசன வாக்கெடுப்பு நடாத்தும் எனவும் உறுதிமொழி அளித்தது.

அத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தொழில் கட்சி தற்போது இதற்கான முன்னெடுப்புகளில் மும்முரமாய் இறங்கியுள்ளது. "குரல்" (The Voice) எனும் பெயரில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சி சர்வசன வாக்கெடுப்புடன் உச்சக்கட்டத்தை அடைந்து சாதகமான முடிவை வாக்காளர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டால் பாராளுமன்றத்தில் சட்டமாகி அரசியலமைப்பில் ஒரு ஷரத்தாக வந்து குந்திக்கொள்ளும்.

எதிர்க்கட்சியான லிபரல் கட்சி இந்த முன்னெடுப்பிற்கு எதிராகப் பிரச்சாரம் செய்யப்போவதாய் இவ்வாரம் அறிவித்தது. சுரங்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல பாரிய கம்பெனிகள் பூர்வீகக் குடிகளுடன் ஒரு முறுகலான உறவையே

வைத்திருக்கின்றன. பூர்வீகக் குடிகளுக்குச் சொந்தமான நிலங்களில் சுரங்கம் அமைக்க இக் கம்பெனிகளுக்கு இவர்கள் அனுமதி தேவை. இதற்கான பல பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவதுண்டு. எனவே அரசியலமைப்பில் பூர்வீகக் குடிகளின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டால் அது அவர்கள் கைகளை மேலும் பலப்படுத்தும் என்பது இக் கம்பெனிகளின் கவலை. லிபரல் கட்சி ஆதரவாளர்களான இக் கம்பெனிகளை பகைத்துக்கொள்ளத் தயங்கிய அக்கட்சி இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பது பல அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

இந்த 'குரல்' முன்னெடுப்பைப் பற்றி சிறிது பார்ப்போமே.

2017ல் வெளியிடப்பட்ட ‘‘உளுரு அறிக்கையின்’’ படி பூர்வீகக் குடிகளின் பிரதிநிதித்துவத்தை அரசு அங்கீகரிக்கவேண்டும் எனும் வேண்டுகோளை அரசியலமைப்பில் பதிவேற்றும் நடவடிக்கையின் முதல் கட்டமே இந்த சர்வசன வாக்கெடுப்பு ஆகும். இந்த அங்கீகாரம் இவர்களுக்கான உரிமைக்குரலாக எதிர்காலத்தில் ஒலிக்க வகை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வாக்கெடுப்பில் வாக்காளர்களிடம் கேட்கப்பட இருக்கும் கேள்வி இதுதான்:

To alter the Constitution to recognise the first people of Australia by establishing an Aboriginal and Torres strait Islander voice.

Do you approve this proposed alteration?

இக்கேள்விக்கு "ஆம்" அல்லது "இல்லை" என வாக்காளர்கள் பதிலளிக்க வேண்டும்.

ஆஸ்திரேலியாவின் அரசியலமைப்பு இதுவரை 44 முறைகள் சர்வசன வாக்கெடுப்பிற்கு விடப்பட்டாலும் எட்டு முறைதான் வெற்றிகரமாக மாற்றப்பட்டுள்ளது.

'குரல்' வாக்கெடுப்பு வெற்றிபெற்று அரசியலமைப்பில் பதிவேற்றப்பட்டால் பூர்வீகக் குடிமக்களைப் பிரதிநிதிப்படுத்தும் ஒரு நிரந்தரக் குழு நியமிக்கப்பட்டு அக்குழு பூர்வீகக் குடிகளைப் பாதிக்கும் அரசு கொள்கைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிவுரை வழங்கும். ஆனால் பாராளுமன்றம் தமக்கு இணங்காத கொள்கைகளை நிறைவேற்றுவதைத் தடுக்கும் ‘வீட்டோ’ அதிகாரம் இக்குழுவிற்குக் கிடையாது. 'என்ன, வெற்றுத் துப்பாக்கிக்கு இத்தனை பில்டப்பா?' என நீங்கள் நினைப்பது நியாயமானதே.

இக்குழுவில் யார் யார் அங்கத்தவராய் இருப்பார்கள், மொத்தம் எத்தனை பேர், இவர்களின் கடமை என்ன என்ற கேள்விகளுக்கு அரசுத் தரப்பிலிருந்து மௌனமே பதில். இந்த மௌனத்தை எதிர்க்கட்சியான லிபரல் கட்சி தனக்குச் சாதகமாய்

பயன்படுத்திக் கொண்டு ‘இல்லை’ வாக்குகளைச் சேகரிக்க முனைவது அரசியல் காய்நகர்த்தல் என்றே கணிக்கப்படுகிறது.

எனினும் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பின்படி அரசியலமைப்பு மாற்றத்திற்குச் சார்பாகப் ஆதரவு உள்ளதாகத் தெரியவந்துள்ளது. இது வரவேற்கத்தக்கச் செய்தியே. இளம் சமுதாயத்தினர் இந்த மாற்றத்தை ஆதரிப்பார்கள் என்று கணிப்புகள் கூறுகின்றன. ஆனாலும் "ஆம்" வாக்காளர்களுக்கும் "இல்லை" வாக்காளர்களுக்கும் இடையே உள்ள இடைவெளி கருத்துக்கணிப்புகளில் குறைந்து வருவது கவலை தரும் செய்தியே.

வாக்களிப்பில் மொத்தத் தேசிய ரீதியாக 50% க்கும் அதிகமான 'ஆம்' வாக்குகளையும் ஒவ்வொரு தனிப்பட்ட மாநிலத்திலும் 50%க்கும் அதிகமான 'ஆம்' வாக்குகளையும் (குறைந்தது நான்கு மாநிலங்களில்) பெற்றால்தான் அரசியலமைப்புச் சட்டத்தில் கை வைக்க முடியும். வாக்குரிமையுள்ள 17 மில்லியன் ஆஸ்திரேலிய வாக்காளர்களில் 8.5 மில்லியன் வாக்காளர்கள் 'ஆம்' என்று தலையாட்டினாலேயே இக் கனவு நனவாகும்.

அடுத்தடுத்து ஆஸ்திரேலியாவை ஆட்சி செய்த அரசாங்கங்கள் முன்னெடுத்த திட்டங்கள் பூர்வகுடிகளின் வாழ்வில் குறிப்பிடத்தக்கப் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம், மழலை பராமரிப்பு / கல்வி போன்றவற்றில் முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் தற்கொலை, வளர்ந்தோர் சிறை செல்தல், பெற்றோரிடம் இருந்து பிள்ளைகள் அரசினால் பிரிக்கப்படுதல், உடல் நலம், வீட்டு வசதி போன்றவை பின்னடைவையே கண்டுள்ளன.

பல தேசங்களிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் பல இன மக்களைக் கொண்ட ஆஸ்திரேலியாவில் இந்த வாக்கெடுப்பு எவ்வாறு வெவ்வேறு சமூகங்களால் நோக்கப்படும் என்பது கேள்விக்குறியே.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் பிறந்த மண்ணில் அனுபவித்த இன்னல்கள், அடக்குமுறைகள், இனரீதியான பாகுபாடு, கருத்துச்சுதந்திர மறுப்பு போன்றவற்றை ஆஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் 200 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவித்து வருகின்றனர். இவர்களின் வலியை நம்மைவிடப் புரிந்துகொண்டோர் யார்? இவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுக்க நமக்குக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் உசிதமாய் சிந்தித்துச் செயலாற்றுவோம்.

பூர்வீகக் குடிகளின் குரல் பாராளுமன்றத்தில் உரக்க ஒலித்து தங்கள் எதிர்காலத்தைத் தாமே அமைத்துக்கொள்ளும் சுயநிர்ணய உரிமையை இந்த அரசியலமைப்பு இவர்களுக்குச் சமைத்துவைக்குமானால் அதுவே இக் "குரலின்' வெற்றி எனலாம்.

அந்தக் குரலும் ஒலிக்கும் ஒரு நாள் வரத்தான் போகிறது.

## மை வண்ணம்

**விஜி ராம்**

கொரோனாவும் கடவுளும் ஒன்றே என்று தோன்றுகிறது. எங்கும் நீக்கமற நிறைந்திருப்பான். தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் காற்றிலும் இருப்பான் ஆனால் கண்களுக்குப் புலப்படமாட்டான். வாழ்க்கையை முழுவதுமாய் திருப்பிப்போட்ட அந்த நாட்களை நினைக்கும் தோறும் தீயாய் ஒரு அச்சம் என்னை அறியாமல் என்னுள் வந்துபோகிறது. வெகு இயல்பாய் போய்க்கொண்டிருந்த வாழ்க்கை வேறொரு புதிய வடிவம் கொண்டதானது. திடீரென வாழ்க்கை முற்றிலும் வேறானதாக மாறிவிட்டது. சுமார் இரண்டு வருடங்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்த நீண்ட நாட்கள். எங்குக் கேட்டாலும் உயிர்களின் இழப்பு. வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தால் சாவு வீட்டினுள் உலவுவது போல் ஒரு அச்சம் ஆட்கொள்ளும். தொலைப்பேசி முழுதும் மரணச் செய்திகளால் நிறைந்திருந்தது. யமனோ யமியோ பல லட்சம் அவதாரங்கள் எடுத்து ஓவர் டைம் செய்து தீவிரமாகக் கடமை ஆற்றினார்கள் என்று தோன்றியது. மனம் பயத்தினால் பீடிக்கப்பட்டிருந்தது. ஊரில் எல்லோரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு அப்பா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அந்தத் தருணம் ஏன் இங்கு வந்தோம், அங்கிருந்தால் அப்பாவைப் பார்த்துக்கொண்டிருக்கலாம் என மனம் பரிதவித்தது. எவ்வளவு சுயநலம் என்று என் மீதே வெறுப்பு தோன்றியது. பாட்டி கொரோனாவால் இறந்த செய்தி கிடைத்த போது அதிர்ந்துபோனேன்

உற்றார், பெற்றார் அனைவரையும் விட்டு தனிமையில் எங்கோ தொலைவில், முற்றிலும் வேறுபட்ட மண்ணில் 27 வருடங்கள் கழித்தாயிற்று என்று எண்ணும்போது பெரும் ஆச்சரியமாகவும் சற்று கவலையாகவும் இருந்தது. அடிக்கடி இந்தியா செல்ல இயலவில்லை என்றாலும் இரண்டு வருடத்திற்கு ஒருமுறையேனும் சென்றுவருவோம். திரும்பி வந்த பின் கொஞ்சக் காலம் இந்திய வாழ்க்கை ஆஸ்திரேலிய வாழ்க்கையை விடச் சுகம் என்று தோன்றும். அங்கே குளிர் இல்லை, இங்கே கடுங்குளிர், அங்கே வீட்டு வேலைக்கு ஆள் கிடைப்பார்கள், இங்குச் சமையல் முதல் சாக்கடை சுத்தம் செய்வது வரை நாமே செய்து கொள்ளவேண்டி இருக்கிறது. உடன்பிறந்தவர்கள், சொந்தபந்தங்கள் சூழ பேசி சிரித்து, வேலைகளைப் பகிர்ந்துகொண்டு மகிழ்ச்சியோடு எல்லோரோடும் வெளியே போவதும் வருவதும், அந்த வாழ்க்கை ஒரு வரம் எனத் தோன்றும். பெற்றவர்களுக்கு உடல் நிலை சரியில்லாது போகும் போதும், திருமணம் போன்ற விசேடக் காரியங்களில் கலந்துகொள்ள இயலாதபோதும் சீ என்ன வாழ்க்கை என்று ஆஸ்திரேலியா சலிப்பு தட்டும். பொருளாதார நெருக்கடியின் காரணத்தினால் நமக்கு விதித்திருப்பது இங்குதான் என்று சமாதானப்படுத்திக்கொண்டு மீண்டும் இந்தியா செல்லும் வரை அந்த இனிய பயணத்திற்காகக் காத்திருப்பது பழகிவிட்ட ஒன்று.

அந்த எண்ணத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது கொரோனா காலத்தில் தான். ஆஸ்திரேலிய அரசு மக்களை நோயினின்று காத்த விதம், அளித்த சலுகைகள்,

மருத்துவ வசதி இவையெல்லாம் இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவிற்குமான இடைவெளி. வளமான நாடுகளே இந்தக் கிருமியின் பிடியினின்று தப்பிக்க இயலவில்லை.

ஒருவரை ஒருவர் பார்ப்பதே தொற்றுக்குத் தீனி என்பதால் 5 கிலோமீட்டர் சுற்றுக்குள் தொடர்ந்து சுமார் 200 நாட்கள் சிறைவைக்கப்பட்டோம். வாழ்க்கை நின்றுவிடவில்லை. வீட்டிலிருந்த படியே வேலை செய்யும் நிலை உண்டானது. zoom ஒரு வரப்பிரசாதம் போல் வாய்த்தது. வகையாகச் சமையல், தோட்டவேலை, புத்தகம் வாசிப்பது, netflix, prime பார்ப்பதுமாக நகர்ந்தது. இந்த இயந்திர வாழ்க்கையில் நம் குடும்பத்தினரையே அவ்வளவு அருகிலிருந்து நிதானமாகப் பார்த்துப் பேசி நேரம் செலவிட அரிய வாய்ப்பு கிடைத்தது போல் இருந்தது.

கோவிட் தொற்று எனக்குள் ஏற்கனவே இருந்த பயத்தை, பதற்றத்தை, நிலையின்மையை விஸ்வரூபம் எடுத்துக்காட்டியது என்று நினைக்கிறேன். இந்தப் பிரபஞ்சத்தின் நிலையின்மையின் முன்னால் செய்ய முடிவது ஒன்றே ஒன்றுதான். சேர்ந்திருந்து, பகிர்ந்து, ஒருவருக்கொருவர் அன்பாயிருத்தலை விட வேறொன்றும் செய்துவிட முடியாது. முடிந்த வரை நம்மாலான நிதி உதவி செய்து, உலக நன்மை கருதி நாம் வணங்கும் கடவுளர்களிடம் பிரார்த்தனை செய்யலாம். இதைச் செய்து கொஞ்சம் ஆறுதலானேன்.

எனக்கு எப்போதும் வீட்டை விட்டுப் போவதென்றால் அறவே பிடிக்காது. அதனால் கோவிட் எனக்குச் சாதகமாக அமைந்தது என அவ்வப்போது எண்ணத் தோன்றும். இந்தச் சமயம் யாரும் வீடு தேடி வரப்போவதில்லை, நாமும் எங்கும் செல்லவேண்டியதில்லை என்பதால் ஆடை, அலங்காரம் என எதற்கும் கவலைப்படாது, இந்தியப் பெண்களின் தேசிய உடையாம் nighty அணிந்து கொண்டு கழித்த நாட்கள் அவை. உண்மையைச் சொல்லவேண்டுமானால் நான் நானாக இருந்த நாட்கள். வாழ்க்கை இவ்வளவுதான் என்று ஒரு அயர்ச்சி கொண்டு அந்த இரண்டு வருடத்தில் மனம் கொஞ்சம் முதிர்ச்சி கண்டதென்னவோ நிஜம் தான்.

தடுப்பூசி போட்டுக்கொண்டு ஓரளவு தொற்றின் வீரியம் குறைய ஆரம்பித்தது. மரண எண்ணிக்கை கணிசமாகக் குறைய ஆரம்பித்தது. தொற்று முடக்கம் நீக்கப்பட்டு கொஞ்சமாக அனைவரும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப ஆரம்பித்த காலம். அந்தச் சமயம் தான் கன்னட வட்டத்தில் நெருங்கிய தோழி கீதா தன் மகள் மைதிலிக்கு திருமணம் வைத்திருந்தாள். வீடு தேடி வந்து பத்திரிகையுடன் புடவை, வேட்டி கொடுத்து அழைத்துவிட்டுச் சென்றாள். ஆஸ்திரேலியா வந்து 25 வருடங்களுக்கு மேலாகியும் நாம் நம் கலாச்சாரத்தைக் காப்பாற்றிக் கொண்டு தான் இருக்கிறோம் என்பதற்கு இவை எல்லாம் கண்கூடான சாட்சிகள்.

மற்றொரு தோழி சித்ரா, மகள் அஞ்சுக்கு இரண்டு வருடங்களுக்கு முன் திருமணம் முடித்திருந்தாள். அஞ்சுவின் திருமணத்தில் நாங்கள் ஒரே ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் தான். எங்கள் நட்பு வட்டத்திலே முதல் திருமணம். மகிழ்ச்சியில்

திளைத்தோம். அஞ்சு ஒரு குஜராத்தியைக் காதலித்து மணமுடித்திருந்தாள். மைதிலியோ அவர்கள் இனத்திலேயே தேடிக் கொண்டுவிட்டாள் என்ற பெருமை உள்ளூர கீதாவுக்கு இருந்தது. அஞ்சுவின் திருமணத்தை விட மைதிலியின் திருமணத்தை விமரிசையாகச் செய்துவிட வேண்டும் எனும் லட்சியத்துடனே கீதா எல்லா ஏற்பாடுகளும் செய்துகொண்டிருப்பதாக சித்ரா கூறினாள். இவர்களுக்கு எல்லாவற்றிலும் போட்டி.

உறவினர்களை விட நண்பர்களே மனதிற்கு அருகில் இருப்பவர்கள். தமிழர்கள், கன்னடர்கள் என எனக்கு இரண்டு நட்பு வட்டம் இருந்தது. என்னைப் பொறுத்தவரை கன்னடர்கள், பொதுவாக நல்ல குணம் படைத்தவர்கள். உதவி என்றால் தயங்காமல் முன்வருவார்கள். ஆனால் தமிழ் வட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்களுக்குள் போட்டி அதிகம். டிவி, கார், வீடு, நகை என ஒருவர் ஆரம்பித்தால் வரிசையாக வாங்கிக்கொள்வார்கள். பேஷன் சென்ஸ் அதிகம், modern ஆக இருப்பார்கள். இந்தியா சென்று திரும்பும்போது ஒவ்வொருமுறையும் போட்டிப் போட்டுக்கொண்டு புடவை, நகை என்று வாங்கிவருவார்கள். அன்றைய தேதியின் லேட்டஸ்ட் ஸ்டைலில் இருப்பார்கள். என் கணவர் சில காலம் பெங்களூரில் வேலை செய்திருந்தார். அவர் அடிக்கடி சொல்லுவது, சென்னையை வாசிகளை விட பெங்களூர் வாசிகள் 10 வருடம் பேஷனில் முந்தி இருப்பார்கள் என்று. அதை நான் இங்கு வந்தபோது கண்கூடாகப் பார்த்துப் புரிந்து கொண்டேன். லிப்ஸ்டிக் போட்டுக்கொள்வது, பாப் கட் வைத்துக்கொள்வது மற்றும் wine அருந்துவது எல்லாவற்றிலும். பக்தியும் அவர்களுக்கு அதிகம். வருடம் ஒருமுறையேனும் சத்யநாராயணப் பூஜை செய்து எல்லோரையும் அழைத்து நல்ல விருந்து கொடுப்பார்கள். அதனால் அவர்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். இவை எல்லாம் என் தமிழ் நட்புவட்டத்தில் காண்பது அரிது.

கடந்த இரண்டு வருடத்தில் இவை எதுவும் இல்லை. இப்போது மைதிலியின் திருமணம். இப்படியான ஒரு தருணத்திற்காகவே நானும் காத்திருந்தேன். திருமண வைபவம் என்றால் கேட்கவே வேண்டாம். நாளொரு மேனி, பொழுதொரு வண்ணம். ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசி பல வருடங்களாகிவிட்டது போலத் தோன்றியது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் அப்படி ஒரு மகிழ்ச்சி எல்லோர் மனத்திலும்.

3 நாள் திருமண நிகழ்ச்சிகளாம். டாண்டினாங் மென்சிஸ் ஹாலில் சங்கீத், வீட்டிலேயே மெஹந்தி, வான்டினா கேத்தி'ஸ் லேன் ஹாலில் திருமணம். எங்களுக்கு 3 நாட்களுக்கான அழைப்பும் வந்திருந்தது. ஷோபா திடீரென ஒரு நாள் தொலைப்பேசினாள். அவளை மெஹந்திக்கு அழைக்கவில்லையாம். 20 வருடங்களுக்கு முன் தன் வீட்டில் கீதா குடும்பத்தார்க்கு உப்புமா, டீ எல்லாம் செய்து கொடுத்து உபசரித்த கதையெல்லாம் சொன்னாள். அவர்கள் இவள் மனதைப் புண்படுத்திவிட்டதாகப் புலம்பினாள். சகுந்தலா திடீரென்று போன் செய்து கீதா திருமணத்திற்கு யாருக்கெல்லாம் புடவை கொடுக்கிறாள் என்று கேட்டாள்.

அது தெரிந்தால் தான் என்ன பரிசு வாங்கலாமென முடிவு செய்யமுடியும் என்பதை நாசூக்காய் சொன்னாள். ஷர்மதா வாட்ஸ் ஆப்பில் என்னுடைய பட்ஜெட் என்ன என்பதை மறைமுகமாகக் கேட்டிருந்தாள். நான் எதற்கும் நேரடியான பதில் சொல்லவில்லை. எனக்கேன் வம்பு. சித்ராவிடம் அவகாசம் கிடைக்கும்போது சொல்லிவிடவேண்டும் என்று மனதிற்குள் நினைத்திருந்தேன்.

முதலில் சங்கீத், ஒரு வாரம் கழித்து மெஹந்தி, மெஹந்தி முடிந்து இரண்டாம் நாள் திருமணம். கொடுமை என்னவென்றால் எல்லா வைபவங்களுக்கும் டிரஸ் கோட் மற்றும் கலர் கோட் இருந்தது. நானும் சங்கீத்துக்கு காக்ரா (தங்கை மகளிடம் கடன் வாங்கி இருந்தேன்), மெஹந்திக்கு நல்ல சுடிதார், வெட்டிங்குக்கு பட்டுப் புடவை என்று எல்லாம் தயார் செய்து வைத்துக் கொண்டேன். சங்கீத்க்கு ஆன்டிஸ் (Aunties) நடனமும் இருந்தது. நான் அதில் கலந்துகொள்ளவில்லை. நடனத்திற்கும் எனக்கும் ரொம்பத் தொலைவு. நடன ஒத்திகை எனும் பெயரில் இவர்கள் தினமும் கூடுவதும் கூத்தடிப்பதும் வாட்ஸ் ஆப்பில் பார்த்தவண்ணம் இருந்தேன். கொரோனாவின் பிடியிலிருந்த நாட்களை நினைத்துப் பார்ப்பேன். "காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்தப் பையடா", மெய் என்று மேனியை யார் சொன்னது? போன்ற தத்துவார்த்த வரிகள் நினைவில் எழும். பீதியில் மனம் பதைக்கும்.

அன்று சங்கீத். நான் நினைத்தபடி தயாராகி மாலை 6 மணிக்கெல்லாம் சென்றுவிட்டேன். 7 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பம். எல்லோரும் மெதுவாக வந்தவண்ணம் இருந்தனர். மாலதி, பானு, மஹாலக்ஷ்மி, சுமதி என எல்லோரும் வந்திருந்தனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு நேரில் பார்க்கிறேன். சிலர் கொஞ்சம் ஒல்லியாகத் தெரிந்தனர். தினமும் நீண்ட நடைப்பயணம் காரணமாக இருக்கலாம். சிலர் குண்டாகத் தெரிந்தனர். youtube உபயத்தில் வகை வகையாகச் சமைத்துச் சாப்பிட்டவர்கள் போலும். சிலர் வயது போனவர்கள் போல் தெரிந்தனர். இரண்டாண்டில் அது இயற்கை தானே. சிலர் அந்த இரண்டாண்டுகள் அப்படியே உறைந்துவிட்டனரோ என்று எண்ணவைத்தனர். அவர்களின் DNA அமைப்பு எனச் சமாதானப்படுத்திக்கொண்டேன். ஆனால் எல்லோரும் பியூட்டி பார்லர் சென்று வந்திருந்தனர் என்பது அவர்கள் போட்டிருந்த மேக்கப் மற்றும் சிகை அலங்காரத்தில் ஐயமின்றித் தெரிந்தது.

எனக்கிருந்த அதே அளவு ஆர்வம் எல்லோரிடமும் கண்டேன். பேச்சும் சிரிப்பும் என எங்கும் ஓசை. அன்பின் அலை. ஆரவாரங்கள். ஒருவரை ஒருவர் ஆரத்தழுவிக்கொண்டனர். உவகை கொண்டனர். அன்பின் வழியது உயிர்நிலை அன்றோ. என்ன இருந்தாலும் மனிதர்கள் அன்பிற்காக ஏங்கும் படைப்புகள் தான் எனத் தத்துவம் மின்னி மறைந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்திரக் காற்றை அனுபவிக்கும் சிறைக் கைதியின் மனநிலையில் எல்லோரும் இருந்தது போல் உணர்ந்தேன். நாம் குழுக்களாக வாழ்ந்தவர்கள் அல்லவா. கூட்டுக்குடும்பங்கள் சிதைந்து போய் நியூகிளியர் குடும்ப அமைப்பு வந்துவிட்டாலும் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்தும், அன்பு செய்தும் வாழ்வது தானே நிறைவான வாழ்க்கை. *200*

நாட்களில் சொந்த பந்தங்களை இழந்தபோதும், உடன்பிறப்புகள் கொரோனா நோயில் வாடிய போதும் கையாலாகாது பிரார்த்தனை செய்துகொண்டு எம்மிடம் தானே அவர்கள் துக்கத்தைப் பகிர்ந்துகொண்டனர். இனி அப்படி ஒரு துயர்மிகு காலம் யாருக்கும் வரக்கூடாது என மனதில் நினைத்துக்கொண்டேன்.

எல்லோரும் உண்டு களித்து மீண்டும் உரையாடல். கூடிக் கூடிப் பேசினோம். ஒரு சில முகாந்திரங்களுக்குப் பின் அவர்கள் முக பாவங்களில் சில மாற்றம் கண்டேன். விசித்திரமாகப் பார்த்தார்கள். சிலர் எனக்குச் சுகவீனமா என வினவினர். சிலர் எனக்கும் கணவருக்கும் ஏதும் மனக்கசப்பு உள்ளதா என விசனப்பட்டனர். சிலர் சம்பந்தமில்லாமல் என்னருகில் வந்து, குழந்தைகள் பெரியவர்களை மதிப்பதில்லை எனச் சமாதானக் குரலில் கிசுகிசுத்தனர். சிலர் பரிதாபமாகப் பார்த்தனர். பலர் என் முகத்தைப் பார்க்கவே கவலைப்பட்டனர். முதலில் அதன் காரணம் புரியவில்லை. பின்னர் சந்தர்ப்பம் கிடைத்தபோது தனித்தனியாக வந்து என்னிடம் எல்லோரும் ஒரே கேள்வியைக் கேட்டது எனக்கு எரிச்சலைத் தந்தது.

முதலில் ஒருவர் கேட்டபோது அறியாமை என நினைத்தேன். அடுத்து ஒருத்தி கேட்டபோது ஆதங்கம் என எண்ணினேன். மூன்றாவதாக மற்றொருத்தி கேட்டபோது அனுதாபம் கொண்டேன். ஆனால் சொல்லி வைத்தாற்போல் ஒவ்வொருவராகக் கேட்ட போது ஆத்திரம் அடைந்தேன். அழுகையும் வரத் தயாராக இருந்தது. சுதாரித்துக்கொண்டேன். இவர்கள் யார் என்னிடம் இப்படிக் கேட்பதற்கு. நான் ஏன் இவர்கள் நினைக்கும் விதத்தில் இருக்கவேண்டும். இவர்கள் ஏன் என்னை எடைபோடவேண்டும். யார் இவர்களுக்கு இந்த உரிமை அளித்தது. இதைத் தான் பொதுப்புத்தி என நினைத்துக்கொண்டேன். குரங்கு குல்லாத் தூக்கிப்போட்ட ஒன்றாம் வகுப்புப் பாடம் நினைவிற்கு வந்தது. மனித இனம் இன்னும் பரிணாம வளர்ச்சி அடையவே இல்லையோ எனச் சந்தேகம் எழுந்தது.

நிகழ்வு முடிந்து வரும் வழியில் என் கணவரிடம் இதைப் பற்றிச் சொல்லிப் புலம்பினேன். அவர் நக்கலாக DO OR DYE என்றார். இவர்கள் அத்தனைப்பேர் முகத்திலும் கரியைப் பூசவேண்டும் எனும் வைராக்கியத்தில் கொண்டேன்.

மறுநாள் தலைக்கு மை தடவிக் கொண்டு மெஹந்திக்குக்குச் சென்றேன்.

## *Shame, Silence, Grief, Guilt and Self Sacrifice*

**Madu Balashanmugan**

Her hands were moist and warm. Her fingers were clasped around my hand, holding on with surprising strength. The sky was dark and stormy. Raindrops rolled down the windows, temporarily blurring sections of the outside world. The air tasted metallic, tinged bitter with the smell of drugs and disinfectant. The hospital ward reeked of it. My mother shifted on the bed, her lips moving silently.

"They said she needs to stay the night". My brother was speaking. He was staring at the bank grey expanse of the wall. He still spoke English like Tamil, I noted, stressing on the first syllable of every word, like the cocking of a gun before the shot. It seemed oddly formal, speaking English when we were alone.

"Are you going to be ok by yourself?"

I nodded but didn't speak. There was nothing much to say.

I was a rescue mission, much like everything else in my mother's life. She saved me from the damp, soot blackened walls of the orphanage and the monstrosities it held within. "Why me?", I asked her then, "why me and not one of them?"

"un vizhigal natchathirangaladi", her lips curved upward. Your eyes are bright like the stars. There was violence in both of our lives; bloodshed, war crimes, murder, torture and so much more. We never spoke of it. The memories stretched out interminably between us, wedged tight like a dark, bottomless chasm that widened with time. I would wake up sometimes in the middle of the night, assaulted by memories of broken glass and bloodied hands, to find my mother seated at her desk, writing in a frenzy. I'd sit by her, listening to the soothing "thwack, thwack" of her typewriter. Sometimes I'd fall asleep like that, my face pressed to the blistering cold glass window.

"Excuse me, are you staying with the patient?" Reality broke, and I found myself scrambling for answers. A white clad nurse was standing over my mother.

"Yes", my voice broke from the lack of use. "Yes I am".

Her fingernails dug into the back of her clipboard as she started writing something down. Her pen scratched away the surface of the paper, punctuating

the silence with rhythmic screeches. The silver white glow of moonlight reflected off the ghostly fish in the tank nearby. Oxygen formed in little bubbles, spewed forth from the tiny submerged device, and floated upwards, diffusing silently into the darkness. The wind rattled the windows, urgent and insistent, like a memory that fought its way back to the surface.

We used to have fish. We had an indoor rock-pool, in the fabled place we once called home, filled with bright, multi coloured fish that darted back and forth. There were people, incessant laughter, happiness and doors and windows that were thrown wide open to let stream in through the apple green walls. It was like a rollercoaster ride that left you breathless, wanting more. My mother decided to call me “Madu”. “Madu, like honey”, she told me. “Because your words are like honey”. She found me, made me, told me who I was. My eyes were bright. My language was sweet. My temper was too short. All of these things she told me. Again and again she burnt herself just so that she can warm me by the embers. Like wounded animals, we curled into each other, serene with momentary sanity.

All of that came to an end when we lost the war. The shadows darkened, the voices became whispers, and the air grew still and heavy. I remember drawing on paper, and then rubbing it out till until it heated under my touch and tore like tissue. I knew we had to leave.
Her grip on my shoulder was painful when she steered me through the glass doors of the airport. We were being conducted irreversibly into a brand new reality. A woman, trapped outside the glass barrier, was teaching her son to wave goodbye. He waved backwards, then pinched his brows in confusion. Once again, in my mind, I started picking up pieces of shattered glass, hurting myself and not fixing the brokenness.

A hand on my shoulder broke through my haze.

“Is that your mother?” a white clad nurse. “She’s awake”. Her voice carried through the hall, echoing gently.

The dim glow of moonlight touched the bed, sweeping over my mother like the silvery threads of a cobweb. Her eyes were open. I realised I was moving, an internal momentum was driving me towards her. I had a fleeting vision of a little girl by the window. It stalled me for a fraction of a second, and then abruptly disintegrated into dust, once again leaving me empty, on the brink of realisation.

“Amma”, I called, holding her warm, wrinkled brown hands. I studied her face, searching for something to say. Her lips curved upward slightly. “Enakku onnum illa”, she croaked out. I am perfectly fine.

“Theriyum’’, I whispered. I know.

We told ourselves that every single day. We were perfectly fine. We were normal. It was normal to wake up moist with sweat, to feel the cold, metallic sting of a gun against your temple almost every night. It was normal to look at your hands under the desk in the middle of class to see if the blood stains from all those years ago were still visible. It was perfectly normal.

She pretended not to notice when I hid from her anything on the news that might trigger another episode. She hid from me anything khaki coloured with splotches of brown and green. It was their colour, those who shot men, slit their throats and let crimson blood leak out from baby pink flesh.

I swallowed, tasting bile. I looked back into the depths of her inky black eyes. “Take me home”, she was saying. “Take me back home with you”.

I wanted to ask her then if she still grieved for her loss. I wanted to know if she was still hurting inside, hurting herself, just like me. I needed to ask her why she fought for me relentlessly, even though we were not bonded by blood. I felt like screaming, crying, ending our silence once and for all.

Her eyes, I suddenly realised, were widening with fear. Her hands started trembling.
“I’ll take you home” I said instead, exhaling a breath I didn’t know I was holding. “I’ll take you home with me.” There was a distant ring of a bell. A man walking down the hallway was gently cradling his phone, speaking soothing words of comfort.

Voices, more shuffling feet, something heavy fell to the floor with a loud, metallic “clang”. The sky through the open window was tinged red, I noted. It was pink, crimson and purple, like an open wound. Dawn was breaking and we were still shrouded in darkness.

Our peace was temporary, fragile like my mother’s feeble, trembling hands. We lived in a delicate, crystalline world, held together precariously and capable of being shattered by a single motion. With time, we would shrink, dissolve into our bodies and leave without a trace like wisps of smoke. Until then, silence would keep us safe. Reckless words would cleave through our pretences and break us apart irreversibly.

At that moment, realisation slammed into me with the intensity of a duster bomb, wounding me and multiplying inside me until it filled every crevice of my mind with aftershocks. I was my mother's proudest achievement, her only anchor to sanity. I had survived violence and abuse, guided only by the firmness of her grasp. And for all of that I was meant to represent, I could never be enough. My frenzied words and half formed phrases were nothing but nonsensical musings of a child once struck dumb. I was the coalescence of her sacrifices; and for all of that, I was inadequate.

****

*Madu Balashanmugan won the prestigious "Young Writers Award" for the year 2016 presented by the Melbourne Library for this story.*

## வெற்றிடம்

**இமாம்**

இறுதியாக அந்த நாள் வந்தது. விடியற் காலை நானும் அப்பாவும் அம்மாவிடம் விடை பெற்று ஸ்ரீநகர் செல்லும் 7 மணி ரயிலைப் பிடிப்பதற்காக ஆயத்தமானோம். அப்பா முன் சீட்டில் டிரைவர் அங்கிளுக்குப் பக்கத்திலும், நான் பின்னாலும் அமர்ந்தோம். நான் திரும்பி அம்மாவை ஒருமுறை கார் கண்ணாடியூடாகப் பார்த்து கை அசைத்தேன். ஆனால் முன் இருக்கையில் இருந்த என் தந்தையின் தலை அம்மாவைப் பார்க்கத் திரும்பவில்லை. நிமிர்ந்து அமர்ந்திருந்தார். திரும்பி என்னைப் பார்க்கவோ பேசவோ இல்லை. என்னைக்கூட மறந்துவிடுங்கள். டிரைவர் அங்கிளுக்குச் சாலை விதிகள் குறித்து விரிவுரை செய்யாமல் அவரால் இருக்கவே முடியாது. இதற்கெல்லாம் அப்பாவிடம் ஓட்டுநர் உரிமம் கூட இல்லை. ஆனால் அன்று அப்படி எதுவும் நடக்கவில்லை. கார் பயணம் என்றும் இல்லாதவாறு கனமாக இருந்தது. எனது பள்ளியைத் தாண்டி கார் செல்லும்போது எனது புதிய பள்ளியைப் பற்றிய என் எண்ணங்கள் சிறகடிக்கத் துவங்கின.

நான் எனது புதிய பள்ளியைப் புகைப்படங்களில் மட்டும்தான் பார்த்திருந்தேன். சாந்தன் அண்ணா பள்ளியைப் பற்றி நிறைய விசயங்கள் சொன்னார். புதிய பள்ளிக்குச் செல்ல நான் மிக்க ஆவலாக இருந்தேன். நான் படித்த பள்ளியுடன் ஒப்பிடும்போது எனது புதிய பள்ளி மிகப்பெரியது. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தத் தமிழ் ஆசிரியர் இராசையாவிடம் இருந்து தப்பித்து விட்டேன். அவர் மனித உருவத்தில் நடமாடும் ஒரு பிசாசு என்றால் மிகையாகாது. தமிழில் எழுத்துப் பிழை இருந்தால் அவர் என் தலையை அப்படியே சாப்பிட்டிடுவார். தமிழில் 247 எழுத்துக்களில் உள்ள அனைத்து நுணுக்கங்களையும் ஒரு எட்டு வயது சிறுமியால் எப்படி ஞாபகத்தில் வைத்திருக்க முடியும்? அதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் மட்டுமே கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே புதிய பள்ளியில் நான் கெட்டிக்காரியாக இருக்கப் போகிறேன் என்ற உற்சாகம் எனக்குத் தோன்றியது. மேலும், புதுப் பள்ளியில் ஒரு நீச்சல் குளம் இருக்கிறது. அங்கு நான் நீந்தி விளையாடப் போகிறேன் என்ற எண்ணம் என்னுள் மிகுந்த உற்சாகத்தை தந்தது. இப்படிப்பட்ட மகிழ்ச்சியான எண்ணங்களோடு, அப்பாவுடன் ரயிலில் ஏறிக் கண்டி ஸ்டேஷனை வந்தடைந்தேன்.

அப்பொழுதுதான் முதன் முறையாக நான் யதார்த்தத்தை உணர ஆரம்பித்தேன். மதியம் சுமார் 2 மணியளவில் சூரியன் பிரகாசித்த போதும், குளிர் நடுக்கமாக எனக்கு இருந்தது. நானும் அப்பாவும் ஒரு டாக்ஸி பிடித்து, எங்கள் மீதி பயணத்தைத் தொடர்ந்தோம். நான் ஸ்ரீநகருக்கு இதற்கு முன்னர் வந்திருக்கிறேன். ஆனால் இந்த மாதிரியான ஒரு வளைந்த மலைப் பாதையூடாகப் பயணித்ததில்லை. ஸ்ரீநகரில் சுற்றுலாப் பகுதிகளை மட்டுமே பார்த்துவிட்டுத் திரும்பிச் சென்றிருக்கிறோம்.

வளைந்த மலைச் சாலையில் செல்லும்போது எனக்குக் காது அடைத்துவிட்டது. நான் அதை அப்பாவிடம் சொன்னபோது ஒரு பதிலும் அவரிடம் இருந்து வரவில்லை. முதலில், அவரின் காதுகளும் அடைக்கப்பட்டிருக்குமோ என்று நினைத்தேன். தாங்க முடியாமல் நான் சத்தமாகக் கத்தியபோது, அவர் திடுக்கிட்டு வேறு உலகத்திலிருந்து வந்தவர்போலத் திரும்பி என்னைப் பார்த்து, "என்ன ஆச்சு உனக்கு? நீ நல்லா இருக்கிறியா? உனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லையே?'' என்று கேட்டார். ஆனாலும் ஒரு காது வலிக்கு இத்தனை கேள்விகள் கொஞ்சம் அதிகம் தான் என்று உணர்ந்து, காது வலியையும் மீறி எனக்குச் சிரிப்பு வந்தது. "என்னப்பா, நித்திரையாகிட்டீங்களா?" என்று கேட்டேன். அவர் முதல் முறையாகத் தலையை என் பக்கம் திருப்பி, என்னை அமைதிப்படுத்தும் விதமாக என் சிறிய கைகளை எடுத்து தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டார். "இன்னும் கொஞ்ச நேரத்தில் பள்ளிக்கூடம் வந்திடும்," என்று அன்புடன் சொன்னார். அவர் அப்படி எனக்கு ஆறுதல் சொன்னபோதும், கண்கள் எட்டிய தூரம் வரை, என் கற்பனையில் இருந்த அந்தப் பெரிய பள்ளி ஒன்று இந்த இடத்தில் இருப்பதற்கான எவ்வித அடையாளத்தையும் என்னால் யூகிக்க முடியவில்லை.

இறுதியாக டாக்சி ஒரு பெரிய கேட் முன் நின்றது. நாங்கள் யார் என்பதைச் சோதிக்கக் காவலாளி காரை நோக்கி வந்தார். அவர் வேறு மொழியில் பேசினார். அப்போது மீண்டும் எனக்குள் ஒரு பதற்றம் துவங்கியது. அப்பாவோ அவருக்கு நிதானமாகப் பதிலளித்து, பையிலிருந்து சில ஆவணங்களைக் காண்பிப்பதற்காகத் தன் கைகளை என் கையிலிருந்து விடுவித்தார். ஆனால் அப்பாவின் கைகளை விட நான் தயாராக இல்லை. அவர் கைகளை முன்பைவிட இறுக்கமாகப் பிடித்துக்கொள்ள விரும்பினேன். எனக்கு அந்த வயதில், அப்போதே எல்லாம் கடந்து போய்விட்டது என்று புரியவில்லை!

அந்தப் பெரிய வாயில் வழியாக உள்ளே நுழையும்போதே, இது என் வாழ்க்கையையே புரட்டிப்போடப் போகுது என்று தெரிந்திருந்தால், நான் காரை விட்டு இறங்கி ஓடியே போயிருப்பேன். அம்மா சொல்லியிருக்கிறார், எனக்கு இரண்டு வயதாக இருந்தபோது எனக்கு யானை பொம்மை என்றால் ரொம்பப் பிடிக்குமாம். நான் எல்லோரிடமும் யானை பொம்மை கேட்பேனாம். எதைக் கேட்டாலும் 'யானை, யானை' என்பேனாம். ஆகவே எனக்கு மூன்று வயதாக இருக்கும் போது அம்மாவும் அப்பாவும் என்னை ஒரு யானையைப் பார்க்க அழைத்துச் சென்றார்களாம். அந்தப் பெரிய மிருகத்தைப் பார்த்ததும் நான் பயந்து அழத் தொடங்கிவிட்டேனாம். அது போலத்தான் இன்றும். இவ்வளவு நேரமும் நான் கற்பனை செய்துகொண்டிருந்த பிரமாண்டமான பள்ளி வளாகத்துக்கு வந்தும், நான் எவ்விதச் சந்தோசமும் அடையவில்லை. சந்தோசம் அடைய என்ன இருக்கிறது இங்கே என்று நினைத்தேன்.

டாக்ஸி ஐந்து நிமிடங்களில் கற்களால் அமைக்கப்பட்ட தேவாலயத்தைக் கடந்து, பல பள்ளிக் கட்டிடங்களையும், மைதானங்களையும் கடந்து, இறுதியாக ஒரு கட்டிடத்தின் முன் வந்து நின்றது. இங்கே ஒரு அழகான கன்னியாஸ்திரி சிரித்த

முகத்துடன் எங்கள் வருகைக்காகக் காத்து நின்றார். அப்பா அவரை வணங்கி, டாக்ஸியில் இருந்து என் பொருட்களை இறக்க ஆரம்பித்தார். ஆம் நான் இந்தப் பள்ளியில் தான் இன்று தொட்டுப் படிக்கப் போகிறேன்.

நான் அப்பாவைப் பிரிந்து என் வாழ்வில் தனியாக வாழவேண்டும் என்ற எண்ணமே என்னுள் ஒரு நடுக்கத்தைப் பாய்ச்சியது. அப்போதெல்லாம் நான் ரொம்ப மெலிவாக இருப்பேன். என் சுருண்ட கூந்தல் என் எடையில் பாதி இருக்கும் போலத் தோன்றும் என்று பழைய பள்ளிக்கூடத்தில் சிலர் சொல்லிச் சிரிப்பார்கள். நான் நடுங்குவதை அவதானித்த கன்னியாஸ்திரி என் அருகில் வந்து “நீங்கள் ஏன் உங்கள் ஜம்பரை அணியக்கூடாது? இங்கு சூரியன் மறையும்போது, பனிக்குளிர்ச்சியாக இருக்கும்" என்று அன்பாகக் கூறினார். அவர் நல்லவராக இருந்தாலும், நான் உடனேயே அப்பாவைத் தேடத் துவங்கினேன். அப்போது மாலை 4 மணிக்கே இருளத்தொடங்கியது என்று உணர்ந்தேன். நாங்கள் வந்த சாலையைத் திடீரென மூடு பனி மறைத்துவிட்டது. டாக்ஸியின் மறுபக்கம் நின்ற அப்பாவைக் காணாமல் என் கண்கள் பதறத் துவங்கின. அவரைக் கண்டதும் நான் அவரைக் கட்டிப்பிடித்துத் திரும்ப வீட்டிற்கே செல்லலாம் என்று நினைத்தேன். ஆம் எனக்கு இது ஒன்றும் வேண்டாம், நான் வீட்டுக்குப் போகப் போகிறேன் என்று கத்த நினைத்தேன். நினைப்பதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

திடீரென்று எல்லாம் வேகமாக நகர்வதாக உணர்ந்தேன். கன்னியாஸ்திரி என் அறையைக் காட்டினார். அப்பா என் பொருட்களை எடுத்து அறையில் அடுக்கி வைக்க எனக்கு உதவினார். எனது புதிய தோழிகள் ஹம்சா, சச்சினி, மற்றும் லயோலா அறிமுகமானார்கள். நான் அவர்கள் முகத்தைப் பார்த்தேன். எல்லாமே வெறுமையாக, இயந்திரத்தனமாக நடந்துகொண்டிருந்தது போலத் தோன்றியது. இறுதியாக அந்தத் தருணம் வந்தது. "இனி உங்கள் மகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவர் எங்கள் பொறுப்பு. நீங்கள் இப்போ அவரிடம் இருந்து விடைபெற்றால் தான், கடைசி ரயிலைப் பிடிக்கலாம்,” என்றார் கன்னியாஸ்திரி.

அப்பா அவரை புன்முறுவலுடன் பார்த்து, என் முன் வந்து முழங்காலில் அமர்ந்தார். தன் முகத்தை என் முகத்தின் மட்டத்தில் வைத்து, என் கண்களை நேராகப் பார்த்து, "நீயும் நானும் அம்மாவுக்காகத் தான் இதைச் செய்கிறோம். இந்த ஏற்பாடு கொஞ்சக் காலத்துக்குத் தான். அம்மா குணம் அடைந்ததும், நானே வந்து உன்னைக்கூட்டிக்கொண்டு போவேன். எல்லாம் திரும்பவும் பழையபடி ஆகிடும். அதுவரைக்கும் நீ படிப்பில் கவனம் செலுத்து. இங்கே உன்னை நல்ல வடிவா, பாதுகாப்பா பாப்பினம். நீ விளையாட விரும்பும் எல்லா விளையாட்டுகளும் இங்கே சொல்லித்தருவினம். எல்லாம் உன் நன்மைக்காகத்தான். பின்னர் ஒரு காலத்தில் நீ இங்கே படித்ததை நினைச்சு பெருமைப்படுவாய். நீ நல்லா படிச்சு பெரிய ஆளாக வந்தால், அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அதைவிட வேறு என்ன சந்தோசம் இருக்கு?” இப்படி அவர் சொல்லும்போதே அப்பாவின் குரல் கரகரக்கத் தொடங்கியது. உடனே அவர் என்னை மிகவும் இறுக்கமாக அணைத்துக்கொண்டு ஒரு வினாடி நின்றார். மீண்டும் என்னைச் சுத்தியிருந்த தன் கைகளை விடுவித்து,

திரும்பிப் பாராமல் டாக்ஸியை நோக்கி நடந்தார். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கு. நான் என்னால் முடிந்த வரையிலும் அவரை இறுக்கி கட்டிப்பிடித்துக் கொண்டுதான் இருந்தேன். ஆனாலும் அப்பா எப்போதுமே என்னைவிடப் பலசாலிதான். நான் தோற்றுவிட்டேன்.

நாங்கள் ஸ்டேஷனில் இறங்கியதிலிருந்து நான் அடைத்து வைத்திருந்த கண்ணீரை இதற்கு மேலேயும் கட்டுப்படுத்த என்னால் முடியவில்லை. எல்லாமே வெடித்து ஓடியது. நான் சத்தம் போட்டு அழுதேன். மற்றவர்கள் என்னைப் பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரிந்தும், அதற்காக இந்தக் கண்ணீர் வெள்ளத்தை நான் கட்டுப்படுத்த இயலவில்லை. நான் ‘அப்பா. அப்பா’ என்று கத்தினேன். ஆனால் அவர் என்னிடமிருந்து விலகி நடந்து, மீண்டும் டக்ஸியில் ஏறினார். என்னுள் ஏற்பட்ட அந்த தீராத அழுகையை, கவலையை, கண்டுணர்ந்த அந்த அன்பான கன்னியாஸ்திரி, அப்பா என் பார்வையிலிருந்து மறையும் வரை, என் பின்னால் இருந்து என்னை அணைத்துக் கொண்டார். இருவரும் சிறிது நேரம் அப்படியே நின்றோம். எஞ்சிய நாள் முழுதும் அவர் என்னுடன்தான் இருந்தார்.

அப்பாவை இன்னொரு முறை பார்க்க மனம் ஏங்கியது. ஆரம்பத்தில் இரவுகள் எனக்கு மிகுந்த பயத்தைக் கொடுத்தன. என் மனம் அப்பாவைத் தாண்டிச் செல்ல மறுத்தது. மீண்டும் மீண்டும் மனது அவருடன் இருக்க வேண்டும் என்றே விரும்பியது. பகலில் படிப்பு நேரம் தவிர, நான் விளையாட்டில் ஈடுபட்டபடியால், இரவில் இலகுவாகத் தூங்க முடிந்தது எனக்கு. ஆகவே பகலில் அதிக நேரத்தை விளையாட்டில் செலவிட என்னைத் தூண்டியது. பரபரப்பான அட்டவணையுடன் ஒரு வருடம் விரைவாக ஓடிச் சென்றது. ஹம்சா, சச்சினி மற்றும் லயோலா எனது நல்ல நண்பிகள் ஆனார்கள். பெரும்பாலான நாட்கள் நான் மகிழ்ச்சியாகத்தான் இருந்தேன். ஆனாலும் என் ஆழ்மனதில் விரைவில் என் பெற்றோரிடம் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. எனது பழைய பள்ளியிலேயே மீண்டும் சேரவேண்டும் என்றெல்லாம் யோசித்தேன். இந்தப் புதுப் பள்ளியில் எல்லோரும் என்னைவிட நல்லா ஆங்கிலம் பேசுவதை நான் உணர்ந்ததிலோ என்னவோ, தமிழ் கடினமாக இருந்தாலும் ஆங்கிலத்தில் எல்லாப் பாடங்களையும் படிப்பது அதைவிட மிகவும் கடினமாகத் தெரிந்தது எனக்கு.

கோடை பள்ளி விடுமுறைக்கு அப்பா என்னை அழைத்துச் செல்ல வருவார் என்ற மகிழ்ச்சி எனக்குள் ஈஸ்ட்டர் விடுமுறைக்கு முன்னரே தொடங்கியது. ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், அப்பா ஒரு மாதத்துக்கு முன்பே அறிவிப்பு இல்லாமல் வந்து நின்றார். நான் அப்பாவைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். அதைவிட அதிகமாக மகிழ்ச்சியடைந்தேன். அவரது அறிவிப்பின்றிய வருகை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அம்மா குணமடைந்து விட்டார். அதனால்தான் என்னை மீண்டும் அழைத்துச் செல்ல வந்திருக்கிறார் என்று ஆனந்தம் அடைந்தேன். ஆனால் என் வாழ்க்கையின் நிகழ்வுகள் என் எண்ணங்களுக்கு நேர்மாறாக நடக்கின்றன. அப்பா வந்தது, அம்மாவின் இறுதிச் சடங்கிற்கு என்னை அழைத்துச் செல்ல என்று தெரிந்தபோது தாங்கொணா அதிர்ச்சியும் சோகமும் அடைந்தேன்.

அப்பாக்கள் பொதுவாகப் பெண் குழந்தைகள் மீது அதீத அன்பு கொண்டிருப்பதானாலோ என்னவோ, மகள்களுக்கும் அம்மாவைவிட அப்பாவிடம் அன்பு சற்று அதிகம். அதில் நான் மட்டும் விதிவிலக்கா? குழந்தையாக இருந்ததிலிருந்தே நான் அப்பாவுடன் ஒட்டிக்கொண்டே இருப்பேன். எனக்குப் பயங்கரமான கனவுகள் வந்தால், நான் என் பெற்றோர் அறைக்கு ஓடிச் சென்று அவர்களுக்கு நடுவில் தூங்குவேன். அப்பாவைக் கட்டிப்பிடித்தபடி தூங்குவேன்! இப்போது நினைக்கும்போது, என் சிறு பிராயத்திலிருந்தே என் உள் மனசு எனக்கும் அம்மாவுக்குமான தொடர்பு நீண்ட காலமானதல்ல என்று உணர்த்தியிருக்கிறது போலும். அதுதான் என்னவோ, நான் அம்மாவுக்குக் கடைசியாக கார் ஜன்னல் வழியாக கை அசைத்த தருணம்கூட அம்மாவின் கண்களில் எதுவுமே எனக்குத் தெரியவில்லையோ. இல்லை. தெரிந்துகொள்ள நான் விரும்பவில்லையோ? ஒருவேளை நான் அவரை அப்பாவை போல் ஆழமாகப் பார்த்திருந்தால் இன்று அம்மா உயிருடன் இருந்திருப்பாரோ என்று எண்ணத் தோன்றியது எனக்கு. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். புதுப் பள்ளி நான் சிந்திக்கும் விதத்தில் ஏற்கனவே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது.

எல்லாக் காரியங்கள் முடிந்தும் நான் நான்கு மாதங்கள் வீட்டிலேயே இருந்தேன். மீண்டும் பள்ளிக்குச் சென்று தங்கிப் படிக்க எனக்கு விருப்பம் இல்லை. அதுவும் அப்பாவை வீட்டில் தனியே விட்டுச் செல்வதை என்னால் ஏற்க முடியவில்லை. ஆகவே திரும்பும் நேரம் வந்ததும், நான் வீட்டிலேயே இருக்கலாமா என்று அப்பாவிடம் கேட்டேன். ஆனால் நான் ஒரு பொம்பளப்பிள்ளை என்ற காரணத்தால், அம்மா மாதிரி தன்னால் என்னைப் பார்த்துக்கொள்ள முடியாது என்று அப்பா ஆணித்தரமாக நம்பினார். குறிப்பாக அம்மா நம்முடன் இல்லாத போது நல்லபடியா, கெட்டிக்காரியா என்னை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக நின்றார். அவர் விருப்பப்படி திரும்பவும் பள்ளியில் தங்கிப் படிக்கச் சென்றேன்.

மீண்டும் ஆரம்பத்திலிருந்து எல்லா உணர்வுகளும் ஒன்றன் பின் ஒன்றாக வரத் தொடங்கின. அதனால் அன்று முதல், பள்ளிப் படிப்பை முடிக்கும் வரை, விடுமுறையில் நான் வீட்டிற்குச் செல்வதில்லை. மாறாக, விளையாட்டு மீது என் முழுக் கவனத்தையும் செலுத்தினேன். விளையாட்டு தொடர்பான போட்டிகள், மற்றும் சிறப்புப் பயிற்சிகளில் மூழ்கினேன். இன்று உங்கள் முன் சர்வதேச நீச்சல் வீராங்கனையாக நிற்கிறேன்.

***Bridging Shores***

***Aisha Rahman***

Malar's eyes welled up with tears as she stood at the edge of the Yarra River in Melbourne. The sun was setting, painting the sky in hues of orange and pink, but her thoughts travelled back to her hometown of Batticaloa, Sri Lanka. It had been years since she left her beloved coastal town, seeking a better life in Australia.

In her thirties, Malar had come a long way from the timid girl she once was. She had faced numerous challenges as a Tamil migrant in a foreign land but also found strength within herself that she never knew existed.

Malar's journey to Melbourne had not been an easy one. Leaving behind her family and friends had been heart-wrenching, but she was determined to create a life where she could escape the shadows of a long-drawn civil war and find peace. She had arrived in Australia with hope in her heart and a longing to embrace the opportunities this new land had to offer.

As the days turned into months, Malar discovered the multicultural beauty of Melbourne. It was a city that celebrated diversity, and she found comfort in the presence of other Tamil expatriates who had also made it their home. Malar quickly adapted to the Australian way of life, immersing herself in the culture and making friends who soon became her second family.

Her journey to integration wasn't without its share of challenges. The initial language barrier made it difficult for her to communicate effectively, but she was determined to learn English, and with perseverance, she became fluent. This opened up new doors for her professionally and socially, as she found a job and made even more friends from different walks of life.

As the years passed, Malar's nostalgia for Batticaloa never faded, but she had grown to appreciate the opportunities Melbourne had offered her. She had learned to balance the past and the present, cherishing her memories while embracing her new life.

One evening, while sitting by the Yarra River, Malar received a video call from her family back in Batticaloa. Their faces lit up the screen as they excitedly shared the news of a family gathering back home. Malar felt a surge of emotion as she saw her loved ones come together, but she also realised how grateful she was for the life she had built in Melbourne.

With a smile on her face and tears of joy in her eyes, Malar knew she was blessed to have two homes: one that held her roots and the other that gave her wings to fly. She vowed to continue honouring her Tamil heritage while embracing the multicultural spirit of Melbourne.


As the sun dipped below the horizon, Malar whispered a silent thank you to the universe for guiding her on this journey of self-discovery. With hope in her heart and memories in her pocket, she walked away from the Yarra River, ready to face whatever the future held, knowing she was a Tamil migrant who had found her place in Melbourne.


## ChatGPT சொன்ன கதை - Bridging Shores

முன்னைய பக்கத்தில் வெளியாகியிருக்கும் கதையை எழுதிய ஆயிஷா ரகுமான் யார் என்ற குழப்பம் இளவேனில் வாசகர்களுக்கு எழக்கூடும். மேற் சொன்ன "Bridging Shores" என்ற கதையையும் அதை எழுதியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் 'ஆயிஷா ரகுமான்' என்ற எழுத்தாளரின் பெயரும் ஒரு செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) செயலியின் புனைவு என்று சொன்னால் நம்பமுடியாது அல்லவா?

இக்கதையை எழுதியது ChatGPT என்ற, இன்றைக்கு உலகம் முழுதும் பரவலாகப் பயன்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவு செயலிதான். கண்டிக்கு ஐந்து நாள் சுற்றுப்பயணத்தைத் தயாரித்துக்கொடுப்பது, வேலைக்கு விடுமுறைக் கடிதம் எழுதுவது, காதல் செய்திகளை வடிவமைப்பது, கணக்கியல் பற்றிய சந்தேகங்களைத் தீர்ப்பது முதல் மிகச் சிக்கலான மென்பொருள் தீர்வுகளைக் கொடுப்பதுவரை இந்த ChatGPTயால் ஆகாதது என்று ஒன்றில்லை.

ஒரு இலக்கியச் சமூக சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதி அனுப்புமாறு 'ChatGPT' கேட்டுப்பார்க்கலாம் என்று நகைச்சுவையாக இதனைச் செய்துபார்த்தோம்.







என்ன இது. செயற்கை நுண்ணறிவு இலக்கியத்தையும் கையில் எடுத்துவிட்டால் எழுத்தாளர்கள் என்ன ஆவார்கள் என்ற கேள்வி எழுகிறதல்லவா? அந்த அச்சம் தேவையில்லை. இந்தக் கதையையே நன்றாகக் கவனித்துப்பாருங்கள். நமக்குத் தெரியாத ஒன்றை இது எழுதவில்லை. இணையத்தில் கிடைக்கும் ஏராளமான புலம்பெயர் கதைகளை உள்வாங்கி, அவற்றிலிருந்து சில விசயங்களை எடுத்துக் கோர்த்து இந்தக் கதையை அது எழுதியிருக்கிறது.

ஆனால் ஒரு இலக்கியம் அப்படி உருவாவதில்லை. எழுத்தாளர் என்பவர் சமூகம் பற்றி, வாழ்வு பற்றி, மனிதர்கள் பற்றி, தத்துவங்கள் பற்றி ஒரு புதிய உலகத்தைத் திறந்துகாட்டுபவர். நமக்குத் தெரிந்த மனிதர்களாக இருந்தாலும் நாம் பயணித்த இடங்களாக இருந்தாலும் நமக்கு நேர்ந்த அனுபவங்களாகவே அவை இருந்தாலும் ஒரு தேர்ந்த எழுத்தாளர் அவற்றினூடாக ஒரு புதிய அனுபவத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்த வல்லவர். இணையத்தில் கிடப்பவற்றில் பொறுக்கியெடுத்துத் தொகுப்பவர் அல்ல எழுத்தாளர். ஒரு விசயம் தன்னை அலைக்கழிக்கும்போது அது பொறுக்கமுடியாமல் எழுதித்தீர்ப்பவர் அவர்.

ChatGPTக்கு சிறந்த மொழி வசப்படலாம். நமக்குத் தெரியாத பிறமொழிக் கதைகளைக்கூட அது சற்றுத் திருத்திப் பிரதி செய்து கொடுக்கவும் செய்யும். ஆனால் அதனால் புதிதாக ஒன்றைப் படைப்பது என்பது முடியாத காரியம்.

அதனால் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம்பற்றி அச்சம் தேவையில்லை. நாம் நம் படைப்பூக்கத்தில் கவனமெடுத்தால், நாம் நம் தனித்துவங்கள்மீது அக்கறைகொண்டால், யாரையும் எதையும் பிரதி பண்ணாது, நமக்குப் பிடித்ததை, நம் தேடலைத் தீவிரமாக்கினால், தொழில்நுட்பத்தையும் நமக்குத் துணையாக மாற்ற இயலும்.


THE MANGO TREE
Catering Service
WE DO IT ALL:
BIRTHDAY PARTIES, ANNIVERSARIES, WEDDINGS, PUBERTY CEREMONIES & SPECIAL OCCASIONS.
Special rates available for
"ARANGETRAM" FUNCTIONS
WE CAN MATCH ANY GENUINE QUOTE !!
FOR MORE DETAILS CONTACT:
12 Clow Street, Dandenong Vic 3175
(03) 9791 1111 / 0403 058 808